# உழைப்பால் உயர்ந்த ஏழை

UNIVERSITY LIBRARY
31 MAY 1957
MADRAS.

பகீரதன்

UNIVERSITY EXTENSION
LIBRARY, MADURAI

UNIVERSITY EXTENSION LIBRARY
16 DEC 1957
MADURAI

கலைஞன் பதிப்பகம்

தியாகராயநகர் :: சென்னை-17

முதற் பதிப்பு மே '56
பதிப்புரிமை பெற்றது.

ரூபாய் இரண்டேகால்

1364
O3113
J6

தாரா அச்சகம்,
நாகப்பட்டினம்.

# முன்னுரை

## டாக்டர் மு. வரதராசன்.

**நா**வல் என்பது உரிமையும் பொறுப்பும் மிகுந்த கலையாகும். உரிமை எவ்வகையில் என்ருல், ஆசிரியர் படைக்க விரும்பும் கற்பனையை மெல்ல மெல்லப் படிப் படியாகப் படைத்துச் செல்லலாம்; அந்தக் கற்பனை யுலகம் இடத்தாலும் காலத்தாலும் வரையறை இல்லாத தாய் விரிவடையச் செய்யலாம். பொறுப்பு எவ்வகையில் என்ருல், அந்தக் கற்பனையில் வந்து வாழும் மாந்தர் உயிர்ப் பண்பு உள்ளவர்களாக, காண்பவர் நெஞ்சில் மிகத் தெளிவாகத் தோன்ற வல்லவர்களாக இருக்க வேண்டும்.

'கல்கி' உதவி ஆசிரியர் திரு **கி. மகாலிங்கம்—** **"பகீரதன்"** — அவர்கள் இந்த உரிமையும் பொறுப்பும் புலப்பட நல்லதொரு கற்பனையைப் படைத்துள்ளார். உழைப்பால் உயர்ந்த ஏழை, வள்ளல் வேலனுகக் காட்சி அளிக்கச் செய்துள்ளார். வேலனின் பாட்டன் நடேசன் நம் நெஞ்சைவிட்டு நீங்காத நல்ல உழவன். வேலனின் காதலி பண்புமிக்க நங்கை. இவர்களின் வாழ்க்கைக்கு இடையிடையே வந்து உதவுவோர் சிலர்; ஊறு விளைப் பவர் சிலர்; சின்ன கிராம வாழ்க்கையில் வயல் வெளி யில் தொடங்கிய உழைப்பு ஏமாற்றமடைந்து, பெரிய நகரத்தில் தொழிற்சாலையில் சிறப்படைகிறது. உழவர் வாழ்க்கையிலும் தொழிலாளர் வாழ்க்கையிலும் நூலா சிரியருக்கு உள்ள அனுபவம் நன்கு விளங்குகிறது. தொழி லாளர்களின் அறியாமையும் பொருமையும் அவர்களின் முன்னேற்றத்துக்கு இடையூருக இருப்பதையும், அவர் களைப்பற்றிச் சிறிதும் கவலைப்படாத செல்வர்கள் இரக்க மற்று ஆடம்பரத்தோடு வாழ்வதையும் அங்கங்கே காண் கிருேம். ஆனல் உண்மையான உழைப்பு உழைப்பாளி களை உயர்த்த வல்லது என்ற நம்பிக்கையை இறுதியில் பெறுகின்ருேம்.

சில பகுதிகளைப் படிப்பவர்கள் அவற்றைத் தம் சொந்த அனுபவங்களாகவே உணரக்கூடும். ஆனல் வேல னைப்போல் வாழ்வில் வெற்றி பெறக் கூடிய உழைப்பாளி

சமூகத்தில் எத்தனை பேர் இருக்க முடியும்? திக்கற்றுத் தெருவில் திரிந்த வேலன் எத்தனையோ பாடுபட்டு வேலைக்கு அலைகிறான். பல நாள் பட்டினி கிடக்கிறான். சில இடங்களில் வேலை கிடைக்கிறது. அதிலிருந்து காலம் தள்ள முடியாமல் விலகுகிறான். கடைசியில் ஒரு தொழிற்சாலையில் மூன்று ரூபாய் தினக்கூலி உள்ள வேலையைப் பெறுகிறான். கடற்கரையில் ஒரு பெண்ணின் உயிரைக் காப்பாற்றுகிறான். அவனுடைய நல்ல இதயத்தைக் கண்ட வேலம்மாள் என்ற அந்த உத்தமப் பெண்மணி அவன் காதல் மனைவியாகிறாள். வேலம்மாளின் தாய் தான் நோய்வாய்பட்ட போது உதவி செய்த அயலான் ஒருவனுக்கு தன் சொத்தில் பாதியை எழுதி வைக்கிறாள்; மற்றப் பாதியை உரிமையாக உடைய அவளுடைய மகள் வேலம்மாள் தான் காதலித்த வேலனை மணந்து கொள்வதற்காக அதையும் அந்த அயாலானுக்கே கொடுத்து விட்டுத் தாய் வீட்டிலிருந்து விடுதலை பெறுகிறாள். கொடியவனாகிய அந்த அயலான் இவ்வாறு சொத்தைக் கவர்ந்த பிறகும், தம் திருமணத்தை அவன் வந்திருந்து நடத்த வேண்டும் என்று விரும்புகின்றனர் வேலம்மாளும் வேலனும். அந்தக் கொடியவனும், பெற்ற செல்வம் போதும் என்று வேலம்மாளை விட்டு விடுகிறான். இந்தப் பகுதிகளைப் படிக்கும்போது கற்பனையுலகம் நல்ல உலகமாகத் தோன்றுகிறது. கஷ்டத்திலிருந்து விடுபட விரும்பும் எல்லாருடைய வாழ்க்கையிலும் இப்படிப்பட்ட சம்பவங்களும், மனமாறுதல்களும் ஏற்படக் கூடாதா என்று எண்ணத் தோன்றுகிறது.

கதையின் தொடக்கமும் முடிவும் கதை கூறும் போக்கும் இடையிடையே கட்டபொம்மன் கதை முதலியவை இடம் பெறும் முறையும் இனிமையாக உள்ளன. **'பகீரதன்'** தமிழ் நடையைப்பற்றி ஒரு வார்த்தை. தங்குதடை இல்லாமல் செல்லும் இயல்பான தமிழ் நடை, தெளிந்து ஓடும் ஊற்று நீர் போல் உள்ளது.

வாழ்க, உழைப்பால் உயர்ந்த ஏழை!

லக்ஷ்மிபுரம், சென்னை,
10—5—56.

**மு. வரதராசன்.**

# மனிதன் எப்படி உயர்கிறன்?

MADURAI

மனிதன் உழைப்பினுல் உயர்கிறன்; மனிதன் வீரதீரங்களினுல் உயர்கிறன்; தன்னடக்கத்தினுல் உயர்கிறன்; தன்னலமற்றுச் சமூகத்துக்கும் தேசத்துக்கும் தொண்டு செய்வதினுல் உயர்கிறன்; இடைவிடாத முயற்சியினுல் உயர்கிறன்; தளராத ஊக்கத்தினுல் உயர்கிறன்; அன்பினுல் உயர்கிறன்; ஆண்மையினுல் உயர்கிறன்; மலை போன்ற கஷ்டங்கள் வந்த போதிலும் மனம் தளராமல் மலையிலும் பெரிய பிரயத்தனங்கள் செய்து அந்தக் கஷ்டங்களை வெற்றி கொள்வதினுல் உயர்கிறன்.

இதுமாதிரி, மனிதன் என்னென்ன வழிகளில் உயர்கிறன் என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் "உழைப்பால் உயர்ந்த ஏழை" என்ற கதையை எழுதினேன். இந்தக் கதையில் ஒவ்வொரு காட்சியிலும் அதை உணர்த்த முயன்றிருக்கிறேன்; ஒவ்வொரு பாத்திரத்தின் மூலமாகவும் அதைக் காட்டப் பார்த்திருக்கிறேன்; பாத்திரங்கள் பேசும் ஒவ்வொரு வார்த்தையிலும் அதை விளக்கியிருக்கிறேன்.

இந்தக் கதையில் வரும் சம்பவங்கள் கற்பனை உலகில் மட்டுமல்ல, ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் நிகழக்கூடியதுதான். இதற்குத் தன்னம்பிக்கையுடன் கூடிய தளராத உழைப்பு வேண்டும். உலகிலேயே மிகப் பலம் வாய்ந்த சக்தி தன்னம்பிக்கை ஒன்றுதான். அதை எவ்வளவுக்கு எவ்வளவு நல்ல முறையில் வளர்த்துக் கொள்கிருேமோ அவ்வளவுக்கு அவ்வளவு வாழ்க்கையில் உயரலாம் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. தன்னம்பிக்கையுடன் கூடிய உழைப்பை நியாயமான வழிகளிலும், காலம் பார்த்து அறிவுத் திறமையுடன் உபயோகப்படுத்தத் தெரிந்து கொள்ள வேண்டும். இதில்தான் உழைப்பின் பலனே இருக்கிறது.

*　　　*　　　*

உழைப்பின் பெருமையை உணர்த்துவதற்கு அல்லும் பகலும் பாடுபட்டவர் பேராசிரியர் கல்கி திரு ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள். ஊருக்கு உபதேசம் செய்வதுடன் நின்று விடாமல் தம்முடைய வாழ்க்கையிலும் கடைப்

பிடித்துக் காட்டியவர். தன்னம்பிக்கையுடன் கூடிய உழைப்பின் மூலமாக உயர்ந்த பேராசிரியர் கல்கி அவர்கள் "உழைப்பால் உயர்ந்த ஏழை" கல்கியில் வெளிவந்து முடிந்தவுடன் என்னைக் கூப்பிட்டு "தமிழ் நவீனங்களில் புது உத்தியுடன் கூடிய கருத்து நிறைந்த கதை உழைப்பால் உயர்ந்த ஏழை; இது போன்ற கதைகள்தான் நாட்டுக்குத் தேவையானது, என்றும் புகழுடன் நிற்கக் கூடிய அருமையான கதை" என்று கூறி பாராட்டினார். இவ்வாறு பேராசிரியர் கல்கி அவர்களின் பாராட்டைப் பெற்றதையே பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன்.

வளரும் தமிழைக் கண்டு உளம் பூரிக்கும் உயர்ந்த பண்பு படைத்த தமிழ் இதயம் கொண்டவர் டாக்டர் மு **வரதராசன்** அவர்கள். அவர் இந்த நூலுக்கு அருமையான முன்னுரை தந்திருக்கிறார். அவருடைய அன்புக்கு என் நன்றி.

கல்கியில் வெளியான இந்தக் கதையைப் புத்தக உருவில் வெளியிடுவதற்கு மிகுந்த உற்சாகத்துடன் அனுமதி தந்த கல்கி மானேஜிங் டைரக்டர் திரு **சதாசிவம்** அவர்களுக்கு என்னுடைய இதயம் கலந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

கலைஞன் பதிப்பகத்தின் நிர்வாகிகள் திரு **தோ.ந. வீரராகவன்**, திரு **க. மாசிலாமணி** இருவரும் இந்தப் புத்தகத்தைச் சிறந்த முறையில் கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு என் சார்பாகவும் வாசக நேயர்கள் சார்பாகவும் நன்றி கூறுகிறேன்.

ஷெனாய் நகரம், சென்னை-30
10—5—56.

பகீரதன்.

# பதிப்புரை

திரு **பகீரதன்** அவர்கள் சிறந்த லட்சிய எழுத்தாளர்; உயர்ந்த நோக்கம் படைத்தவர்; மந்திரத்தாலோ தந்திரத்தாலோ மனிதன் உயர முடியாது; உழைத்து உழைத்து உயர வேண்டும். உயர்ந்து நிற்கும் ஒவ்வொரு நாடும் உழைப்பின் மேன்மையாலேயே சிறந்து விளங்குகின்றன என்ற உண்மையை உணர்ந்து, உழைப்புக்கு உயர்வு தந்து அதை கதை மூலம் வெகு அழகாக சுவை குன்ருமல் நமக்குத் தந்திருக்கிருர்.

இன்பத்துறையில் எண்ணற்ற நூல்கள் மலிந்து வெளி வந்து கொண்டிருக்கும் வேளையில் உள்ளத்தை உயர்த்தி உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்து ஒரு புதுமையான நவீனத்தை தமிழ் மக்களுக்கு அளித்திருக்கிருர் திரு **பகீரதன்.**

இதுபோன்று நாட்டு நலத்தை நோக்கமாகக் கொண்டு அதில் பாடு படும் பாட்டாளிகளின் உயர்வையே பிரதானமாகக் கருதி இன்னும் எண்ணற்ற நூல்கள் தமிழிலே வெளி வர வேண்டும்.

இந்த "உழைப்பால் உயர்ந்த ஏழை" என்ற நூலை நாங்கள் அச்சிடப்போவதாக நண்பர் ஒருவரிடம் சொன்ன போது அவர் மிகவும் மகிழ்ந்து "இந்த நூல் நோபல் பரிசு பெற்ற **பேர்ள் எஸ். பக்** *(Pearl S. Buck)* என்ற ஆசிரியை சீன தேசத்து மக்களின் வாழ்க்கையை சித்தரித்து எழுதிய 'நல்ல பூமி' *(Good Earth)* என்ற புத்தகத்துக்கு சமமானது" என்ருர்.

திரு **பகீரதன்** அவர்கள் தமிழ் நாட்டில் பிறந்தவர். பிறந்த மண்ணின் வாசனையும், அதில் உழலும் ஏழை எளியவர்களின் வாழ்க்கையையும் அவர் கதையில் நமக்கு அப்படியே படம் பிடித்துக் காட்டுகிருர்.

இந்த உயர்தரமான நூலுக்கு டாக்டர் மு. **வரதராசன்** அவர்கள் அன்புடன் முன்னுரை வழங்கியிருக்கிருர்கள்.

கல்கி காரியாலய மானேஜிங் டைரக்டர் திரு **சதாசிவம்** அவர்கள் கல்கியில் வெளி வந்த இதனை நூல் வடிவாக வெளியிட அனுமதித்துள்ளார்கள்.

அன்பர் திரு **மணியம்** அவர்கள் நாங்கள் வெளியிடும் புத்தகங்களுக்கு அழகழகாய் ஓவியம் எழுதி உதவியுள்ளார்கள்.

இம் மூவருக்கும் தமிழ் மக்கள் சார்பாக எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கலைஞன் பதிப்பகம்,
தியாகராயநகர், சென்னை-17.

க. மாசிலாமணி.

## 'பகீரதன்' எழுதிய நூல்கள்

| | |
|---|---|
| தேன்மொழியாள் | ரூ. 3 80 |
| உழைப்பால் உயர்ந்த ஏழை | ரூ. 2 40 |
| முல்லைவனத்து மோகினி | ரூ. 1 80 |
| துயிலினி | ரூ. 2 00 |
| வட இந்திய யாத்திரை | (அச்சில்) |

UNIVERSITY LIBRARY
MADURAI

# உழைப்பால் உயர்ந்த ஏழை

காட்டில் கண்டதைச் சாப்பிட்டு வன விலங்குகளுடன் அநாகரிகமாக வாழ்ந்த ஆதி மனிதனைவிட நாம் எவ்வளவோ வகையில் முன்னேற்றமடைந்து விட்டோம். அந்தக் காலத்து மனிதனின் வாழ்க்கையையும் இப்பொழுதைய மனிதனின் வாழ்க்கையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் கற்பனைக்கு எட்டாத அளவுக்கு வித்தியாசம் இருக்கிறது. நாம் அவ்வளவு உயர்ந்து விட்டோம். ஆனால் ஒரே விஷயத்தில் மட்டும் ஆதி மனிதன் பட்ட கஷ்டத்தையே இன்றைய மனிதனும் படுகிறான். உண்ண உணவும் உடுக்க உடையும் வசிக்க வீடும் பெற மனிதன் உழைத்தான். இரத்த வியர்வை சிந்த உழைத்தான். இன்றும் உழைக்கிறான். நெற்றி வியர்வை நிலத்தில் விழக் காலமெல்லாம் பாடுபட்டு உழைக்கிறான். உழைத்துக் கொண்டே இருக்கிறான்.

உழைக்க வேண்டியதுதான். உழைப்பால்தான் மனிதன் உயருவான். இன்று மிக உன்னத நிலையில் உள்ள மனிதர்களும் உழைப்பினால் உயர்ந்தவர்கள்தான். நல்ல நிலைமையில் இருக்கும் நாடுகளும் உழைத்து உழைத்து உயர்ந்தவைகள்தான். சோம்பல் மிகவும் கெடுதிதான். ஆனால்ஒரு மனிதனின் உழைப்பைப் பிறர் வஞ்சிக்கலாமா? ஒரு ஏழையின் உழைப்பைப் பெற்று அவனை ஏமாற்றலாமா? அவனுக்கு வேண்டிய குறைந்தபட்ச தேவைகளுக்காவது அவன் உழைப்புக்கு ஊதியம் பெற வழி செய்ய வேண்டாமா?

நாம் காலத்தையும் தூரத்தையும் வென்று விட்டோம். நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் ஆகிய பஞ்ச பூதங்களையும் வசப்படுத்திவிட்டோம். இயற்கையின் நியதியைக்கூட எதிர்க்கும் திறமையை விஞ்ஞானத்தால் பெற்று விட்டோம். ஆனால் ஒரு மனிதன் இன்னொரு மனிதனைப் பார்த்து அவனும் மனிதன்தான் என்று எண்ணும் ஞானத்தை மட்டும் பெறவில்லை. உண்ண உணவின்றி உடுக்க உடையின்றி வசிக்க வீடின்றி நாளெல்லாம் உண்மையிலேயே உழைத்துப் பாடு படும் மக்கள் வேதனைப்படுகின்றனர். ஒரு சாண் வயிற்றை நிரப்பும் உணவுக்காக வருந்தி அலைந்து வாடிக் கொண்டிருக்கின்றனர். அப்படி வருந்தி வாடும் கூட்டத்துக்கு வசதி படைத்த கூட்டம் வாழும் வகையைச் செய்து கொடுக்க முற்படவில்லை. அந்த ஏழை மக்களுக்காகத் தன் சுக வாழ்வில் ஒரு சிறிதும் குறைத்துக்கொள்ள வசதி படைத்த கூட்டம் விரும்பவில்லை. ஏழை மக்கள் பட்டினியாலும் பசியாலும் உயர்ந்த சாதி தாழ்ந்த சாதி என்ற வித்தியாசத்தினாலும் கொடுமைப்படுகின்றனர். பட்டினியோடும் நோயோடும் உழைத்து உழைப்புக்கு ஏற்ற ஊதியம் பெற முடியாமல் வாடி வதங்கிச் செத்து மடிந்து கொண்டிருக்கின்றனர்.

அப்படி வேதனைப்படும் ஆயிரக் கணக்கான ஏழை மக்களில் ஒருவனாக இருந்தவன் தான் ஏழை வேலன். கொடியவற்றுள் எல்லாம் கொடியதான இளமையில் வறுமைக்கும் ஆளானவன் தான் சிறுவன் வேலன். அதனிலும் கொடியதான அனாதையாக இந்தப் பரந்த உலகில் விடப்பட்டவன் தான் ஆதரவற்ற வேலன். ஆனால் இன்று அந்த ஏழை வேலன் மறைந்து விட்டான். உழைத்து உழைத்து உயர்ந்து விட்டான். உலகமே புகழும் வள்ளல் வேலனாகிவிட்டான். வேலனின் புகழ் பரவாத இடமே இல்லை. மனித சமூகம் அவனை வாழ்த்தி வணங்குகிறது!

வேலனே, "உழைப்பால் உயர்ந்த ஏழை" என்று தன்னைச் சொல்லிக் கொள்வதில்தான் மிகவும் பெருமைப்படுகிறான்.

இந்த வேலன் யார்? இவன் ஏன் அனாதையாக, ஆதரவற்றவனாக இருந்தான்? எப்படிப் பாரெல்லாம் புகழும் வள்ளல் வேலனானான்?

*　　　*　　　*

பெரிய ஆலமரத்தின் நிழலில் படுத்த வண்ணம் யாரையோ எதிர்பார்த்துக் கொண்டிருந்தான் கிழவன் நடேசன். எலும்பும் தோலுமாக ஆனால் நல்ல உறுதியுடன் இருந்த அவன் நீண்ட உடல் ஆலமரத்துக்கு அடியில் கிடந்தது. அவன் உள்ளத்தில் ஏதோ கவலை. அப்படியும் இப்படியும் புரண்டு கொண்டிருந்தான். பசியின் களைப்பினாலும் வெய்யிலின் கொடுமையினாலும் அவன் முகம் வாடிப் போய் உடல் கருத்திருந்திருந்தது.

கிழவன் தலையை உயர்த்திப் பார்த்தான். பிரகாசமான சூரிய வெளிச்சத்தில் மரகதப் போர்வையை விரித்து விட்டது போலப் பச்சைப் பசேலென்று தெரிந்த வயல்களுக்கு நடுவே யாரோ நடந்து வந்தது தெரிந்தது.

சுருக்கங்கள் நிறைந்த கிழவனின் முகத்தில் இருந்த வேதனையும் இரக்கமும் கொஞ்சம் விலகின. அவன் ஒரு தரம் அடக்கமாக இருமினான். கண்ணுக்கு எட்டிய தூரம் ஒரே பசுமையாகக் காட்சி அளித்த வயல் வெளியில் அவன் இருமலின் சத்தத்தைத் தவிர வேறு சத்தம் கிடையாது. கண்களை ஒரு தரம் அகலத் திறந்து பொன் விளையும் பூமியையும் நெற் பயிரையும் பார்த்தான். உழைத்து உழைத்து உரம் பெற்ற தன் கைகளைப் பார்த்தான். அப்பொழுது மெதுவாக அடித்த காற்றில் பயிர்கள் அசைந்து ஆடின. அதைப் பார்த்துத் தன் துக்கமெல்லாம் மறைந்ததாக எண்ணிக் கிழவன் நடேசன் மகிழ்ந்தான். ஆம், அப் பயிர்கள் அசைந்து அசைந்து நெளிந்து நெளிந்து

ஆடியது கிழவனின் துக்கத்தைத் துடைக்க விரும்புவது போலவே இருந்தது. கொடிய வெய்யிலை வாரிக் கொட்டிய மேகமற்று இருந்த நீல வானம் கண்ணைச் சிமிட்டுவது போல அந்தப் பயிர்கள் ஓயாமல் அசைந்தாடின.

தூரத்தில் தெரிந்த உருவம் வர வர நெருங்கி வந்து கொண்டிருந்தது. கிழவன் எழுந்து உட்கார்ந்தான். கீழே தரையில் விரித்துப் போட்டிருந்த வேஷ்டியை எடுத்து உதறினான். தலையில் ஜம்மென்று முண்டாசு கட்டினான். முண்டாசு கட்டினவுடனேயே கிழவன் திடீரென்று ஏதோ மாய மந்திரத்தால் பத்து வயது குறைந்து விட்டது போலக் காட்சி அளித்தான்.

வயலின் மத்தியில் வந்து கொண்டிருந்த அந்த ஆள் கிழவன் தங்கியிருந்த ஆலமரத்தடிக்கு வந்து விட்டான். வெய்யில் தாங்காமல் 'உஸ்' என்று பெருமூச்சு விட்டான்.

''மாடுகள் பயிரை அழித்து விடாமல் ஜாக்கிரதை யாகப் பார்த்துக் கொள். நான் எஜமானனிடம் சொல்லி விட்டு நடுவக் கரைக்கு என் மகள் வீட்டுக்குப் போகிறேன். திரும்பிவர ஒரு வாரம் பிடிக்கும்'' என்று கூறிக் கிழவன் நடேசன் கிளம்பி விட்டான். அவன் உடல் தளர்ந்து இருந்தாலும் உள்ளம் உறுதியாக இருந்தது. இல்லாவிட்டால் இந்த வயோதிக வயதிலும் இப்படிப் பாடுபட முடியுமா? விடுவிடென்று நடக்க முடியுமா?

**வா**ழைக் கொல்லை கிராமத்தில் மனிதர்கள் இருப்பது போலவே தெரியவில்லை. வெய்யிலுக்காக எல்லாரும் வீட்டிலேயே அடைப்பட்டுக் கிடந்தனர். கிராமத்து வீதிகளில் ஈ, காக்காய்கூட காணவில்லை. தெருக்கள் வெறிச் சென்று இருந்தன. ஆங்காங்கே கட்டப்பட்டிருந்த மாடுகள் வாயில் அசைபோட்ட வண்ணம் படுத்துக் கிடந்தன. வழக்கமாக அவனைக் கண்டவுடன் குரைக்கும் கறுப்பு

நாய் கூடக் குரைப்பதை மறந்து பூவரசமரத்து நிழலில் நாக்கைத் தொங்கப் போட்டவண்ணம் காலை நீட்டிப் படுத்துக் கொண்டிருந்தது.

அந்தக் கிராமத்தில் பெரும்பாலும் கூரை வீடுகள் தான். அந்தப் பெரிய தெருவின் இருபுறமும் இருந்த குடிசைகள் ஒன்றின் மேல் ஒன்று முட்டி மோதிக்கொண் டிருப்பது போல நெருக்கி யடித்துக் கொண்டிருந்தன. அவற்றின் கூரை காலத்தினால் உருக்குலைந்து போயிருந் தது. அந்தக் கூரை மீது பரங்கி, பூசணி முதலிய கொடி கள் படர்ந்து பார்ப்பதற்குப் பசுமையாகக் காட்சி யளித் தன. நடு நடுவே இரண்டொரு ஓட்டு வில்லை போட்ட வீடுகள் திருவிழாக் காலங்களில் கிராம மக்களின் கூட் டத்துக்கு மத்தியில் காணப்படும் இரண்டொரு போலீஸ் காரர்களைப் போல சிவப்பாகக் காட்சி அளித்தன. அவற் றிற்கெல்லாம் மேலே ஒரே ஒரு மாடி வீடு மட்டும் சற்று எடுப்பாகத் தெரிந்தது.

அந்த வீட்டை நோக்கித்தான் கிழவன் நடேசன் சென்று கொண்டிருந்தான். அவன்மீது வியர்வை கொட் டிக் கொண்டிருந்தது. தலையில் கட்டி யிருந்த துணியால் அடிக்கடி முகத்தைத் துடைத்துக்கொண்டே நடந்தான். வெய்யில் தாங்க முடியாதபடியால் மூச்சு வாங்கியபடியே நடந்தான். அந்த மாடி வீட்டை யடைந்ததும் முண்டாசுத் துணியை அவிழ்த்து உடம்பை யெல்லாம் துடைத்துக் கொண்டு உட்கார்ந்தான். அவன் களைப்புத் தீர எத்தனை நாழி ஆயிற்றோ!

"யாரு நடேசனா?" என்ற குரல் கேட்டதும் உணர்வு பெற்று நிமிர்ந்து பார்த்தான்.

வாழைக் கொல்லைக் கிராமத்தின் பெரிய பண்ணையார் நின்று கொண்டிருந்தார். அந்தக் கிராமத்திலேயே பெரிய

பண்ணையார் குடும்பம்தான் பரம்பரை பணக்காரக் குடும்பம். அவர் வைத்ததுதான் அந்தக் கிராமத்தில் சட்டம். அவரைப் பார்த்தவுடன் நடேசன் அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்தான். அருகில் கிடந்த துணியை எடுத்து இடுப்பில் கட்டிக்கொண்டு மிகவும் அடக்க ஒடுக்கமாகக் கையைக் கட்டி நின்றான்.

சின்னஞ் சிறு வாலிபனாக இருந்த நாள் முதல் பெரிய பண்ணையாரின் குடும்பத்தில் வேலை பார்த்து வருகிறான் நடேசன். பெரிய பண்ணையாரின் வீடு வாசல், மாடு கன்று, நிலபுலன் எல்லாவற்றையும் தன் சொந்த சொத்தாகவே கருதி கண்காணித்து வருகிறான். இரவென்றும் பகலென்றும் பாராமல் உழைத்து வருகிறான். பண்ணையாரின் சொத்துக்களைத் தன் சொந்த சொத்தாகவே நினைத்து விட்டதால் ஊரில் பலபேரிடம் பயங்கரமாகச் சண்டை போட்டிருக்கிறான். ஒரு சமயம் பண்ணையாரின் நாத்தாங்காலுக்கு முதலில் தண்ணீர் பாய வேண்டும் என்பதற்காக உயிரையும் திரணமாக மதித்து ஒருவருக்கும் தெரியாமல் இரவோடு இரவாக ஒரு பெரிய வாய்க்காலுக்குக் குறுக்கே அணை போட்டுத் தண்ணீரைத் தேக்கி நாத்தங்காலுக்கு தண்ணீர் பாய்ச்சி இருக்கிறான். இதனால் அவனுக்கு ஏற்பட்ட எதிரிகள் கொஞ்ச நஞ்சமல்ல. இருந்தாலும் பண்ணையார் வீட்டு வேலைகளைச் செய்வதில் அவன் அவ்வளவு அக்கறை காட்டிகொண்டு வந்தான்.

இதற்கெல்லாம் அவன் பெற்று வந்த கூலி தினம் இரண்டு வேளைச் சாப்பாடு. வருஷம் ஒன்றுக்கு ஆறு கலம் நெல். அவ்வளவுதான். வருஷம் முந்நூற்று அறுபத்தைந்து நாளும் உழைக்க வேண்டும். தினம் இருபத்து நாலு மணி நேரமும் வேளா வேளைக்குச் சரியாகச் சாப்பிடாமல்கூட உழைக்க வேண்டும். இரவு வேலைகளில் தூங்கினால் அதுகூட வயல் வெளியிலோ, களத்துமேட்டிலோதான் தூங்க வேண்டும், காவலுக்காக.

இந்த வேலைகளில் எப்பொழுதாவது ஏதாவது கொஞ்சம் குறைவு ஏற்பட்டு விட்டால் பண்ணையாரின் பயங்கரக் கோபத்துக்கு ஆளாகவேண்டும். பட்டணங் களில் வேலை செய்யும் தொழிலாளர்களைப் போல தினம் எட்டு மணி நேர வேலை கிராமத்தில் இருக்கும் உழவுத் தொழிலாளர்களுக்கு இல்லை. உழவுத்தொழிலாளர்களுக்கு அப்படி நேரக் கட்டுப்பாடும் இருக்கக் கூடாதுதான். அதற்காக ஐந்து பேர் வேலையை ஒரே ஆள் செய்ய வேண் டுமா? உழவர்கள் வாழ்க்கைத்தரம் உயருவதற்கு வேண் டிய சில சலுகைகளைக் கூடவா அவர்களுக்குச் செய்து கொடுத்து உதவக் கூடாது?

"எஜமான். நான்தான் நடேசனுங்க!" என்று கையைப் பிசைந்து கொண்டே சொன்னான் நடேசன். அதில் ஒரு பண்ணையாளுக்கு இருக்க வேண்டிய பண்பும் மரியாதையும் இருந்தன.

"ஏண்டா! வெய்யில் வேளையில் வீட்டுக்கு வந்து விட் டாயா? துரைக்கு வெய்யில் தாங்க முடியவில்லையோ? வயல் வெளியில் யார் இருக்கிறது? சாலைப் பக்கத்தில் சற்று ஏமாந்தால் கூட மாடுகள் வந்து விடுமே!" என்று அதிகாரக் குரலில் அவனை அதட்டிக் கேட்டார் பெரிய பண்ணையார்.

"மாட்டுக்காரக் கண்ணுசாமி இருக்கிறான். அவ னிடம் சொல்லி விட்டுத்தான் வந்திருக்கிறேன்" என்றான் கிழவன். அதைச் சொல்வதற்குள் அவன் உடலை ஆயிரம் கோணலாகச் செய்து கொண்டான். அவன் குரலில் ஒரு குழைவும் உண்மையும் கலந்து இருந்தன.

இந்தச் சமயத்தில் பெரிய பண்ணையாரின் மகன் பத்து வயது நிரம்பாத பாலகன் ஓடி வந்தான். "ஏன் அப்பா, நடேசனைக் கோவிச்சுக்கிறீங்க? இப்பதானே அம்மாவிடம்

இன்றைக்கு வெய்யில் தாங்க முடியவில்லை என்று சொல்லிக்கிட்டு இருந்தீங்க! அவன் மட்டும் எப்படி வயல் வெளியில் வெய்யிலில் உட்கார்ந்திருப்பான்?'' என்று தன் மழலை மொழியில் கொஞ்சிக் கொஞ்சிக் கேட்டான்.

பாவம் பையன் மிகச் சிறியவன். அவன் இரத்தத்தில் இன்னும் இந்த உலகத்துக் கொடுமைகள் கலக்கவில்லை. அதிலும் பெரிய பண்ணையாரின் தயாள குணம் இன்னும் படியவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் தன் வீட்டுப் பண்ணையாளுக்காக பரிந்து பேசுவானு? அவனும் அல்லவா பண்ணையாருடன் சேர்ந்து கொண்டு அதிகாரம் பண்ணுவான்.

''உனக்கென்ன இங்கு வேலை? நீ உள்ளே போ?'' என்று பையனை ஆதரவோடு அழைத்துக் கொண்டு வீட்டுக்குள் சென்ருர் பண்ணையார்.

இதற்குள் பண்ணையார் வீட்டுச் சமையல்காரி ஒரு இரும்பு மரக்காலில் பழைய அமுதைப் போட்டு அதில் இரண்டு பச்சை மிளகாயைத் தொட்டுக் கொள்ளுவதற்காக வைத்து எடுத்து வந்தாள். நடேசனுக்கு எதிரில் அதை வைத்து விட்டுப் போனுள். கிழவன் அதை எடுத்துக் கொண்டு கொல்லைப் புறத்துக்குப் போனுன். கிணற்றுக்கு அருகில் உட்கார்ந்து சாப்பிட்டான். வெய்யில் வேளையில் அந்தப் பழைய சோறு அவனுக்கு அமுதமாக இருந்தது. சாதத்தைச் சாப்பிட்டு இரண்டு வாய் தண்ணீரையும் குடித்த பிறகுதான் அவனுக்கு உயிர் வந்தது. அவன் சுருங்கிய முகத்தில் குழி விழுந்த கண்களில் ஒரு தெளிவு ஏற்பட்டது.

மரக்காலைக் கழுவிக் கவிழ்த்து வைத்து விட்டுக் கையை அலம்பிக்கொண்டு பண்ணையார் வீட்டு வாசலுக்கு வந்தான். பெரிய பண்ணையார் சாய்வு நாற்காலியில்

சாய்ந்து கொண்டு படுத்திருந்தார். ஒரு வேலைக்காரச் சிறுவன் அவருக்கு விசிறிக் கொண்டிருந்தான். கிராமம் அல்லவா? அங்கு இன்னும் மின்சாரம் செல்லவில்லை. அதனால் மின்சார விசிறி கிடையாது. ஆட்களை வைத்துக் கொண்டுதான் விசிறிக் கொள்ள வேண்டும்.

மின்சாரத்தைக் கண்டு பிடித்த புண்ணியவானைக் கை யெடுத்துக் கும்பிட வேண்டும். இல்லாவிட்டால் தான் வியர்வையால் புழுங்க, வெய்யிலால் வாட, வயிற்றுப் பிழைப்புக்காகப் பிறருக்கு விசிறிப் பிழைக்கும் மனிதக் கூட்டமே இன்று பெரிதாயிருக்கும். நோயாளிகளுக்கு, முடியாதவர்களுக்கு, விசிறுவதால் குறையொன்று மில்லை; விசிற வேண்டியதுதான். ஆனால் விசிறுவதையே தொழி லாக, மனிதன் மனிதனையே இழிவு படுத்தும் தொழிலை மனிதர்கள் செய்யும்படி சொல்லுவது மனித தர்மத்துக்கு உகந்ததா?

சமூகத்தில் இன்னும் இது போன்ற நிலை இருக்கத் தான் செய்கிறது. சலவைத் தொழில், க்ஷவரத் தொழில், தோட்டித் தொழில் முதலிய மனித சமுதாயத்துக்கு மிக முக்கியமாக வேண்டிய புனிதமான தொழிலில் ஈடுபட்டுப் பாடுபடும் பாட்டாளிகளுக்கு மனித சமூகத்தில் அவ்வளவு மதிப்புக் கிடையாது. அவர்கள் வாழ்க்கைத் தரமும் உயர்வாக இல்லை. இந்தத் தொழிலில், ஈடுபட்டிருக்கும் தொழிலாளிகளுக்கு நவீன சாதனங்களைச் செய்து கொடுத்து அந்தத் தொழில்களையும் ஒரு நாகரிகமான தொழிலாக மாற்றுவதற்கு வழி வகைகள் செய்ய வேண்டும்.

பங்கா இழுத்த தொழிலாளியைவிட மின்சார விசிறியைச் சுற்றிவிடும் மின்சாரத் தொழிலாளியின் மதிப்பு உயர்ந்துதான் இருக்கிறது. அதைப் போல மேற்

படி தொழிலாளர்களின் அந்தஸ்து உயரும் காலம் என்று வருமோ !

"எங்கேடா பார்த்துக்கொண்டு விசிறுகிறே ! பார்த்து விசிறுடா ?" என்று ஒரு அதட்டு அதட்டினர் பண்ணையார். எதிரில் நின்றுகொண்டிருந்த நடேசனை ஏறெடுத்தும் பார்க்காமல் கண்ணை மூடியபடி சாய்வு நாற்காலியின் நீண்ட சட்டத்தில் காலைத் தூக்கிப் போட்டார்.

நடேசன் ஒரு தரம் கனைத்தான்; மெதுவாக இருமினன். கவலையற்ற பண்ணையாரின் ஊதியிருந்த கன்னங்களுக்கு மேலே மூடியிருந்த கண்களை அவர் திறந்து பார்ப்பதாயில்லை.

மனதைக் கொஞ்சம் திடப்படுத்திக் கொண்டு "எஜமான் !" என்ருன்.

"என்ன ?" என்று கத்தினர் பண்ணையார். விசிறிக் கொண்டிருந்த சிறுவனின் உடல் ஒரு தரம் நடுங்கிக் குலுங்கியது. கிழவன் பேசாமல் நின்று கொண்டிருந்தான். அவன் தான் இதுபோல் எத்தனையோ முறை பண்ணையாரைப் பார்த்திருக்கிருனே ! ஏன் பயப்படப் போகிருன் ?

"காவேரியைப் பார்த்துவிட்டு வர நடுவக் கரைக்குப் போகிறேன். என் மருமகன் கடிதம் போட்டிருக்கிருன். காவேரிக்கு இது பத்தாவது மாதமாம். எஜமான் பத்து ரூபாய் பணம் கொடுக்க வேண்டும். காவேரிக்கு நம் தோட்டத்துப் பம்பளிமாஸ் பழம் என்ருல் ரொம்பவும் பிடிக்கும். அதிலும் இரண்டு பறித்துக் கொள்ளுகிறேன்" என்று கெஞ்சும் குரலில் சொன்னன்.

பண்ணையார் ஒரு கணம் மௌனமாக இருந்தார். அடுத்த கணம் தன் கண்களை அகலத் திறந்து நடேசனை முறைத்துப் பார்த்தார். "ஊருக்குப் போவதற்கு இது தான் சமயம் பார்த்தாயா ? வயலில் இப்பொழுதுதான்

பயிர்கள் எல்லாம் பச்சைகொண்டு வருகிறது. அதற்கு யார் காலா காலத்தில் தண்ணீர் பாய்ச்சுவது?''

''நாலு நாளில் திரும்பி விடுகிறேன் எஜமான்.''

பண்ணையார் சற்று நேரம் பேசாமல் இருந்தார்.

''சரிதான், சாயங்காலம் வா, யோசித்துச் சொல்லு கிறேன்'' என்ருர். இதில் யோசிப்பதற்கு என்ன இருக் கிறதோ!

''ஆகட்டும் எஜமான்'' என்று சொல்லிவிட்டு நடேசன் கொல்லைப் பக்கம் இருந்த அவன் குடிசையை நோக்கிச் சென்ருன்.

பெரிய பண்ணையார் மகன் செல்வராஜன் அவன் பின் ஞல் மெதுவாக வந்தான்.

''நடேசா! ஊருக்குப் போகிருயா? எப்போ திரும்பி வருவே?'' என்று கேட்டான்.

''நாலு நாளில் வந்து விடுவேன் ராஜா'' என்று சிறு வனை அணைத்துப் பிடித்துக் கொண்டான் கிழவன் நடேசன். செல்வராஜன் மேலே ஏதோ சொல்ல வாயெடுத் தான். அவனுல் சற்று நேரம் ஒன்றும் பேச முடியவில்லை.

செல்வராஜன் மீது நடேசனுக்கு உயிர். ''ராஜா! ராஜா!'' என்று சுற்றிச் சுற்றி வருவான். செல்வராஜ னும் நடேசனைக் கண்டதும் பசுவைக் கண்ட கன்று போலக் குதித்துக் கொண்டு வருவான். பண்ணையார் எத்தனையோ முறை தடுத்தும் அவனுக்கு நடேசன்மீது இருந்த அன்பு குறையவில்லை. பண்ணையாருக்குத் தெரி யுமா, நடேசனுக்கும் செல்வராஜனுக்கும் உள்ள அன்பு. நடேசன் அவர் வீட்டில் வேலை செய்யும் சாதாரண பண்ணையாள். அவனிடம் தம் குழந்தை சரிநிகர் சமான மாகப் பழகுவதா? என்றுதான் நினைத்தார். அவர்மீது

குற்றமில்லை. இந்தமாதிரி எண்ணம் இன்று நேற்று வந்ததா? பரம்பரை பரம்பரையாக அவர்கள் இரத்தத்தில் ஊறிக் கிடக்கும் பண்பல்லவா இது?

பண்ணையாரின் மாடி வீட்டுத் தோட்டத்திலேயே ஒரு ஓலைக் குடிசை போட்டுக்கொண்டிருந்தான் நடேசன். அவனுக்குக் காவேரி ஒரே பெண். ஏழைமை என்ற ஒரே காரணத்தினுலேயே வந்த வியாதிக்கு வகையான மருந்து கொடுக்க முடியாமல் அகால மரணமடைந்து விட்டாள் காவேரியின் தாயார். தாயை இழந்த காவேரிக்குத் தாயாகவும் தந்தையாகவும் இருந்து அவளை மார்மேலும் தோள் மேலும் போட்டு வளர்த்து வந்தான் நடேசன். காவேரி சற்றுப் பெரியவளானுள். பேசக் கற்றுக் கொண்டாள். அப்பொழுதெல்லாம் நடேசன் காவேரிக்குச் சின்னச் சின்னக் கதைகளைச் சொல்லுவான். அப்படிக் கதை சொல்லும்போது குழந்தை காவேரி கவனமாகக் கேட்பாள். இன்னும் பெரியவளானுள். இப்பொழுது அவளுக்கு வேறுவிதமான கதைகளைச் சொல்லி வந்தான் நடேசன். அவனுக்கு உடுக்கை அடிக்கத் தெரியும். ஆகையால் உடுக்கையை அடித்துக் கொண்டு தேசிங்குராஜன் கதையைப் பாடுவான். உடுக்கை அடிப்பதை நிறுத்தி ஒரு கையிலிருக்கும் உடுக்கையை உயரத் தூக்கி இன்ஞெரு கையையும் தலைக்கு மேல் தூக்கி ராகம் இழுப்பான். அந்தக் காட்சி மிக அற்புதமாயிருக்கும்.

அப்போதெல்லாம் பண்ணையாரின் மகன் செல்வராஜனும் கூடவே இருப்பான். உடுக்கையின் 'பம் பம்' என்ற இன்ப நாதமும், அதற்கு ஏற்றாற்போல் இருந்த கிழவனின் கணீரென்ற குரலும் சேர்ந்து குழந்தைகள் இருவரையும் மெய்மறக்கச் செய்து விடும். அவர்கள் இருவரும் மலர்ந்த முகத்துடன் மண்டியிட்ட வண்ணம் அவன் பாடிய பாட்டைக் கேட்பார்கள். அந்தக் குழந்தைகளின் மனக் கண்

முன்னால் தேசிங்குராஜன் குதிரையின் மீது ஏறி வருவது போல் தோன்றும். அதைப் பார்த்து அப்படியே அசை வற்று இருப்பார்கள். சித்திரப் பாவைபோலிருக்கும் அக் குழந்தைகளைப் பார்க்கும்போது நடேசனுக்கு உண்டாகும் மகிழ்ச்சி அவன் பாடும் பாட்டின் வேகத்திலும், அவன் அடிக்கும் உடுக்கையில் துள்ளும் விரல்களிலும், அவ னுடைய தலையாட்டத்திலும், விரிந்து மலர்ந்த விழிகளி லும், உழைத்து உழைத்து உரமேறிக் கிடந்த விம்மும் மார்பிலும் நன்றாகத் தெரியும்.

காவேரி பருவமடைந்த பெண்ணானாள். தன்னுடைய தூரத்து உறவான மாணிக்கத்துக்கு அவளை மணம் முடித்து வைத்தான். காவேரி தன் கணவன் வீடு சென்று விட்டாள். நடேசன் சின்னக் குழந்தை போல விம்மி விம்மி அழுதான். எவ்வளவு வயது ஆகியிருந்தும் கூட அவனால் காவேரியைப் பிரிவது அவ்வளவு கஷ்டமாக இருந்தது. மாதம் ஒரு தரம் போய் மகளைப் பார்த்து வருவான். தன் ஓலைக் குடிசைக்குள் தனியாக இருக்கும் போது காவேரியின் நினைவு வந்து விடும். அப்பொழு தெல்லாம் மிகவும் வேதனைப்படுவான். அந்த வேதனையை, அவன் தனிமையைப் போக்கச் சிறுவன் செல்வராஜனின் மழலை மொழியும் கொஞ்சும் குரலும் துணை புரிந்தன. செல்வராஜன்மீது அளவற்ற பிரேமை ஏற்பட்டது. அடிக் கொரு தரம் செல்வராஜனைப் பார்த்து கொஞ்சினால்தான் அவன் மனசு அமைதியடையும். செல்வராஜனும் நடேச னின் ஓலைக் குடிசையைத் தேடிப் போய் ''நடேசா! எனக்கு ஏதாவது கதை சொல்லு'' என்று கேட்பான்.

நடேசனும் தனக்குத் தெரிந்த கதைகளை எல்லாம் அவனுக்குச் சொல்லுவான். குழந்தை செல்வராஜனுக் குத் தன் மெத்தை வீட்டின் பஞ்சணை மெத்தையை விட நடேசனின் ஓலைக் குடிசையின் களிமண் தரையே ரொம்பப்

பிடித்திருந்தது. அந்த களிமண் தரையில் நடேசனின் கதைகளைக் கேட்டுக் கொண்டே தூங்குவதில்தான் அவனுக்குப் பிரியம் அதிகம்.

செல்வராஜனுக்கு நடேசன் வீரன் கட்டபொம்மனின் கதையைச் சொல்லுவான். அவனுடைய தியாக வாழ்க்கையையும், சோக சரித்திரத்தையும் வசனமாகச் சொல்லுவான்; பாட்டாகவும் பாடுவான். செல்வராஜன் திறந்த வாய் மூடாமல் அதைக் கேட்டுக்கொண்டிருப்பான்.

திடீரென்று நடேசனுக்கு உற்சாகம் பிறந்து விடும். கையில் உடுக்கையை எடுத்து அடித்துக்கொண்டு தேசிங்கு ராஜன் பாட்டை ஆடிக் கொண்டே பாடுவான். செல்வராஜன் கிழவனின் ஆட்டத்தைப் பார்த்துக் கொண்டே தன் குமுத வாயைத் திறந்து சிரிப்பான்.

அதைப் பார்த்தவுடன் நடேசன் இந்த உலகத்தையே மறந்து விடுவான். வான வெளியில் இன்பக் குதிரையில் ஏறிப் பறக்க ஆரம்பித்து விடுவான். பாட்டு முடிந்தவுடன் உடுக்கையைக் கீழே வைத்துவிட்டு உட்காருவான். செல்வராஜன் ஆசையோடு சென்று அவன் தோளைக் கட்டிக் கொள்ளுவான். சிறுவனின் அன்பு நிறைந்த அணைப்பிலே அவன் தன் கவலை எல்லாவற்றையும் மறந்து விடுவான்.

பண்ணையாருக்கும் நடேசன் மீது நல்ல நம்பிக்கை. அவனை நம்பி மாடு கன்று, நில புலன் எல்லாவற்றையும் விட்டுவிட்டு நிம்மதியாக இருந்தார். அவனும் வஞ்சகமில்லாமல் அவருக்கு உழைத்து வந்தான். அதனால்தான் அவன் ஊருக்குப் போகிறேன் என்றவுடன் அவருக்குக் கவலை.

சிறுவன் செல்வராஜனோ கிழவனை ஒரு வாரத்துக்குப் பார்க்க முடியாதே என்று ஏக்கப்பட்டான். அதனாலேயே

ஏதோ சொல்ல வந்தவன் அப்படியே திகைத்து நின்று விட்டான்.

அவனுடைய ஏக்கம் சோர்ந்துபோன அவன் இளம் முகத்தில் தெரிந்தது. ஆத்திரத்தால் துடிக்கும் அவன் உதடுகளில் தெரிந்தது. நீர் நிறைந்த கண்களில் தெரிந் தது. இன்னும் அவன் தள்ளாடியபடியே நின்ற நிலை யிலேயே தெரிந்தது.

கிழவனால் அந்தச் சோகக் காட்சியைப் பார்க்க முடிய வில்லை. அவனுடைய குழி விழுந்த கண்களும் கலங்க ஆரம்பித்து விட்டன.

“ஊருக்குப் போனால் என்னை மறந்து விடுவாயோ?” என்று ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு கேட்டான் செல்வராஜன்.

“என் ராஜாவை நான் மறப்பேனா? ஒருக்காலும் மறக்க மாட்டேன்!” என்று தழ தழத்த குரலில் கூறி விட்டுக் குழந்தையை மீண்டும் ஒரு முறை அணைத்துக் கொண்டான்.

* * *

**மா**லை நெருங்கிக் கொண்டிருந்தது. தூங்கிக் கொண்டிருந்த பண்ணையாரோ கூப்பிடும் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்தார். எதிரில் கிழவன் நடேசன் நின்று கொண்டிருந்தான். கூனிக் குறுகிக்கொண்டு அவன் நின்று கொண்டிருந்த காட்சி பரிதாபமாக இருந்தது. சில விநாடி கள் பண்ணையார் அவனையே பார்த்தார். கிழவன் நடேச னின் சுருக்கம் விழுந்த முகத்தில் எதையோ எதிர்பார்க் கும் ஆவல் நிறைந்திருந்தது. அவன் தன் கையில் வைத் திருந்த துணி மூட்டையை கீழே வைத்தான். பண்ணை யாரைக் கையெடுத்துக் கும்பிட்டான்.

"ஏண்டா, இன்றைக்கே போக வேண்டியதுதானு?" என்று கேட்டார் பண்ணையார்.

"ஆமாம் எஜமான்!" என்றுன் கிழவன்.

பண்ணையார் எழுந்து பேசாமல் உள்ளே சென்ருர். ஐந்து வெள்ளி ரூபாயைக் கொண்டு வந்து அவன் கையில் கொடுத்தார். பண்ணையாரின் பாசி படிந்த உள்ளத்தைப் போலவே ரூபாய்களும் பாசி படிந்திருந்தன. எத்தனை காலத்துக்கு முன் யார் சேர்த்து வைத்த பணமோ அது!

"இரண்டு மூன்று நாளைக்குள்ளாகவே திரும்பி வந்து விடு" என்ருர் பண்ணையார்.

"காவேரிக்குக் குழந்தை பிறக்கும் வரையில் கூட இருக்கப் போவதில்லை. ஒரு வாரத்துக்குள்ளாகவே திரும்பி வந்துவிடுகிறேன்" என்ருன்

"சரி போய்விட்டு வா!" என்ருர் பண்ணையார்.

கிழவன் மீண்டும் ஒரு கும்பிடு போட்டுவிட்டுக் கிளம்பினன். அவன் போவதைப் பார்த்துக் கொண்டே இருந்தார் பண்ணையார். அக்கிழவன் ஊருக்குப் போவது அவருக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. மாடு கன்றுகளையும் வயல் வெளியையும் நினைத்து வேதனைப் பட்டார். பாவம், காலமெல்லாம் உழைக்கும் ஒரு பண்ணையாள் சேர்ந்தாற்போல் ஒரு வாரம் ஊருக்குப் போவதற்குக் கூடச் சுதந்திரமில்லை. கிழவன் தன் மகள் பிரசவத்துக்காகப் பத்து ரூபாய் கேட்டதற்கு ஐந்து ரூபாய்தான் கொடுத்தார். அதையும் அவர் என்ன நினைத்துக் கொண்டு கொடுத்தாரோ? அவன் பண்ணையாளாக இருந்தால் அவனுக்கு மட்டும் ஆசாபாசங்கள் கிடையாதா? இல்லை, இருக்கத்தான் கூடாதா? அவனுடைய உணர்ச்சிக்கு மதிப்புக் கொடுக்கும் அளவுக்குப் பண்ணையார் மனத்தில் பண்பு இல்லையே!

ஒருவன் ஏழையாக இருந்தால் அவனுக்கு மகள் இருக்கக் கூடாதா? அவளுக்குக் குழந்தை பிறக்கக் கூடாதா? பண்ணையார் தம் மகள் பிரசவத்தின் போது பட்டபாடு, எடுத்துக்கொண்ட சிரமம், அடாடா! இப்படி அப்படி என்றில்லை. பெரிய பெரிய டாக்டர்கள் வந்தனர், உறவினர்கள் வந்தனர், ஊரே வந்து விசாரித்தது. இவைகளை நினைத்துப் பார்த்தாவது கிழவன் நடேசனுக்குப் பத்து ரூபாய் கொடுத்திருக்கக் கூடாதா? மனதார அவனை "ஊருக்குப் போய் வா" என்று சொல்லி அனுப்பி இருக்கக் கூடாதா?

"நடேசா! நடேசா!" என்று யாரோ கூப்பிடும் குரல் கேட்டது. கிழவன் திரும்பிப் பார்த்தான்.

சிறுவன் செல்வராஜன் ஆட்டிக் குட்டியைப் போலத் துள்ளிக் குதித்து ஓடிவந்தான். கையிலிருந்த மூட்டையைக் கீழே போட்டு விட்டு செல்வராஜனைக் குனிந்து தூக்கிக் கொண்டான்.

"ஊருக்குப் போனால் என்னை மறந்து விடமாட்டாயே?" என்று கொஞ்சும் குரலில் கேட்டான் குழந்தை செல்வராஜன்.

"மறக்க மாட்டேன் ராஜா. உன்னை நான் மறந்து விடுவேனா?" என்று சொல்லிக் குழந்தையைக் கீழே விட்டு விட்டுத் துணி மூட்டையை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டான்.

குழந்தை செல்வராஜனும் ஓரே ஓட்டமாக வீட்டுக்கு ஓடிப் போய்விட்டான்.

அவன் வீடு செல்லும்வரை அங்கேயே நின்று பார்த்து விட்டுக் கிழவன் ரயிலடியை நோக்கி நடந்தான். அவன் அருமை மகள் காவேரியின் நினைவு அவன் மனத்தில் தோன்றியது. அவளைக் காணப் போகிறோம் என்ற ஆசையில்

அவன் நடை கொஞ்சம் வேகமாக இருந்தது. கிழவன் நடேசனுக்குச் சுற்றியுள்ள யாவும் புதுமை பெற்று விளங்கின. "காவேரியைப் பார்த்ததும் பம்பளிமாஸ் பழம் கொடுப்பேன். அவள் அதை ஆசையோடு வாங்கித் தின்பாள். கட்டபொம்மன் பாட்டைப் பாடச் சொல்லுவாள். நானும் அதைப் பாடுவேன்," என்றெல்லாம் அவன் அன்பு உள்ளம் எண்ணியது. அவன் கால்கள் ரயிலடியை நோக்கிச் செல்லும் சாலையில் சென்றன.

மாலை மறைந்து இரவு நெருங்கி விட்டதால் வானம் கருத்துக்கொண்டிருந்தது. அதன் நடுவே செந்நிற மேகங்கள் வரிசை வரிசையாகக் காணப்பட்டன. அது ஏதோ ஒரு அபாய அறிவிப்புப் போலத் தோன்றிக்கொண்டிருந்தது.

**வ**ழக்கம் போல சூரியன் உதயமானுன். அஸ்தமித்தான். இரவு வந்தது. பொழுது புலர்ந்தது. புள்ளினங்கள் பாடிக்கொண்டு புறப்பட்டன. வாழைக் கொல்லை கிராமத்து மனிதர்கள் தங்கள் தங்கள் வேலையில் ஈடுபடலாயினர். நாட்கள் சென்றன. ஒரு வாரம் ஓடி மறைந்தது. வாழைக் கொல்லைக் கிராமத்தைச் சேர்ந்த பெரிய பண்ணையார் மட்டும் அமைதி இல்லாமல் இருந்தார்.

அன்று காலை பண்ணையார் எதையோ சிந்தித்த வண்ணம் வாசல் திண்ணையில் உட்கார்ந்திருந்தார். சிறுவன் செல்வராஜன் அவர் பின்னுல் வந்து பேசாமல் உட்கார்ந்தான். பிறகு பண்ணையாரின் முதுகில் முகத்தைப் புதைத்துக்கொண்டு விம்மி விம்மி அழ ஆரபித்துவிட்டான். பண்ணையார் ஒரு கணம் துடித்து வீட்டார். "ஏண்டா ராஜா! காலைவேளையில் ஏன் இப்படி அழுகிருய்?" என்று கேட்டார்.

"அம்மா அடித்துவிட்டாள்" என்ருன்.

"அம்மா அடித்துவிட்டாளா? வா, விசாரிக்கிறேன்!" என்று செல்வராஜன் கையைப் பற்றி அழைத்துக் கொண்டு உள்ளே சென்றார்.

"காமதேனு! ஏன் குழந்தையை அடித்தாய்?" என்று தன் மனைவியைப் பார்த்துச் சற்று அடக்கமாகக் கேட்டார் பண்ணையார்.

"இவன் என்ன சின்னக்குழந்தையா, என்ன? அந்தப் பண்ணையாள் எங்கே போனானோ? எப்போ வருவானோ? ஓயாமல் 'அம்மா! நடேசன் எப்போ வருவான்?' 'நடேசன் எப்போ வருவான்?' என்று நச்சரிக்கிறான். பாவிக் கிழவன் குழந்தைக்கு என்ன சொக்குப் பொடியைப் போட்டானோ?" என்று அங்கலாய்த்தாள் காமதேனு.

காமதேனு! என்ன அழகான பெயர். ஆனால் அந்த அம்மாள் எச்சில் கையால்கூட காக்காய் ஓட்டமாட்டாள்; கையிலிருக்கும் எச்சில் பருக்கை கீழே சிந்தி, அதைக் காகம் கொத்திக் கொள்ளுமோ என்று! என்ன பண்ணுவது? கண்ணில்லாதவனுக்குக் கண்ணாயிரம் என்றும், நித்திய தரித்திரக்காரிக்குத் தனபாக்கியம் என்றும் பெயர் வாய்ப்பதுபோல பண்ணையாரின் தர்மபத்தினிக்குக் காமதேனு என்று பெயர் வைத்துவிட்டார்கள்.

பண்ணையார் பதில் ஒன்றும் பேசவில்லை. செல்வராஜனை அழைத்துக்கொண்டு தோட்டத்துக்குச் சென்றார். கிழவன் நடேசனின் ஓலைக் குடிசைக்கு அப்பால் பெரிய ஆலமரம் ஒன்று இருந்தது. அது வெகு காலத்திய மரம். தனது கிளைகளை அகலப் பரவ விட்டுக்கொண்டு நின்றது. அதன் பழங்களைத் தின்று எத்தனையோ பறவைகள் தங்கள் இனிய கானத்தால் வாழைக்கொல்லை கிராமத்தையே கலகலப்பாக்கிக் கொண்டிருந்தன. அந்தக் குளிர்ந்த மரத்துக்கு அடியில் கிழவன் நடேசன் மரத்தினால் ஆன மேடை ஒன்று கட்டி வைத்திருந்தான். அதன் மீது பண்ணையாரும் செல்வராஜனும் உட்கார்ந்தார்கள்.

செல்வராஜன் பண்ணையாரின் மடியருகே நகர்ந்து வந்தான். "அப்பா! நடேசன் வந்து விடுவானு?" என்று கேட்டான்.

"கட்டாயம் வந்து விடுவான்" என்று சொன்னர் பெரிய பண்ணையார்.

"அம்மா வரமாட்டான் என்று சொன்னளே!"

"இங்கு வராவிட்டால் அவன் தெருத் தெருவாய்ப் பிச்சை எடுத்து அலைந்து திரிய வேண்டியதுதான்."

"ஏன் அப்பா அப்படி?"

"அவனிடம் ஒன்றும் இல்லை. அவன் ஏழை."

"அவனிடம் ஒன்றும் இல்லையா? இந்தத் தோட்டம் அவனுடையதில்லையா? அதோ இருக்கிறதே அவன் வீடு, அதுவும் அவனுடையதில்லையா?"

செல்வராஜன் தலைமயிரை அன்புடன் கோதி விட்டுக் கொண்டே "இதெல்லாம் நம்முடையது. அவனுக்கு நாம் தான் அந்தக் குடிசையைக் கூடக் கட்டிக் கொடுத்திருக் கிறோம். அவனுக்கு ஒன்றுமே கிடையாது" என்றார் பண்ணையார்.

"அப்படியானல் அவனுக்கு இந்தத் தோட்டத்தை யும் அந்த வீட்டையும் கொடுத்து விடுவோமே அப்பா!" என்றான் சிறுவன் செல்வராஜன்.

குழந்தை உள்ளம் அல்லவா? எல்லாரும் நன்ருக இருக்கவேண்டும் என்று நினைக்கிறான். அவன் இளம் உள்ளத்தில் இன்னும் உயர்வு தாழ்வு என்ற பேத மனப் பான்மை ஏற்படவில்லை. அதனால்தான் கிழவன் நடேச னுக்குத் தோட்டத்தைத் தானம் கொடுக்க முன் வந்து விட்டான். அடாடா! இந்தச் சிறுவனுக்கு இருக்கும் மனப்பான்மை பணம் படைத்தவர்களிடம் இருக்கக்

கூடாதா? அவர்களுக்கு எப்படி ஏற்படும்? அவர்கள் தான் ஏழைகளை மனிதர்களாகவே நினைப்பதில்லையே!

அந்தச் சிறுவன் ஏழை நடேசனை மனிதனாக நினைத்தான். அவன்மீது உண்மையிலேயே அன்பு கொண்டு விட்டான். அதனால் அவன் கஷ்டப்படுவதைப் பார்த்துக் கொண்டு, – இல்லை கேட்டுக் கொண்டு கூட அவனால் இருக்க முடியவில்லை.

அன்பு இருக்கும் இடத்தில் தூய்மையும் பரிசுத்தமும் இருக்கும். அன்புதான் தெய்வம். "கை வருந்தி உழைப்பவர் தெய்வம். கவிஞர் தெய்வம்; கடவுளர் தெய்வம்" என்ற மகாகவியின் வாக்கை மனிதன் கடைப்பிடிக்க வேண்டும். அப்பொழுதுதான் மனிதனை மனிதனாக நினைக்கக் தூண்டும். பிறருடைய உணர்ச்சிக்கு மதிப்புக் கொடுக்கும் மனப் பக்குவம் ஏற்படும். தேசத்திலும் ஏழை பணக்காரன் என்ற பேதம் தொலையும். இந்த நிலைமை என்று ஏற்படுமோ!

பண்ணையார் குழந்தையின் கையை எடுத்துக் கன்னத்தில் வைத்துக்கொண்டு அவன் நெற்றியில் முத்தமிட்டார். "ராஜா! உன் கேள்விக்கெல்லாம் என்னால் பதில் சொல்ல முடியாது! இன்னும் கொஞ்ச நாள் போனால் நீயே தெரிந்து கொள்வாய்!" என்றார்.

இந்தச் சமயத்தில் "ராஜா! அம்மா உன்னைச் சாப்பிடக் கூப்பிடுராங்க!" என்று அழைத்தாள் பண்ணையார் வீட்டுச் சமையல்காரி.

பண்ணையார் சிறுவனை அழைத்துக் கொண்டு கிளம்பினார். அவர் வாய் பேசாமல் சென்று கொண்டிருந்தாரே ஒழிய அவர் உள்ளத்தில் கோபம் பொங்கிக்கொண்டிருந்தது அவர் சிவந்த முகத்தில் நன்றாகத் தெரிந்தது.

"இந்தப் பண்ணையாட்களே இப்படித்தான்! இடத்தைக் கொடுத்தால் மடத்தைக் கட்டி விடுவான்கள். ஒரு

வாரத்தில் வந்து விடுகிறேன் என்று பல்லைக் காட்டிக் கெஞ்சுவது. ஊருக்குப் போனவுடன் அப்படியே உட்கார்ந்துவிடுவது. வரட்டும், அந்தக் கிழவனுக்கு நல்ல பாடம் கற்பிக்கிறேன்!'' என்று மனத்திற்குள் நினைத்துக் கொண்டே சென்றார் பண்ணையார்.

மறு நாளாவது நடேசன் வருவான் என்று எதிர் பார்த்தார். அவன் வரவில்லை. இனிமேல் வரவே மாட்டானோ!

சின்னஞ் சிறு வயதிலிருந்து மாடு போல உழைத்து வருகிறான் நடேசன்! அவன் இது வரையில் ஒன்றும் தவறுதலாக நடந்ததில்லை! அப்படிப் பாடுபட்டு உழைத்தவனுக்குப் போன இடத்தில் என்ன ஆபத்தோ என்னமோ என்று சற்று யோசித்துப் பார்க்கக் கூடாதா! அதற்குப் பதில் அந்த நிலப் பிரபுவுக்குக் கிழவன் நடேசன் மீது கோபம் கோபமாக வந்தது. பயிர்களெல்லாம் கவனிப்பாரின்றிப் பல இடங்களில் பாழாகிக் கிடந்தன. அதைப் பார்க்கும்போது அவர் கோபம் இன்னும் அதிகமாயிற்று. பாவம், அவைகளும் நடேசன் பிரிவால் வாடியது போலும்!

ஒரு வாரம் இரண்டு வாரம் ஆயிற்று. இரண்டு வாரம் மூன்று வாரமாகி மாதம் ஒன்றாகி விட்டது. மாடுகள் இளைக்கத் தொடங்கிவிட்டன. அவர் வீட்டுக் கருப்புப் பசுவிடம் பால் கறக்க முடியவில்லை. அந்தப் பசு நடேசனைக் கண்டால் நாய் போல நிற்கும். இப்போது அதனிடம் யாருமே போக முடியவில்லை. குழந்தை செல்வராஜனோ, ''நடேசன் எப்பொழுது அப்பா வருவான்!'' என்று மீண்டும் கேட்கத் தொடங்கி விட்டான். அடிக்கடி நடேசனின் ஓலைக் குடிசைக்குப் போய், ''நடேசா! ''நடேசா!'' என்று கூப்பிட்டு விட்டுத் திரும்புகிறான். குழந்தையின் ஏக்கத்தைப் பார்க்கச் சகிக்க முடியவில்லை. அவன் இளம் உள்ளத்தில் இருக்கும் அன்பை உணராமல்

குழந்தையைச் சற்றுக் கோபமாகக் கடிந்து கொள்ள ஆரம்பித்தார் பண்ணையார்.

நடேசனை இனி எதிர்பார்ப்பதில் பயனில்லை என்று அவனுக்குப் பதில் வேறு ஆளை நியமித்தார். புது ஆள் வந்தான். காரியங்களை செய்தான். இருந்தாலும் காலமெல்லாம் உண்மையோடு உழைத்த நடேசனைப்போல அவனால் உழைக்க முடியுமா? அவனால் எல்லா வேலைகளையும் பார்க்க முடியவில்லை. வேறொரு பண்ணையாளை வைத்தார். அப்போதும் ஆள் போதவில்லை. மறுபடியும் இன்னொருவன் தேவையா யிருந்தது. நடேசன் ஒருவனே செய்த வேலையை இப்போது மூன்று பேர் சேர்ந்து செய்தும் பண்ணையாருக்குத் திருப்தியில்லை. இருந்தாலும் நடேசனைக் கோபித்துக் கொண்டதுபோல் அவர்களை எல்லாம் கோபித்துக்கொள்ள முடியவில்லை. அந்த ஆட்களிடம் கொஞ்சம் மரியாதையாகவே நடந்து வந்தார் பண்ணையார். இந்த மரியாதையில் நூற்றில் ஒரு பங்கு நடேசனிடம் காண்பித்து இன்னும் கொஞ்சம் கூலியையும் அதிகமாகக் கொடுத்திருந்தால் அவன் எவ்வளவு உற்சாகமாக, குதூகலமாக வேலை செய்திருப்பான் தெரியுமா? அந்த ஏழையின் வயிறும் கொஞ்சம் நிறைந்திருக்கும். அவன் வாழ்க்கையிலும் சிறிது பசுமை ஏற்பட்டிருக்கும்.

பணக்காரர்களின் மனசையே தெரிந்து புரிந்து கொள்ளமுடிவதில்லை. ஒன்றுமில்லாத ஒரு ஆளுக்கு நிறைய பணம் கொடுத்து உட்கார்த்தி வைக்கிறார்கள். நாளெல்லாம் உழைப்பவனுக்குப் போதிய ஊதியம் கொடுப்பதில்லை. அதுதான் இல்லாவிட்டாலும் அவனிடம் அன்புடனாவது நடந்து கொள்ளக் கூடாதா? நடேசனுக்குப் பத்து ரூபாய் கொடுக்க யோசனை செய்த பண்ணையார், இன்று அவனுக்குப் பதில் அவனைவிடச் சற்று அதிகக் கூலிக்கு மூன்று ஆட்களை சந்தோஷமாகவே நியமித்திருக்கிறார்.

பண்ணையார் கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தார். ஒரு ஆளை நடுவக்கரைக்கு அனுப்பி நடேசன் என்ன ஆனான் என்று பார்த்து வரும்படி செய்தார். அதுவும் சுய காரிய மாகத்தான். சிறுவன் செல்வராஜன் நடேசனைக் காணுமல் ஏக்கம் பிடித்து இளைக்க ஆரம்பித்து விட்டான். அவன் உடம்புதேறுவதற்காகத்தான் நடேசனை அழைத்து வர ஆட்களை அனுப்பி வைத்தார். நடுவக்கரைக்குப் போன ஆள் திரும்பி வந்தான். நடேசனை அங்கு காணவில்லை என்று சொன்னான். அதோடு அங்கு நடந்த விபரீதச் சம்பவங்களை விவரமாகச் சொன்னான்.

* * *

வஸந்தத்தின் குளிர்ந்த காற்று விசிறி விசிறி அடித்துக் கொண்டிருந்தது. நடுவக்கரைக் கிராமத்துத் தெருக்களின் தூசு துப்பட்டைகளை எல்லாம் காற்று அடித்துக் கொண்டு போய் விட்டது. காவேரியும் மாணிக்கமும் காளியம்மன் கோயிலை விட்டு வெளியில் வந்தனர்.

அந்தக் கோயில் ஏழைகளின் கோயில். அதில் வர்ணச் சித்திரங்கள் கிடையாது. சுற்றிச் சுற்றி வரும் பெரிய பிரகாரங்கள் கிடையாது. அதன் கோபுரம் கல்லாலும் சுண்ணும்பாலும் கட்டியதல்ல. சாதாரண ஓலைக் கொட்டகைதான். ஆனால் அதற்குள் எப்பொழுதும் அணையாத விளக்கு எரிந்து கொண்டிருந்தது. சாம்பிராணி புகைந்து கொண்டிருந்தது. மலர்களின் மணம் கமழ்ந்து கொண்டிருந்தது. உண்மையாகவே தெய்வபக்தியுள்ள சிலர் வந்து போய்க் கொண்டிருந்தார்கள். இந்தத் தெய்வம் தான் மாணிக்கம் வீட்டுக் குடும்பத்தின் குல தெய்வம். அம்மனுக்குப் பிரார்த்தனை செலுத்தி விட்டுத்தான் காவேரியும் மாணிக்கமும் வெளியில் வந்தனர்.

காவேரி கஷ்டமில்லாமல் பெற்றுப் பிழைக்க வேணும் என்று காளியம்மனை வேண்டிக் கொண்டான் மாணிக்கம்.

காவேரியோ தங்கள் குலம் தழைக்க ஒரு ஆண் குழந்தை வேண்டும் என்று வேண்டிக் கொண்டாள். பெண் அல்லவா? தன்னைவிடத் தன் வம்சம் தழைக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறாள். பெண்களே எப்பொழுதும் எதிர்காலத்தைப் பற்றி அதிகம் சிந்திப்பவர்கள். அவர்களுடைய பண்பாடுதான் ஒரு தேசத்தின் பண்பாடு; நாகரிகம். அவர்கள் எவ்வளவுக்கு எவ்வளவு முற்போக்கு அடைகிறார்களோ அவ்வளவுக்கு அவ்வளவு சமூகம் முற்போக்கு அடையும்; நாடு முன்னேற்றம் அடையும்.

கோயிலை விட்டு வெளியில் வந்த காவேரியும் மாணிக்கமும் ஒரு கணம் தயங்கி நின்றார்கள். காவேரி மெதுவாகப் பெருமூச்சு விட்டாள். தன் கையை நீட்டி மாணிக்கத்தின் கையைப் பற்றினாள். அவனும் அவளை ஆதரவோடு பிடித்துக்கொண்டே வீடு நோக்கி நடந்தான்.

ஆமாம். அவர்கள் சாவதானமாக, மெள்ள மெள்ள நடந்து வந்தார்கள். அவர்களுக்கு என்ன அவசரம்? எங்கே போகப் போகிறார்கள்? தாங்கள் பெற்றோர்களாகப் போகும் பெருமையை எண்ணிப் பூரித்துப் போனார்கள். தங்கள் எதிர்காலத்தை நினைத்து இன்பக் கனவு கண்டு கொண்டே நடந்தார்கள். ஆகாயம் நிர்மலமாய் இருந்தது. காவேரியின் காலில் இருந்த மெட்டிகள் 'கலக்' 'கலக்' என்று சத்தமிட்டன. அந்தச் சத்தம் இன்ப கீதமாக இருந்தது அவளுக்கு.

தெரு மூலை திரும்பியதும் காவேரி சற்று வேகமாக நடந்தாள். தன் குடிசை வீட்டு வாசலில் யாரோ நின்று கொண்டிருப்பதைப் பார்த்தாள். "நம்ம வீட்டு வாசலில் நிற்பது யாருங்க!" என்று தன் கணவனைக் கேட்டாள்.

"யாரென்று தெரியவில்லையே!" என்றான் மாணிக்கம்.

இப்பொழுது இன்னும் கொஞ்சம் நெருங்கி விட்டார்கள். வீட்டு வாசலில் நிற்பது யார் என்று தெரிந்து

விட்டது. "அப்பா வந்திருக்காங்க. ஆமாம், அப்பாவே தான்!" என்று சொல்லிக்கொண்டே வேகமாக நடந்தாள் காவேரி.

"ஆமாம், மாமாதான்!" என்ருன் மாணிக்கம்.

"அப்பா!" என்று கூவிய வண்ணம் கிழவன் நடேசனைத் தாவி அணைத்துக்கொண்டாள் காவேரி.

"வாங்க மாமா?" என்று முகமன் கூறி வரவேற்ருன் மாணிக்கம்.

கிழவன் நடேசன் தன் மகளை அன்போடு அணைத்து அவள் முதுகை வருடிக் கொண்டிருந்தான். "கடவுள் உங்கள் இருவருக்கும் எல்லா சௌபாக்கியங்களையும் அளிப்பார்" என்று அன்பு தவழும் ஆசைக் குரலில் சொன்னுன்.

பிறகு கிழவன் தான் கொண்டு வந்திருந்த பம்ளிமாஸ் பழங்களைக் காவேரிக்குக் கொடுத்தான். அதை அவள் ஆவலோடு வாங்கிக்கொண்டாள். எல்லாரும் அந்தச் சிறிய ஓலை வேய்ந்த கூரை வீட்டுக்குள் சென்றனர். காவேரி சின்னக் குழந்தைபோல நடேசனை வளைய வளைய வந்து கொண்டிருந்தாள். அவன் கொடுத்த பம்ளிமாஸ் பழத்தை அப்பொழுதே உரித்துச் சாப்பிட்டாள். தன் கணவனுக்குக் கொடுத்தாள். "இந்த பம்ளிமாஸ் பழத்தின் ருசியே அலாதிதான்" என்று சொல்லிச் சொல்லி மகிழ்ந்தாள்.

காவேரியின் மகிழ்ச்சியைப் பார்த்து மாணிக்கம் மகிழ்ந்தான். தன் மகளும் மருமகனும் படும் சந்தோஷத்தைப் பார்த்துக் கிழவன் நடேசன் குதூகலமடைந்தான். காவேரி தன் தந்தையைக் கட்டபொம்மன் கதையைப் பாடச் சொல்லிக் கேட்டாள். தேசிங்கு ராஜன் சரித்திரத்தைப் படிக்கச் சொல்லி மகிழ்ந்தாள்.

இரண்டு நாட்கள் சென்றன.

மாணிக்கம் தன் வீட்டுக் குடிசைக்கு வெளியில் குறுக்கும் நெடுக்குமாக நடை போட்டுக்கொண்டிருந்தான். கிழவன் நடேசன் கவலையோடு உட்கார்ந்திருந்தான். "பயப்படாதே மாணிக்கம்! காவேரிக்குச் சுகப் பிரசவம் தான் ஏற்படும். காளியம்மன் நம்மைக் கைவிட மாட்டாள்" என்றான் கிழவன் நடேசன்.

குடிசைக்குள்ளிருந்து பயங்கர அலறல்கள் கேட்டுக் கொண்டிருந்தன. ஒவ்வொரு அலறல் சத்தத்தின் போதும் மாணிக்கம் துடி துடித்து விடுவான். நடேசனோ "கட வுளே! காளியம்மா!" என்று முணு முணுப்பான். சில மணி நேரம், இல்லை, ஒரு முழு நாள் இப்படியாகக் கழிந்தது.

ஏழைகள் தானே! அவர்கள் கடவுளை நம்புவதைத் தவிர வேறு வழியில்லை. பணம் படைத்திருந்தால் டாக் டர்களை வரவழைத்துப் பார்த்திருக்கலாம். அல்லது பக்கத் தில் உள்ள பட்டணத்து ஆஸ்பத்திரிக்காவது எடுத்துக் கொண்டு போயிருக்கலாம். காவேரி பிரசவ வேதனையால் துடித்துக் கொண்டிருக்கிறாள். கிராமத்து மருத்துவச்சி குழந்தை வரும் என்று உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவள் என்ன செய்வாள். அவளுக்குத் தெரிந்ததும் அவ் வளவுதான். கிராமங்களில் எல்லாம் பிரசவ விடுதிகள் ஏற் பட்டுக் கிராம மக்கள் பயமில்லாமல் பெற்றுப் பிழைக்கும் நாள் எந்நாளோ? அந்த நாள் சமீபத்தில் இருக்குமா?

கடைசியில் அந்தக் குடிசை வீட்டுக்குள்ளிருந்து "குவா!" "குவா!" என்ற அமுத கீதம் கேட்டது. மாணிக் கத்தின் முகத்தில் ஒரு மகிழ்ச்சி ஏற்பட்டது. கிழவன் நடேசன் ஒரு தரம் மீசையை ஒதுக்கிவிட்டு நிமிர்ந்து உட்கார்ந்தான். "ஆகா!" என்றான். "குவா!" "குவா!" என்ற குழந்தையின் மோகன கீதம் இப்பொழுது இன்னும் கொஞ்சம் அதிகமாகக் கேட்டது.

மருத்துவச்சி வெளியில் வந்தாள். மீசையை முறுக்குவது போலச் சைகை செய்த வண்ணம் ஆண் குழந்தை என்றாள்.

மாணிக்கமும் கிழவனும் மகிழ்ந்து போனார்கள்.

கிராமத்தில் ஏதோ மாடு கன்று போடுவது போல; ஆடு குட்டி போடுவது போல; காவேரி ஒரு ஆண் மகவை ஈன்றாள். அவ்வளவுதான். அவள் பிரசவத்துக்காக தனி ஏற்பாடு ஒன்றும் கிடையாது. வைத்திய வசதிகள் கிடையாது. எப்படியோ அவளுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்து விட்டது.

பிரசவத்தில் ஏதோ எக்கச் சக்கம் ஏற்பட்டுவிட்டது. அதனால் காவேரிக்கு ஜுரம் வந்து ஜன்னி கண்டுவிட்டது. கவனிப்பதற்கு வேண்டிய பண வசதி தான் இல்லையே. "இந்தப் பாழாய்ப்போன நாட்டில் ஏழைகளுக்கு என்ன வசதி கிடைக்கப் போகிறது! எந்த டாக்டர் ஆபத்துக்குப் பணம் இல்லாமல் வந்து உதவப் போகிறார்" என்று அங்கலாய்த்தான் மாணிக்கம். கிழவன் நடேசன் காளியம்மாளை வேண்டிக் கொண்டு ஒரு கால் ரூபாயை மஞ்சள் துணியில் முடிந்து காவேரியின் கையில் கட்டி வைத்தான். "அம்மா தாயே! என் மகளைக் காப்பாற்று" என்று மன முருக அம்மனை வேண்டிக் கொண்டான்.

அம்மன் என்ன செய்யும்? ஜுரத்துக்கு வந்து மருந்தா கொடுக்கும்? ஏதோ நாம் மருந்து கொடுத்தால் அதற்குத் தெய்வம் பக்கத் துணை இருந்து பராமரிக்கும். ஒன்றுமே செய்யாமல் தெய்வமே என்றால் போதுமா?

காவேரியின் குலம் தழைக்கக் காளியம்மன் அவளுக்கு ஒரு ஆண் குழந்தையைக் கொடுத்து விட்டாள். தான் பெற்றக் குழந்தையைக் கண் திறந்து பார்க்காமலே கண்ணை மூடிவிட்டாள். காவேரி இவ்வுலகை விட்டுச் சென்று விட்டாள்.

மாணிக்கம் வயிற்றிலும் வாயிலும் அடித்துக்கொண்டு அழுதான். "காவேரி? என்னை மட்டும் விட்டு விட்டுப் போய்விட்டாயே? இதோ உன்னோடு நானும் வருகிறேன்!" என்று கூப்பாடு போட்டான். தலையை தரையில் மோதிக் கொண்டு குய்யோ முறையோ என்று கதறினன். கீழே விழுந்து அழுது புரண்டான்.

நடேசன் வாய்க்குள்ளேயே அழுதான். அவனுடைய ஒரே மகள் அவனை விட்டுப் போய்விட்டாள். "ஐயோ! மகளே! என்னை மோசம் செய்து விட்டாயே" என்று வாய் விட்டுப் புலம்பினுள். அந்த பச்சிளம் பாலகனைத் தூக்கித் தன் மடியில் வைத்துக் கொண்டு கலகலவென்று கண்ணீர் விட்டான்.

இதற்குள் காவேரி இறந்த செய்தி கிராமம் எங்கும் பரவி விட்டது. கிராமத்து ஜனங்கள் வந்தனர். காவேரியின் ஈமச் சடங்கைச் செய்து முடித்தனர். மாணிக்கத்தையும் கிழவனையும் தேற்றினுர்கள். அவர்களை யாரால் தேற்ற முடியும்? எந்த மொழியால் அவர்களுக்கு ஆறுதல் கூறமுடியும்? முடியாது! முடியவே முடியாது!

மறு நாள்.

காவேரி இல்லாமல் காலியாகக் கிடந்த குடிசையைப் பார்த்தான் மாணிக்கம். அவள் அணிந்திருந்த ஆடைகள் அலங்கோலமாகக் கிடந்ததைப் பார்த்தான். அவள் பெற்ற அந்தச் சிசுவைப் பார்த்தான். மீண்டும் கதற ஆரம்பித்து விட்டான். அந்தச் சின்னஞ்சிறு சிசுவை எடுத்துக் கொண்டு "ஹோ!" என்று அழுதான். அவனுக்குத் தேறுதல் சொல்லும் அளவுக்குக் கிழவன் நடேசனுக்குத் தெம்பு இல்லை. அவனும் கண் கலங்கிய வண்ணம் கற்சிலை போல உட்கார்ந்து விட்டான். அவன் வேறு என்னதான் செய்வான்?

காவேரியின் பிரிவை மாணிக்கத்தால் தாங்க முடிய வில்லை. அவள் இன்றி அவனுக்கு உயிர் வாழ இஷ்ட மில்லை. அப்படிச் சிலர் தன் மீது அன்பு கொண்டவர்கள் மீது பிரியம் கொண்டு அதற்காக எந்தத் தியாகத்தையும் செய்யத் துணிந்து விடுகிறார்கள்.

மாணிக்கம் என்ன நினைத்தானோ! என்ன செய்து கொண்டானோ! ஆத்திரத்தில், மனைவியைப் பிரிந்த ஏக் கத்தில் எதையாவது தின்று உயிரைப் போக்கிக்கொள்ள நினைத்தானோ! இல்லை அவளையே நினைத்து உயிரை விட்டு விடுவது என்று முடிவு செய்தானோ? ஒன்றும் புரியவில்லை.

காவேரி உயிர் எந்த இடத்தில் பிரிந்ததோ அதே இடத்தில் போய்க் காலை நீட்டிப் படுத்தான். சின்னக் குழந்தையைப்போல விம்மி விம்மி அழுதான். சட்டென்று எழுந்தான். அந்தப் பச்சிளம் பாலகனைப் பார்த்துப் பார்த் துப் பரிதாபமாகக் கதறினான். மீண்டும் காவேரி உயிர் விட்ட அதே இடத்தில் போய்ப் படுத்துக் கொண்டான்.

இப்படி மூன்று நாட்கள் அன்னம் தண்ணீர் இல்லா மல் படுத்துக் கிடந்தான். நான்காம் நாள் மாலை. அங்கு படுத்தபடியே இங்கு மங்கும் புரண்டான். இரண்டு மூன்று தரம் வாந்தி எடுத்தான்.

மாணிக்கத்தின் இந்த நிலையைக் கண்டு கிழவன் திடுக் கிட்டான். அவன் உடல் பயத்தால் நடுங்கியது. மாணிக் கத்தின் தோளைப் பிடித்துக் கொண்டு "என்ன மாணிக்கம் ஏன் இப்படி?" என்று கேட்டான். அவன் குரல் தழு தழுத்தது.

"ஒன்றுமில்லை. என்னை விட்டுவிடுங்கள்" என்றான் மாணிக்கம். அதற்கு மேல் அவனால் பேச முடியவில்லை. மேல் மூச்சு வாங்கியது.

"மாணிக்கம் உடம்புக்கு என்ன?" என்று படபடப் போடு கேட்டான் நடேசன். அவன் நெற்றியில் கையை

வைத்துப் பார்த்தான். நெருப்புச் சட்டி போல கொதித்தது. நடேசன் உண்மையிலேயே பயந்து விட்டான். அவனுக்கு என்ன செய்வது ஏது செய்வது என்று ஒன்றுமே புரியவில்லை. திகைத்து விட்டான்.

"என் குழந்தை...? என் குழந்தை...!" என்று கத்திய படி கையை நீட்டினான் மாணிக்கம்.

நடேசன் அந்த ஐந்து நாள் சிசுவை எடுத்து வந்து அவனிடம் கொடுத்தான்.

மாணிக்கம் மிகுந்த சிரமத்துடன் ஆசையோடு குழந்தையை வாங்கிப் பார்த்தான். உடல் குலுங்கக் குலுங்க அழுதான். நடேசனும் அழுதான்!

"இந்தக் குழந்தையைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு உங்களுக்குத்தான்" என்று சொல்லி மாணிக்கம் குழந்தையைக் கிழவனிடம் கொடுத்தான். அதற்குமேல் அவனால் பேச முடியவில்லை.

மாணிக்கம் அப்படியே சோர்ந்து கிடந்தான்.

இந்தச் சமயத்தில் தெருவில் யாரோ ராகம் போட்டுப் பாடுவது கேட்டது. "காயமே இது பொய்யடா! காற்றடைத்த பையடா!" என்று நீட்டி இழுத்தான்.

மாணிக்கம் படுத்துக் கிடந்ததைப் பார்த்தால் அந்தப் பாட்டைக் கவனமாகக் கேட்பதுபோலிருந்தது. பாட்டைப் பாடியவன் யாரோ ஒரு பிச்சைக்காரன். வேளை கெட்ட வேளையில் இப்படி விபரீதமாகப் பாடுகிறானே என்று கிழவன் நடேசன் வருந்தினான்.

மாணிக்கம் "தண்ணீர்! தண்ணீர்!" என்று கையைக் காட்டினான்.

கிழவன் அவசரம் அவசரமாக ஒரு டம்ளர் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தான்.

மாணிக்கம் ஒரு வாய் தண்ணீர் குடித்தான். அண்ணாந்து பார்த்தான். கூரையில் இருந்த ஓட்டை வழியாக மேலே வானத்திலே கணக்கற்ற நட்சத்திரங்கள் மின்னிக் கொண்டிருந்தது தெரிந்தது. ஒரு நட்சத்திரம் அவனைப் பார்த்து கண்ணைச் சிமிட்டுவது போலிருந்தது. அது தானாக நகர்ந்து அவனை நெருங்கி வர ஆரம்பித்தது. திடீரென்று அந்த நட்சத்திரம் காவேரியாக மாறி விட்டது; இல்லை — காவேரிதான் நட்சத்திரமாகி விட்டாளோ? அவனை அவள் நெருங்கி நெருங்கி வந்தாள். அவனைக் கை நீட்டி அழைத்தாள். மாணிக்கமும் காவேரியின் கையைப் பற்றிக் கொண்டு வான மண்டலத்தில் அவளைப் பின் பற்றிச் செல்ல முயன்றான். இந்த இன்பமான காட்சியிலிருந்து விலக விரும்பவில்லையோ என்னமோ? அவன் தன் கண்களை மூடிக்கொண்டான். அவன் முகத்தில் அமைதி நிலவி இருந்தது.

அடுத்த கணம் அவன் தலை தரையில் உருண்டு விட்டது. கையில் இருந்த தண்ணீர் டம்ளர் கீழே விழுந்து விட்டது. எரிந்து கொண்டிருந்த அகல் விளக்கு நின்று விட்டது. மாணிக்கம் காவேரியை தன் அருமை மனைவியைத் தேடிப் போய்விட்டான்.

நடேசன் அந்த அனாதைக் குழந்தையை எடுத்துக் கையில் வைத்துக்கொண்டு கத்தினான், கதறினான். அழுதான், அலறினான். அக் குழந்தையை மடியில் வைத்துக் கொண்டு ஒரு நாள் முழுதும் கற்சிலை போல் உட்கார்ந்திருந்தான். என்ன நினைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தானோ?

அடாடா! ஒரு குடும்பம் நேற்று சந்தோஷமாக இருந்த குடும்பம். இன்று இருந்த இடம் தெரியாமல் போய் விட்டது. இதுதான் வாழ்க்கை. இந்த வாழ்க்கையில் தான் எத்தனை பொறாமை, பூசல்! வஞ்சகம் சூழ்ச்சி,

பொய், திருட்டு. ஐயோ! இன்னும் எத்தனை எத்தனையோ கொடுமைகள்!

மறுநாள் கிழவனையும் குழந்தையையும் காணவில்லை. எங்கு போனான் என்று அந்தக் கிராமத்தில் உள்ள யாருக்குமே தெரியவில்லை!

இதைக் கேட்ட சிறுவன் செல்வராஜன் "அப்படியானால் இனிமேல் நடேசன் வரவே மாட்டானா?" என்று கேட்டான். வாய்விட்டுக் கத்தினான். நடேசனின் ஓலைக் குடிசையை நோக்கி ஓட்டமாக ஓடினான்.

செல்வராஜனைச் சமாதானப் படுத்துவதற்குள் பண்ணையாருக்கும் அவர் மனைவிக்கும் போதும் போதும் என்றாகி விட்டது.

* * *

வருஷங்கள் பல உருண்டு ஓடிவிட்டன. எல்லாரும் நடேசனை மறந்துவிட்டனர். வாழ்க்கை எல்லாம் உழைத்து உலக சரித்திரமே கண்டறியாதபடி, கத்தியின்றி ரத்தமின்றி இந்தப் பெரிய பாரத நாட்டுக்குச் சுதந்திரம் வாங்கித் தந்த காந்தி மகானையே மறந்து விட்டார்களே! சாதாரணப் பண்ணையாளை மறப்பதில் என்ன ஆச்சரியம்.

ஆனால் செல்வராஜன் நடேசனைப் பற்றி ஏதாவது சொல்லிக் கொண்டிருப்பான். அவனும் வர வர அவனைப் பற்றிச் சொல்லுவதைக் குறைத்துக் கொண்டான். இப்பொழுது அவன் பெரிய பையன், விவரம் தெரிந்தவன். தன்னுடைய விளையாட்டு, விஷமம், குறும்புத்தனம் எல்லாவற்றையும் விட்டு விட்டான். பள்ளிக்கூடப் புத்தகங்களைப் படிக்க ஆரம்பித்துவிட்டான். நடேசன் சொல்லி வந்த கட்டபொம்மன் சரித்திரத்தையும், வீரன் தேசிங்கு ராஜனின் சரித்திரத்தையும் படித்து ரசிக்க ஆரம்பித்து விட்டான். அப்பொழுதெல்லாம் அவனுக்கு நடேசனின்

நினைவுவரும். "அவன் இருந்தால் அவனுக்கு இப்பொழுது இந்தக் கதைகளைப் படித்துக் காண்பிப்பேன். நடேசன் சந்தோஷப்படுவான்" என்று நினைப்பான்.

* * *

**வ**ஸந்த காலம் வந்தது. ஊரில் உள்ள புஷ்பச் செடிகள் எல்லாம் ஒன்று கூடிப் பேசிக் கொண்டு பூத்துக் குலுங்கித் தள்ளின. தென்றல் காற்று ஜிலு ஜிலு என்று வீசிக் கொண்டிருந்தது. பக்கத்தில் அடர்ந்து நிறைந்திருந்த மாந்தோப்புக்கு மத்தியில் தென்றல் காற்று புகுந்து வந்ததால் 'உஸ்'ஸென்று ஒரு ஓசை வந்தது. அது யாரோ நமக்கு வேண்டியவர்கள் வருவதை முன் கூட்டியே தெரிவிப்பது போலிருந்தது.

செல்வராஜன் அவன் தோட்டத்திலிருந்த மேடை மீது வானத்தைப் பார்த்த வண்ணம் இயற்கைக் காட்சியை அனுபவித்துக் கொண்டு மௌனமாக உட்கார்ந்திருந்தான். தூரத்தில் கிழவன் நடேசனின் ஓலைக் குடிசை இருந்த இடம் காலியாகக் கிடந்தது. அந்தக் காலி இடத்தைப் பார்த்ததும் அவன் மனசை என்னவோ செய்தது. அவன் மெதுவாக எழுந்திருந்து அந்த இடத்துக்குச் செல்ல முயன்றான்.

அவன் மனதில் கிழவன் நடேசன் பாடும் கட்டபொம்மனின் வீராவேசம் நினைவுக்கு வந்தது.

**"வானம் பொழியுது; பூமி விளையுது; மன்னவன்**
**காணிக்குக் கிஸ்தி ஏது?"**

என்ற வரிகளை என்ன அற்புதமாகப் பாடுவான் என்று நினைத்தான். ஏதோ தன்னைத் தாக்கியதுபோல் அப்படியே ஸ்தம்பித்து நின்றான்.

அதே பாட்டை யாரோ பாடுவது காற்றிலே மிதந்து வந்தது. அந்தப் பாட்டுக்கு மாந்தோப்பில் இருந்து வந்த

'உஸ்' ஸென்ற தென்றல் காற்றின் இனிய சத்தம் சுருதி கூட்டியது போலிருந்தது. பாட்டு வர வர நெருங்கி கேட்டது. அவனுக்கு எங்கோ யாரோ பாடிக் கேட்ட குரல் நினைவுக்கு வந்தது. யாருடைய குரல் என்று ஊகிக்க முடியவில்லை. பாட்டு இன்னும் சமீபத்தில் கேட்டது. ஆம்; அதே குரல்! அவனுக்குப் பழக்கமான குரல்தான்!

செல்வராஜன் வாரிச் சுருட்டிக் கொண்டு ஓடினன். கிழவன் நடேசன்! பண்ணையாள் நடேசன்! நடேசனே தான்! ஆடி ஆடி நடந்து வந்து கொண்டிருந்தான்.

அவனை ஒரு தரம் பார்த்தான். அடுத்த கணம் "நடேசா! என்னை மறந்து விட்டாயா?" என்று கேட்டு அணைத்துக் கொண்டான். மாசற்ற அன்பல்லவா? ஏற்றத் தாழ்வைப் பார்க்கவில்லை.

"ராஜா! என் ராஜா! உன்னை நான் மறக்கவில்லை. உன்னை மறக்கவே மாட்டேன்" என்று தன்னைக் கட்டிப் பிடித்திருந்த செல்வராஜனை அணைத்துப் பிடித்துக்கொண்டான் கிழவன்.

கிழவனின் அன்புக் குரலிலும், அவனுடைய அரவணைப்பிலும் அப்படியே மயங்கி நின்றுன் செல்வராஜன். அவன் வாயிலிருந்து வார்த்தைகளே வரவில்லை. கிழவனை ஆவலோடு பார்த்தான்.

கிழவன் நடேசன் முன்போலில்லை. இன்னும் கிழவனுகி விட்டான். முதுகு சற்று வளைந்திருந்தது. கண்கள் எங்கோ கிணற்றுக்குள் இருப்பதுபோல் கிடந்தன. முகம் மேலும் சுருங்கிக் கருத்துக் கிடந்தது. இருந்தாலும் அதில் அனுபவ அறிவு மிளிர்ந்து கொண்டிருந்தது. அகலத் திறந்த கண்களோடு அவனும் செல்வராஜனைப் பார்த்தான். அவனுக்குப் பின் ஒரு சிறுவன் நின்று கொண்டு இந்தக் காட்சியை வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தான்.

செல்வராஜன் கிழவனையும் அந்தச் சிறுவனையும் மாறி மாறிப் பார்த்தான். "இது யாரு?" என்று அந்தச் சிறுவனைச் சுட்டிக் காட்டிக் கேட்டான்.

கிழவன் நடேசனின் முகத்தில் ஒரு பெரிய வேதனைக் குமுறுவது அவன் சுருங்கிய முகத்தில் நன்ருகத் தெரிந்தது. அவன் கண்களில் ஒரு கலக்கம் ஏற்பட்டது. அவன் தளர்ந்த உடல் வெட வெட வென்று ஆட ஆரம்பித்து விட்டது. கிழவன் சட்டென்று கீழே உட்கார்ந்தான். முழங்காலில் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மி விம்மி அழுதான். சிறிது நேரம் கழித்து அருகில் நின்று கொண்டிருந்த சிறுவனை ஆசையோடு பற்றி அணைத்துக் கொண்டான். பெருகி வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டே "இவன் என் மகள் காவேரியின் மகன். என் அருமைப் பேரன். தாய் தந்தையற்ற அநாதை. இவன் பெயர் வேலன்" என்ருன். அவன் குரல் தழதழத்தது. நெஞ்சு ஒரு முறை விம்மித் தணிந்தது.

இதைக் கேட்டதும் செல்வராஜன் மனத்தை என்னவோ செய்ய ஆரம்பித்து விட்டது. ஏதோ இனந் தெரியாத சோகம் அவனை வந்து கவ்விக் கொண்டது. அவனும் பொல பொல வென்று கண்ணீர் விட ஆரம்பித்து விட்டான்.

தென்றல் காற்று சற்று வேகமாக அடித்தது. பக்கத்திலிருந்த மாந்தோப்புக்குள் அந்தக் காற்று நுழைந்ததால் மாமரத்தின் கிளைகள் ஒன்ருேடு ஒன்று மோதிச் சலசலத்தன. அது கிழவனின் துயரத்தைக் கண்டு தாங்க முடியாமல் சடபட வென்று துடிப்பது போல இருந்தது.

கிழவன் நடேசனும் அவன் பேரன் வேலனும் பண்ணையார் மகன் செல்வராஜனும் சிறிது நேரம் மௌனமாக உட்கார்ந்திருந்தனர்.

சுற்றிலும் ஒரே சோர்வும் இருளும் சூழ்ந்து விட்டது. வானத்தில் மெதுவாக மிதந்து சென்ற மேகப் படலங்கள் அவர்களைப் பார்த்து நிற்பது போல அவர்களுக்கு நேரே வந்து சற்று நின்று விட்டுச் சென்றன. தென்றல் காற்றின் வேகம் குறைந்து விட்டதால் மாந்தோப்பின் இலைகள் மட்டும் லேசாக அசைந்தன. அது இவர்களைப் பார்த்து ஏதோ முணு முணுப்பது போலிருந்தது.

தூரத்தில் பண்ணையார் யாரையோ அதட்டும் குரல் நன்ருகக் கேட்டது. உடனே செல்வராஜன் உணர்ச்சி பெற்ருன். தன் கண்களைத் துடைத்துக் கொண்டு சட்டென்று எழுந்தான்.

"நடேசா! வா வீட்டுக்குப் போகலாம்" என்று நடேசனையும் அவன் பேரன் வேலனையும் அழைத்துக் கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டான். வழியில் அவர்கள் வாய் திறந்து ஒன்றும் பேசாமல் மௌனமாகவே சென்றனர்.

பண்ணையாரும் அவர் மனைவி காமதேனுவும் தங்கள் வீட்டு வாசற்படியில் நின்று அவர்கள் வருவதை ஆச்சரியத்தோடும் வியப்போடும் இமைப்பதையும் மறந்து பார்த்துக் கொண்டிருந்தனர்.

"அம்மா! நடேசன் வந்திருக்கான் அம்மா!" என்று குதூகலத்தோடு சொன்னுன் செல்வராஜன். அவனுக்கு இருக்கும் சந்தோஷத்தை பார்த்துப் பண்ணையாரும் அவர் மனைவியும் ஆச்சரியப்பட்டுப் போனுர்கள். தம் குழந்தைகளின் சந்தோஷத்தைப் பார்த்து மகிழ்ந்து திருப்தியடையாத பெற்ருேர்களும் இருப்பார்களா?

நடேசன் பண்ணையாரையும் அவர் தர்ம பத்தினியையும் பார்த்தவுடன் கையெடுத்துக் கும்பிட்டான். நீண்ட காலத்துக்குப் பிறகு பார்ப்பதால் அவர்களைப் பார்க்கும்

போது மிகுந்த திருப்தியடைந்தான் நடேசன். "இவர்கள் தான் நம் எஜமான், கும்பிடுடா!" என்று தன் பேரன் வேலனைப் பார்த்து அன்போடு சொன்னான்.

அந்தச் சின்னஞ் சிறு பாலகனும் தன் குஞ்சுக் கைகளைத் தூக்கிக் கும்பிட்டான்.

"நடேசா! வா! வந்து உட்காரு" என்றார் பண்ணையார். அவனைப் பார்த்ததும் அவர் மனசை என்னவோ செய்தது. அவர் நெஞ்சில் என்ன என்னவோ உணர்ச்சிகள் உண்டாயின. அவரால் ஒரு நிலையில் இருக்க முடியவில்லை. ஏதோ திணறிக் கொண்டிருந்தார். நடேசனின் குற்றமற்ற அன்புதான் பண்ணையாரை அப்படிப் பணிய வைத்துக் கொண்டிருந்தது.

நடேசன் தன் பேரன் வேலனுடன் பண்ணையார் வீட்டுத் தாழ்வாரத்தில் உட்கார்ந்தான்.

"காமதேனு! நடேசன் எப்படி மாறிப் போய் விட்டான் பார்த்தாயா? அந்தச் சிறுவனைப் பார்த்தால் அலைந்து திரியும் பிள்ளைபோலவே இல்லையே! ஏதோ நிழலில் வளர்ந்த குழந்தை மாதிரி யல்லவா இருக்கிறான். முகத்தில் என்ன களை. இந்தக் குழந்தையைப் பார்த்துச் சந்தோஷப்படக் காவேரிக்குக் கொடுத்து வைக்கவில்லை" என்றார் பண்ணையார் தம்மனைவியைப் பார்த்து.

"ஆமாம்! ஐந்து வருஷங்களாக எங்கெல்லாம் அலைந்தானோ! என்ன கஷ்டப்பட்டானோ? இத்தனைக்கும் மத்தியில் இந்தக் குழந்தையையும் வளர்த்திருக்கிறானே! எப்படித்தான் வளர்த்தானோ?" என்று வியந்து போனாள் காமதேனு.

ஒரு தாயாருக்குத்தான் தெரியும் குழந்தையை வளர்ப்பதில் உள்ள கஷ்டங்கள். எல்லா வசதியுடனும் குழந்தையை வளர்க்கும் போதே அதற்கு ஒன்று போய் ஒன்று

வந்து கொண்டிருக்கும். ஒரு வசதியுமில்லால் ஒருவன் குழந்தையை நல்ல முறையில் வளர்த்திருந்தால் அதைக் கண்டு ஒரு தாய் வியக்காமல் எப்படி இருப்பாள்?

தன் காலம் எல்லாம் பழகிய அந்த இடத்தைக் குழி விழுந்த கண்களால் பார்த்தான் நடேசன். அவன் முகத்தில் ஒரு தெளிவு ஏற்பட்டது. அவன் சுருங்கிய முகத்தில் தான் பழகிய இடத்தைப் பார்த்து மகிழ்வதால் ஏற்பட்ட இன்ப உணர்ச்சி நன்ருகத் தெரிந்தது.

செல்வராஜன் கிழவனுக்கு எதிரில் உட்கார்ந்து அவனே விழுங்கி விடுவது போலப் பார்த்துக் கொண்டிருந்தான். காமதேனு தன் வேலைகளைக் கவனிக்க உள்ளே சென்று விட்டாள். பண்ணையார் மட்டும் கிழவன் நடேசனிடம் பேசிக் கொண்டிருந்தார்.

"இத்தனை வருஷங்களாக எங்கேயெல்லாம் போனய்? என்னிடம் சொல்லிக் கொள்ளாமல்கூடப் போய் விட்டாயே?" என்று அனுதாபத்தோடு கேட்டார்.

"என்னத்தைச் சொல்லிக்கிறதுங்க எஜமான்? என் அருமை மகள் காவேரி என்னை இப்படி கைவிட்டு விடுவாள் என்று நான் கனவிலும் கருதவில்லை. அவளுக்குப் பிறகு எனக்கு உயிர் வாழவே இஷ்டமில்லை. வேண்டியவர்கள் முகத்தில் விழிக்கவே தைரியமில்லை. என் வாழ்நாளில் என் மனசறிந்து நான் ஒருவருக்கும் எந்த விதமான திங்கும் செய்ததில்லை. செய்யக்கூட நினைத்ததில்லை. அப்படிப்பட்ட எனக்குக் கடவுள் எத்தனைக் கஷ்டங்களைக் கொடுத்து விட்டார். இந்தக் குழந்தைக்காக நான் உயிர் வைத்துக் கொண்டிருக்கிறேன். தெய்வத்திற்குக் கண் இல்லை எஜமான். பட்ட மரம் நான் இருக்கிறேன்; என்னை விட்டு விட்டுப் பச்சைக் கொடி போன்ற என் மகளைக் கொண்டு போய் விட்டானே பாழும் யமன்!" என்ருன்.

அவன் நெஞ்சைக் கசக்கிப் பிழியும் வேதனை அவன் கண்களில் நீராகப் பெருகி வழிந்தது. மேலே அவனால் ஒன்றும் பேச முடியவில்லை.

உட்கார்ந்திருந்த சிறுவன் வேலன் எழுந்திருந்தான். ''தாத்தா! பசிக்குது!'' என்றான்.

சிறுவனை அணைத்துப் பிடித்துக் கொண்டு ''சரி! நான் போய் வருகிறேன் எஜமான். குழந்தை ராஜாவைப் பார்க்கணும் பார்க்கணும் என்று மனசு துடித்தது. சாவதற்குள் ஒரு முறை ராஜாவைப் பார்த்து விடணும் என்று நினைத்தேன். பாசம் விடவில்லை. அதான் வந்தேன். என் ராஜாவைப் பார்த்து விட்டேன். நான் வருகிறேன்!'' என்று சொல்லி எழுந்தான்.

பண்ணையாருக்கு ஒரு கணம் ஒன்றும் புரியவில்லை. நம் நடேசனா இப்படி மாறிவிட்டான். வந்தான் பார்த்தான் கிளம்பி விட்டானே! நம்மிடம் ஏதாவது உதவி கேட்பான் என்று நினைத்தால் சாப்பிடாமல்கூடக் கிளம்பி விட்டானே என்று நினைத்து வியந்தார்.

''நடேசா! சாப்பிட்டு விட்டுப் போ! இரவு இங்கு தங்கிக் காலையில் போகக்கூடாதா?'' என்று கெஞ்சும் குரலில் கேட்டான் செல்வராஜன்.

''ஆமாம், நடேசா! சாப்பிட்டு விட்டு இரவு தங்கி விட்டுப் போ. எத்தனையோ நாட்களுக்குப் பிறகு வந்திருக்கிறாய். ஒரு இரவு தங்கி விட்டுத்தான் போயேன்'' என்றார் பண்ணையார்.

''ஆகட்டும்!'' என்றான் நடேசன்.

பண்ணையார் வீட்டுச் சமையல்காரி நடேசனுக்கும் சிறுவன் வேலனுக்கும் இலை போட்டுச் சாப்பாடு போட்டாள். செல்வராஜன் அருகில் உட்கார்ந்து கொண்டு

உபசரித்துக் கொண்டிருந்தான். நடேசன் மிகுந்த ஆவலுடன் சாப்பிட்டான். விலாப்புடைக்கச் சாப்பிட்டான். சிறுவன் வேலனும் வேண்டிய மட்டும் சாப்பிட்டான்.

உண்ட களைப்பில் வேலன் கண் உறங்கிவிட்டான். இரவு முழுதும் செல்வராஜனும் கிழவன் நடேசனும் பேசிக் கொண்டிருந்தார்கள். செல்வராஜனுக்குக் கிழவன் தான் ஐந்து வருஷங்களில் பட்ட கஷ்டங்களை எல்லாம் சொன்னான். தன்னுடைய தேசிங்குராஜன் பாட்டும், கட்டபொம்மன் கதையும்தான் தன் வயிற்றுக்கு வழிகாட்டியது என்று சொன்னான். சிறுவன் வேலனை வளர்த்த கஷ்டங்களை எல்லாம் சொன்னான்.

"ஒரு தரம் வேலனுக்கு ஜுரம் வந்து விட்டது. நல்ல மழை வேறு. தங்குவதற்கும் இடம் கிடைக்கவில்லை. கஷ்ட காலத்தில் கொஞ்சம் நல்ல காலமும் இருந்தது. எப்படியோ குழந்தையை ஆஸ்பத்திரியில் சேர்த்துக் கொண்டார்கள். ஆஸ்பத்திரியில் பத்து நாட்கள் வேலன் உயிரோடு போராடினான். அந்த பத்து நாட்களும் நான் பட்ட வேதனையைச் சொல்லி முடியாது ராஜா!" என்றான். இதைச் சொல்லுவதற்குள் அவன் பல தடவை கண்ணீர் விட்டு விட்டான். அவன் மூச்சில் ஒரு சோர்வு இருந்தது.

தன் ஐந்து வருஷத்துக் கஷ்ட வாழ்க்கையை, சோக நிகழ்ச்சிகளை பண்ணையார் மகன் செல்வராஜனிடம் சொன்னதால், தான் ஏதோ விடுதலை பெற்றது போன்ற உணர்ச்சி நடேசனுக்கு ஏற்பட்டது. அவன் மனத்தில் இருந்த பெரிய பாரம் குறைந்து விட்டது போல் மகிழ்ந்தான். அவன் முகம் தெளிவாயிருந்தது.

ஆம்! உண்மைதானே! நம்முடைய துன்பத்தையும் துயரத்தையும், கஷ்டத்தையும் கவலையையும் யாரிடமாவது சொல்லிப் பகிர்ந்து கொண்டால்தான் மனத்தில் ஒரு அமைதி ஏற்படும். அதிலும் நம்மை உண்மையிலேயே

நேசிப்பவர்களிடம் சொல்லிக் கொண்டால் அதில் ஏற்படும் இன்பத்தை அனுபவித்தால்தான் உணர முடியும்.

செல்வராஜன் தான் பட்டணத்தில் படிப்பதாயும் இப்பொழுதெல்லாம் கிராமமே பிடிப்பதில்லை என்றும் படிப்பு முடிந்தவுடன் பட்டணத்திலேயே தங்கிவிடப் போவதாகவும் சொன்னான்.

இதைக் கேட்டதும் நடேசன் புத்துணர்ச்சி பெற்று நிமிர்ந்து உட்கார்ந்தான்.

''ராஜா! நான் சொல்வதைக் கேள்! இந்த ஐந்து வருஷங்களில் பல ஊர்களைச் சுற்றியிருக்கிறேன். பல தரப்பட்ட மனிதர்களிடம் பழகியிருக்கிறேன். என் அறுபது வருஷ வாழ்க்கையில் தெரிந்து கொள்ளாத பல புது விஷயங்களை இந்த ஐந்து வருஷத்தில் தெரிந்து கொண்டிருக்கிறேன். அதனால் நான் சொல்லுவதை நன்றாகக் கேள்! இந்த ஐந்து வருஷத்தில் நம் கிராமம் மிகவும் சீரழிந்து விட்டது. இதைப் பார்க்கும்போது என் மனசை என்னவோ செய்கிறது. இந்த ஊரின் பழைய குடிகள், எத்தனையோ தலைமுறையாக விவசாயத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் ஒருவரையும் கிராமத்தில் காணவில்லை. அவர்கள் வசித்து வந்த வீடுகள் குட்டிச் சுவர்களாய் நிற்கின்றன. ஒவ்வொருவருக்கும் நாலு ஐந்து காணி நிலங்கள் இருந்தன. இரண்டு ஜோடிக்குக் குறையாமல் உழவு மாடுகள் வைத்திருந்தனர். அவர்கள் வீட்டுக் களஞ்சியத்தில் எப்பொழுதும் நெல் இருக்கும். இப்போது அவர்கள் இங்கு காணவில்லை. பட்டணங்களுக்குச் சென்று விட்டார்கள். அங்கு என்ன சௌகர்யமாகவா இருக்கிறார்கள்? இல்லை. சிலர் கை வண்டி இழுக்கின்றனர். சிலர் தொழிற்சாலையில் வேலை செய்கின்றனர். சிலர் வெற்றிலைப்பாக்குக் கடை வைத்துக் கொண்டிருக்கின்றனர். அவர்களை எல்லாம் நான் பார்த்தேன். அவர்கள் வாழ்க்கையில் ஜீவன் இல்லை. சந்தோஷ

மில்லை. ஏதோ இயந்திரம்போல வாழ்க்கையை நடத்துகின்றனர். இதயத்தில் அன்பு வறண்டு போய் விட்டது. அவர்களால் கிராமமும் சீரழிந்து விட்டது. பட்டணங்களிலும் இடநெருக்கடி ஏற்பட்டு விட்டது'' என்றான் நடேசன்.

''இதற்கும் நான் படித்துவிட்டுப் பட்டணத்தில் தங்குவதற்கும் என்ன சம்பந்தம்?'' என்று கேட்டான் செல்வராஜன்.

''அதைத்தான் சொல்லப் போகிறேன் ராஜா! உங்களைப் போல் படித்தவர்கள், பணவசதி படைத்தவர்கள் கிராமத்தை விட்டே போகக் கூடாது. ஒரு பெரிய நாட்டில் கிராமத்தில் உள்ளவர்கள் கிராமத்திலேயே இருந்து கிராம நலனுக்குப் பாடுபடுவதுதான் தேச பக்தி. பட்டணம் பட்டணம் என்கிறார்களே அங்கு என்ன வசதி கிடைக்கிறது? ஏதோ பணம் படைத்தவர்கள் வேண்டுமானால் வசதியை விலை கொடுத்து வாங்கிக் கொள்ளலாம். சாதாரண மக்களுக்கு அங்கு காற்றோட்டமான வீடு கிடையாது. கிராமத்தைப் போல அமைதியான வாழ்க்கை கிடையாது. ஏதோ வைத்திய வசதிகள் வேண்டுமானால் கிடைக்கும். அதற்கும் பணம் வேண்டும். உங்களைப் போன்ற படித்த வசதி படைத்த வாலிபர்கள் பட்டணத்தில் இருப்பதைவிடக் கிராமத்திலே தங்கி உழவுத் தொழிலுக்கு உங்கள் படிப்பையும் புத்திசாலித்தனத்தையும் உபயோகப்படுத்தினால் உழவுத் தொழில் வளரும். நம் நாட்டு உணவுப் பிரச்னை தீரும். கிராமத்தில் இருக்கும் உழவர்களுக்கு இன்னும் கொஞ்சம் வசதிகள் செய்து கொடுத்தால் அவர்கள் பட்டணக் கரைக்குக் குடி போக ஆசைப்பட மாட்டார்கள். அப்படி அவர்கள் செல்ல முயன்றாலும் அதைத் தடுத்துக் கிராமங்கள் சீர்திருந்துவதற்கும் நீங்கள் தான் பாடுபட வேண்டும். நம் கிராமத்தில் இவ்வளவு இடம் கிடக்கிறதே இங்கே வீடு வாசலைக் கட்டிக்

கொண்டு சௌகர்யமாக இருக்கக் கூடாதா? இதை விட்டுவிட்டுப் பட்டணத்தில் போய் ஒரே இடத்தில் நெருக்கி அடித்துக் கொண்டு வாழ்பவர்களை நினைத்தால் எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது'' என்றான்.

''நடேசா! உன் யோசனைப்படியே செய்கிறேன். படித்துவிட்டுக் கிராமத்தில் வந்து உழவுத்தொழில் முன்னேற்றத்திற்குப் பாடுபடப் போகிறேன். படித்துவிட்டு என்ன செய்வது என்று தெரியாமல் திண்டாடிக் கொண்டிருந்த என் கண்களைத் திறந்து விட்டாய்'' என்று நன்றி உணர்ச்சியுடன் சொன்னான் செல்வராஜன்.

சாதாரண உழவனாக இருந்த நடேசன் இந்த ஐந்து வருஷ காலத்தில் எத்தனை விஷயங்களைத் தெரிந்துகொண்டிருக்கிறான். எவ்வளவு தெளிவாய் உலகைப் புரிந்து கொண்டிருக்கிறான். அவன் இந்த ஐந்து வருஷ காலத்தில் பெற்றிருக்கும் அறிவை எந்தப் பள்ளிக்கூடமும் அவனுக்குச் சொல்லிக் கொடுக்கவில்லை. எந்தக் கல்லூரியும் அவனுக்குக் கற்றுக் கொடுக்கவில்லை. கல்லூரியும் பள்ளிக்கூடமும் நம் நாட்டின் பண்பாட்டையும் கலாசாரத்தையும் நம் மக்களுக்கு எங்கே கற்றுக் கொடுக்கின்றன? கிழவனுக்கு அறிவு ஏற்பட்டிருக்கிறது என்றால் அது இந்த நாட்டின் பண்பு. அவன் அறிவு பள்ளிப் படிப்பால் பாழ்படவில்லை. அதனால் அவனுக்குப் பல விஷயங்களை எளிதில் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிந்தது.

பல இடங்களில் பல மனிதர்கள் மத்தியில் பழகியதால் ஏற்பட்ட அனுபவமே அவனுக்கு அறிவை ஊட்டிவிட்டது. அவன் படித்துப் பட்டம் பெற்ற மேதாவிகளைவிடத் தெளிவான அறிவைப் பெற்று விட்டான். அதைப் படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள், பண மமதை கொண்டவர்கள் வேண்டுமானால் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். அதனால் அவன் அறிவு குறைந்து விடவா போகிறது? உண்மை அழிந்தா போகும்?

கிழவன் நடேசன் செல்வராஜனுக்கு இன்னும் பலப் பல விஷயங்களை எடுத்துச் சொன்னான். செல்வராஜனும் எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டான். ஒரே இரவில் அவன் பல விஷயங்களைத் தெரிந்துகொண்டான். பள்ளிக்கூடப் படிப்பில் பெற முடியாத பல உண்மைகளை உணர்ந்து கொண்டான். அவன் இளம் உள்ளத்தில் கிழவன் சொன்னதெல்லாம் பசுமரத்து ஆணிபோல ஆழப் பதிந்து விட்டது.

மறு நாள் காலையில் அங்கிருந்து கிளம்பி விட்டான். பண்ணையாரும் செல்வராஜனும் எவ்வளவோ தடுத்தும் கேட்காமல் கிளம்பி விட்டான். கடைசியில், "இனிமேல் எப்பொழுது வருவாய்?" என்று கேட்டான் செல்வராஜன்.

"சௌகரியப்படும் பொழுதெல்லாம் வர வேண்டியது தான்" என்று சொல்லி விட்டுச் சிறுவன் வேலனை அழைத்துக் கொண்டு புறப்பட்டான். அவன் கூனிய உருவம் மறையும் வரையில் பார்த்துக் கொண்டே இருந்தான் செல்வராஜன்.

நடேசனுக்கு மாட்டுக்காரக் கண்ணுசாமியைப் பார்க்க வேண்டும்போலிருந்தது. அவன் வீட்டைத் தேடி ஆவலோடு சென்றான்.

கண்ணுசாமி வீட்டுக்கு அருகில் சென்றதும் அவன் வீட்டிலிருந்து விம்மி அழும் குரல் கேட்டது. நடேசன் ஒரு கணம் அந்த வீட்டுக்குப் போகலாமா வேண்டாமா என்று யோசித்தான். பிறகு மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு சென்றான்.

மாட்டுக்காரக் கண்ணுசாமி அவன் மனைவியை நன்றாக அடித்து விட்டு வந்து உட்கார்ந்திருந்தான். அவன் உதடுகள் கோபத்தால் நடுங்கிக் கொண்டிருந்தன. முகம்

கோரமாக காட்சி அளித்தது. நெற்றியின் இரண்டு பொட்டுக்களிலும் நரம்புகள் புடைத்திருந்தன.

"என்ன கண்ணுசாமி! சௌக்கியமா?" என்று அடக்கமாகக் கேட்டுக் கொண்டே உட்கார்ந்தான் நடேசன். அவன் அருகில் சிறுவன் வேலனும் வந்து உட்கார்ந்தான்.

"யாரு! நடேச மாமாவா! வாங்க மாமா வாங்க!" என்று அடைபடும் குரலில் வரவேற்ருன் கண்ணுசாமி. சந்தோஷத்தை விட அவன் குரலில் வியப்புதான் அதிகமாயிருந்தது.

அப்படியே எழுந்து நடேசனைத் தழுவிக் கொண்டான் கண்ணுசாமி. அவன் முகத்தில் இப்பொழுது ஆனந்தமும் குதூகலமும் பிரதிபலித்தன. "எனக்கு உங்களைப் பார்க்கணும் பார்க்கணும் என்ற ஆசை அடித்துக் கொண்டிருந்தது" என்ருன். வேலனைச் சுட்டிக் காட்டி "இவன் தான் உங்கள் பேரனு?" என்று கேட்டான்.

"ஆமாம்" என்ருன் நடேசன்.

"பண்ணையார் மகன் ராஜாவைப் பார்க்கணும் என்று வந்தேன். பார்த்து விட்டேன். உன்னையும் பார்த்து விட்டுப் போகலாம் என்று வந்தேன். உனக்கு கல்யாணம் எல்லாம் ஆகி விட்டதாமே. ஏதாவது குழந்தை இருக்கிறதா?" என்று தொடர்ந்து கேட்டான் நடேசன்.

"கல்யாணம் எல்லாம் ஆகிவிட்டது. என் மனைவிக்கு இது எட்டாவது மாதம். அவளால் சில விஷயங்களைப் புரிந்து கொள்ள முடியவில்லை. காலையில் எழுந்தவுடன் எனக்குக் கோபம் மூட்டி விட்டாள். நன்ருக அடித்து விட்டேன்" என்ருன் கண்ணுசாமி. அவன் வாழ்க்கையில் இருந்த அலுப்பு அவன் குரலில் நன்ருகத் தெரிந்தது!

அவனுடைய பேச்சைக் கேட்டதும் நடேசன் சோர்ந்து களைத்துப் போனான். நரம்புகளை ரம்பம் கொண்டு அறுப்பது போலிருந்தது அவனுக்கு. கண்ணுசாமியைச் சற்று நேரம் அமைதியாகப் பார்த்தான். பிறகு சொன்னான்.

"இதோ பார் கண்ணுசாமி! நீ என்ன செய்கிறாய்? என்ன நேரும் என்று யோசித்தாயா? உன் மனைவியோ கர்ப்பிணி. நீ அவளை நன்றாக அடித்துவிட்டாய். அதனால் என்ன ஏற்படும் தெரியுமா? அவள் வயிற்றில் இருக்கும் குழந்தைக்கு அடிபட்டிருக்கும். அதனால் குழந்தை அங்கஹீனமாகப் பிறக்கலாம். பிறகு அக்குழந்தை வேலை செய்ய முடியாமல் தவிக்கும். பாடுபட்டு உழைக்கும் பாட்டாளிக்கு நல்ல வலுவான குழந்தை அல்லவா பிறக்க வேண்டும்?" என்றான்.

நடேசன் சொன்னதைக் கேட்டதும் கண்ணுசாமி திடுக்கிட்டான். "அப்படி ஒன்றும் ஏற்படாது. அவளுக்கு நல்ல உடம்பு" என்றான்.

"உன்னிடம் என்ன சொல்லுவது? உனக்காகத் தன் தாய் தந்தை சகோதர சகோதரிகள் எல்லோரையும் விட்டுவிட்டு உன்னோடு வாழ வந்த மனைவிக்கு நீ காட்டும் பரிவா இது? உனக்கு ஏதோ கஷ்டம் என்றால் அதற்கு உன் மனைவிதானா அகப்பட்டாள்? நீ செய்தது எவ்வளவு அநியாயம் என்று உனக்குத் தெரிகிறதா?" என்றான்.

கண்ணுசாமி தன் மூளையில் ஏதோ வந்து தாக்கியது போல் உணர்ந்தான். தான் செய்த மிருகத்தனமான செயலுக்காக வருந்தினான். "இனிமேல் இப்படி நடந்து கொள்ள மாட்டேன்" என்று நடேசனிடம் சத்தியம் செய்தான்.

"கண்ணுசாமி! நம்மிடம் பணம் இல்லை. நாமோ ஏழைகள். உன் மனைவி உன்னைக் கல்யாணம் செய்து

கொண்டதில் என்ன சுகத்தைக் கண்டாள்? அவளும் உன்னைப் போலவே வயல் வெளியில் நாளெல்லாம் உழைக்கிருள். வீட்டுக்கு வந்ததும் உனக்காகச் சமைக்கிருள். அவளுக்கு வேறு ஒன்றும் செய்யா விட்டாலும் அவளிடம் அன்பாகக் கூடவா நடந்து கொள்ளக் கூடாது? கண்ணு சாமி! உன் மனைவிடம் அன்போடு நடந்துகொள். அவள் காரியங்களை நீ அன்போடு பார்க்க ஆரம்பித்து விட்டால் உனக்குக் கோபமே வராது. உங்களுக்குக்கடவுள் கருணை புரிவார்" என்று சொல்லி விட்டு நடேசன் கிளம்பி விட்டான்.

* * *

**வ**ருஷங்கள் மூன்று ஓடிவிட்டது. இந்த மூன்று வருஷத்தில் நடேசன் தன் பேரன் வேலனுடன் பல இடங்களைச் சுற்றி வந்தான். அவனுக்கு எழுதப் படிக்கக் கற்றுக் கொடுத்தான். வேலன் இப்பொழுது நன்ருகப் படிப்பான். பிழை இல்லாமல் எழுதுவான். ஒரு எட்டாவது வகுப்பு மாணவனுக்கு உள்ள புஸ்தக அறிவு அவனுக்கு இருந்தது. நடேசனின் திறமையும் அவனுக்கு வேலன் மீது உள்ள அன்பும் வேலனைப் பள்ளிக்கூடப் படிப்பு இல்லாமலே பல விஷயங்களைத் தெரிந்து கொள்ளும்படிச் செய்து விட்டது. இன்னும் வேலனுக்குத் தனக்குத் தெரிந்த பலப் பல விஷயங்களைச் சொல்லிக் கொடுத்தான். தன்னுடைய அறுபது வயது அனுபவத்தையும் எட்டு வயது நிரம்பிய வேலனுக்குச்சொல்லிக் கொடுத்தான். வேலனும் கருத்தோடு அதைக் கேட்டுத் தெரிந்து கொண்டான். வேலனுக்கு வயது எட்டு தானே ஒழிய அறுபது வருஷத்து அறிவும் அனுபவமும் அவனுக்கு இருந்தது. அதைப் பார்த்து நடேசன் தன் கடமையைச் செய்து விட்டது போலச் சந்தோஷப்பட்டான்.

வேலனுக்கு நல்ல இனிமையான குரல் இருந்தது. அவனுக்குப் பாடக் கற்றுக் கொடுத்தான் நடேசன். வேலனும் நன்ருய்ப் பாடக் கற்றுக்கொண்டான். தன் இனிமையான குரலில் சிறுவன் வேலன் கட்ட பொம்மன் பாட்டு, தேசிங்குராஜன் பாட்டு முதலியவைகளைப் பாடுவான். அதைக் கேட்டுக் கிழவன் மகிழ்ந்து போவான்.

முன் எப்பொழுதையும் விட இப்பொழுது கிழவன் நடேசனின் உடல்நிலை மோசமாக இருந்தது. சீக்கிரம் தன் உயிர் போய் விடும் என்று அவன் மனசுக்குப்பட்டது. கிழவன் தான் சாவதைப் பொருட்படுத்தவில்லை. சாவது தவிர்க்க முடியாதது என்று அவனுக்குத் தெரியும். ஆனுல் தன் பேரன் வேலனின் நினைவுதான் அவனுக்கு அதிகக் கவலையை அளித்தது.

இந்தக் கேள்வியை ஒரு நாளைக்குப் பல தடவை தனக்குத் தானே கேட்டுக் கொண்டான். அப்போதெல்லாம் அவனுக்கு ஏதோ ஒரு இனந்தெரியாத வேதனை உண்டாகும். பட்டணத்தில் உள்ள மனிதர்களைப் பற்றி நினைத்தான். அவர்கள் எல்லாம் அவர்களுடைய பாட்டுக்கே கஷ்டப்படுகிருர்கள். நல்ல நிலைமையில் உள்ளவர்களுக்கு ஏழைகளைப் பற்றி நினைக்க நேரமில்லை. இந்த நிலையில் வேலனைப் பட்டணத்திலேயே விட்டு விட்டுப் போகப் பயந்தான்!

வேலனுக்கு வேறு ஏதாவது ஏற்பாடு செய்ய வேண்டும். வாழைக் கொல்லைக் கிராமத்துக்கே அழைத்துப் போய் யாரிடமாவது விட்டு விடலாமா? என்று யோசித்தான். அடுத்த கணம் பட்டணமும் வாழைக்கொல்லைக் கிராமமும் வேலனுக்கு ஒன்றுதானே! அவன் எங்கிருந்தாலும் அனுதை! அனுதை! அனுதைதானே!

கலங்கிய கண்களுடன் வேலனைப் பார்த்தான் நடேசன். தன் தளர்ந்த கைகளினுல் வேலனை அன்போடு

அணைத்துக் கொண்டான். சிறுவன் தனது கரிய பெரிய விழிகளை அகலத் திறந்து கிழவன் நடேசனை ஆவலோடு பார்த்தான்.

சுற்றிலும் உள்ளவற்றைப் பார்த்துத் தீவிர யோசனையில் ஆழ்ந்தான். அவன் கை பக்கத்திலிருந்த மண்ணைத் துளாவிக் கொண்டிருந்தது. ஏதோ சிந்தனையில் "எல்லாம் மண்!" என்றான்.

சற்று நேரம் நடேசன் பேசாமலிருந்தான்.

"வேலா! நீ சொன்னது ரொம்ப சரி. நீ, நான் எல்லாமே வெறும் மண்தான். உனக்கு மட்டும் படிக்க வசதியிருந்து விட்டால் நீ நன்றாகப் படிப்பாய். மிகப் பெரிய மனிதனாக விளங்குவாய். அதற்குத்தான் கொடுத்து வைக்கவில்லையே. வயிற்றுக்கே வகையில்லாத உனக்குப் பள்ளிப் படிப்புக்கு பணம் யார் கொடுப்பார்கள்? நீ எல்லா விஷயங்களைப் பற்றியும் பெரிய அறிவாளி போல பேசுகிறாய். உன் எதிர்காலம் எப்படி இருக்கப் போகிறதோ?" என்று அவனை அணைத்துப் பிடித்து முத்தமிட்டான்.

"தாத்தா, எல்லாமே மண் என்று சொன்னீர்களே, அது எப்படி?" என்று கேட்டான் சிறுவன்.

"அதுதான் கடவுள் படைப்பில் உள்ள விநோதம். எல்லாமே மண்தான். பூமியில் உள்ள ஒன்றும் சாசுவதமல்ல. பூமியில் இருக்கும் எல்லாமே ஒரு நாளைக்குச் சாக வேண்டியதுதான். ஆனால் ஒரு மனிதன் செய்யும் நல்ல காரியம் மட்டும் சாசுவதமானது. அதற்குச் சாவே கிடையாது. அதைச் செய்வதற்கு மனிதன் வாழ்க்கையில் சோம்பலே இருக்கக்கூடாது. பயந்து பயந்து சாவது முட்டாள் தனம். கஷ்டங்களும் துன்பங்களும் துயரங்களும் வரும்போது அதைக் கண்டு பயப்படாமல் எதிர்த்துப் போராடி வாழ வேண்டும். அப்படி வாழ்பவன்தான்

மேதை; அறிவாளி. என் காலம் நெருங்கி விட்டது. நான் விரைவில் செத்து விடுவேன். நீ எதற்கும் பயப் படாமல் தைரியமாக வாழவேணும்'' என்றும் சொன்னான்.

வேலனுக்கு என்னவோ சாவைப் பற்றி பேசுவது அவ்வளவாகப் பிடிக்கவில்லை. அவன் மௌனமாக உட் கார்ந்திருந்தான்.

''வேலா! நான் சொல்லுவதைக் கேட்டுக் கொள். உனக்கு நல்ல அறிவு இருக்கிறது. அருமையான உடல் கட்டு இருக்கிறது. நீ நன்றாக உழைக்க வேண்டும். உழைத் துத்தான் சாப்பிட வேண்டும். கெட்ட சகவாசத்தால் பிச்சை எடுத்து விடாதே! பிச்சை எடுப்பதை விடக் கொடுமை வேறு ஒன்றும் கிடையாது. எனக்குத் தெரியும் பிச்சை எடுப்பதில் உள்ள கஷ்டம். நாலுபேர் காலைப் பிடித் துக்கெஞ்சி வயிறு வளர்ப்பதைவிட யாராவது ஒருவரிடம் அண்டிப் பாடுபட்டுப் பிழைக்கலாம். யாராவது பிச்சை போடுகிறார்கள் என்றால் அவர்கள் பிச்சைக்காரர்களின் நிலை கண்டு இரங்கி விடுவதாக எண்ணி விடாதே! அப் படிப் போட்டால் வைகுந்த வாசல் பறக்கத் திறந்து கிடக் கும் என்று அவர்களுக்கு நம்பிக்கை. பிச்சைக்காரர்களைச் சாதாரண மனிதர்கள் தூசிக்குச் சமானமாக நினைப்பார் கள். ஆமாம், அவர்கள் நினைப்பதும் சரிதான். ஆகையால் நீ உழைக்க வேண்டும்; உழைத்துத்தான் சாப்பிட வேண் டும் என்பதை மறந்து விடாதே! எப்பொழுதும் எதிலும் எந்தக் காரியத்திலும் விழிப்பாயிரு'' என்று ஆவேசம் வந்தவன் போல கடகடவென்று சொன்னான் நடேசன். அவன் மங்கிய கண்களில் ஆத்திரம் ததும்பியது. முகத் திலிருந்த சுருக்கங்கள் புடைத்துக் கொண்டிருந்தன.

''தாத்தா! கவலைப்படாதீர்கள். நான் பிச்சை எடுக் கவே மாட்டேன். பிறரையும் பிச்சை எடுக்க விடமாட் டேன்'' என்றான் வேலன்.

1364

"உன் பேச்சில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. உன் தாய் காவேரி உத்தமி. அவள் இருந்தால் நீ தேசிங்கு ராஜன் போலவும், கட்டபொம்மன் போலவும், ஆக வேண்டும் என்று நினைத்திருப்பாள். அவள் கனவை நினை வாக்கு" என்றான்.

வேலன் கிழவன் சொன்னதை எல்லாம் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தான். நடேசனுடைய உபதேசம் அவன் மனத்தைக் கவர்ந்து விட்டது. கூடவே ஏதோ ஒரு பயம் அவனைச் சூழ்ந்து கொண்டிருப்பதை அவன் உணர்ந்தான்.

கிழவனும் சிறுவனும் தாங்கள் முன்பு இருந்த அடர்ந்த தோப்பை நோக்கிச் சென்றனர். தோப்பின் மத்தியில் நல்ல அமைதி நிலவி இருந்தது. சுற்றிலும் இரவைப் போல நிசப்தமாக இருந்தது. கிழவன் தன் தோளில் கிடந்த துண்டை எடுத்துக் கீழே போட்டுப் படுத்தான். அடர்ந்த கிளைகளின் இடுக்கு வழியாகத் தெரிந்த ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். அப்படியே தன்னை மறந்து அயர்ந்து தூங்கி விட்டான்.

வேலன் வேறொரு பெரிய மரத்தில் சாய்ந்தபடியே உட்கார்ந்திருந்தான். அவனுக்கு எதிரில் தெரிந்த ஒரு தென்னை மரத்தை வண்டு ஒன்று குடைந்து கொண்டிருந்தது. அதைப் பார்த்துக்கொண்டிருந்தான். அது பறந்து பறந்து குடையும்போது ஏற்பட்ட ரீங்காரம் அவனுக்கு இனந் தெரியாத ஒரு இன்பத்தைக் கொடுத்தது.

* * *

தூங்கிக் கொண்டிருந்த நடேசன் தன் நெஞ்சில் ஏதோ வலி ஏற்படவே திடுக்கென்று எழுந்தான். "வேலா! போகலாமா?" என்றான்.

"கொஞ்ச நேரம் உட்கார்ந்திருப்போமே" என்றான் சிறுவன் வேலன்.

அவனுக்கு அந்தத் தோப்பு மிகவும் பிடித்திருந்தது. வில்லைப்போல் வளைந்திருந்த ஆகாயம் அந்தத் தோப்பை மூடியிருப்பது போலிருந்தது. வேலன் அதைப் பார்த்து அனுபவித்துக் கொண்டிருந்தான். சட்டென்று கேட்ட நடேசனின் இருமல் சத்தமும் அதைத் தொடர்ந்து அவன் படும் வேதனையும் சிறுவன் வேலனின் சிந்தனையைக் கலைத்து விட்டது.

வேலன் கிழவனைப் பார்த்தான். அவன் தன் நெஞ்சை இரு கைகளாலும் அமுக்கிப் பிடித்துக் கொண்டு இருமிக் கொண்டிருந்தான். அதைப் பார்த்தவுடன் வேலன் பயந்து விட்டான்.

திடீரென்று அந்தத் தோப்பில் ஒரு பரபரப்பு ஏற்பட்டது. மரங்கள் எல்லாம் ஆடி அசைந்தன. வானம் இருண்டது. படபடவென இடி இடித்தது. பூமியும் ஆகாயமும் அதிர்ந்தன.

கிழவன் நடேசன் ஒரு மரத்தோடு மரமாகச் சாய்ந்து கொண்டு உட்கார்ந்திருந்தான்.

வேலன் அவன் அருகில் நெருங்கிச் சென்றான். "தாத்தா! நாம் மழைக்கு அடக்கமான ஒரு இடத்துக்குப் போய் விடுவோம்" என்றான்.

கிழவன் பதில் பேசவில்லை. தன் பேரன் வேலனைப் பார்த்து மிரள மிரள விழித்தான்.

ஆகாயம் மீண்டும் அதிர்ந்தது. மின்னலும் இடியும் அமர்க்களப் பட்டன. மழை விடாமல் பெய்யத் தொடங்கி விட்டது.

வேலன் கிழவனை அணைத்துப் பிடித்துக் கொண்டான். "தாத்தா! பயமா இருக்கிறதே!" என்றான்.

கிழவன் நடேசன் ஏதோ சொல்ல விரும்பி ஆகாயத்தை நோக்கித் தன் கையை நீட்டினான்.

திடீரென்று ஒரு மின்னல் தோன்றியது. அந்த மின்னல் ஒளியில் கிழவனைக் கூர்ந்து பார்த்தான் வேலன். பயங்கரமாகக் கத்தினான். கிழவன் நடேசன் இறந்து கிடந்தான்.

சிறுவன் வேலன் பயித்தியம் பிடித்தவன்போல் அங்குமிங்கும் அலைந்து பரிதாபமாகக் கத்தினான். இடியும் மின்னலும் மேலும் அதிகரித்தன.

இந்தப் பரந்த உலகில், கடும் மழையில், அடர்ந்த தோப்பில் சிறுவன் வேலன் அனாதையாக நின்று வாய் விட்டு அலறினான்.

**நா**டக மேடையில் அரைக் கணத்தில் ஒளி இருளாக மாறுவதுண்டு. இருள் ஒளியாக மாறுவதுண்டு. நாம் பார்த்துக் கொண்டிருக்கும்போதே பற்பல காட்சிகள் தோன்றும். சற்று முன் ஏழைப் பரதேசியாக இருந்தவன் அடுத்த கணத்தில் பெரிய கோடீசுவரனாக மாறிவிடுவான். சிரித்துப் பேசி மகிழ்ந்து கொண்டிருப்பவன் திடீரென்று இந்த உலகத்தையே விட்டுப் போய் விடுவான். இது நாடகமேடைக் காட்சி.

ஆமாம், உலகமே ஒரு நாடகமேடைதானே! இதில் எத்தனையோ விதமான அற்புதங்கள் கணந்தோறும் நடந்து வருகின்றன. நாம் எல்லாவற்றையுமே பார்த்து அநுபவிக்க முடிகிறதா? இல்லை, புரிந்து கொள்ளத்தான் முடிகிறதா? அதற்கு நமக்கு ஓய்வுதான் இருக்கிறதா? நம்முடைய காரியங்களைச் செய்வதற்கே நமக்கு நேரம் போதவில்லையே! இதையெல்லாம் எப்படிக் கவனிப்பது?

அன்றும் அதுபோலவேதான் பலப் பல நிகழ்ச்சிகள் நடந்து விட்டன. இயற்கையும் திடீரென்று மாறிவிட்டது. சற்று முன்பு அடித்த வெய்யில் மறைந்து விட்டது.

வானம் இருண்டது. இடி இடித்தது. மின்னல் மின்னியது. மழை பெய்தது. கிழவன் நடேசன் இந்த உலகை விட்டே போய்விட்டான். சிறுவன் வேலன் அனுதையாகி விட்டான்.

அனுதை வேலன் மழையில் நனைந்த வண்ணம் "ஹோ!"வென்று கதறினுன். சட்டென்று அழுகையை நிறுத்தினுன். இறந்து கிடந்த கிழவன் நடேசனின் அருகில் உட்கார்ந்தான். அவனைக் குனிந்து பார்த்தான். அவன் தோளைப் பிடித்து ஒரு தரம் குலுக்கிப் பார்த்தான். "தாத்தா! தாத்தா!" என்று தன் பலம் கொண்ட மட்டும் கத்தினுன். நடேசனின் உயிரற்ற உடல் துவண்டது; அவன் தலை உருண்டது. மீண்டும் வாய்விட்டு அலறினுன். விம்மி விம்மி அழுதான்.

அவனுடைய துக்கத்தைத் தாங்க மாட்டாமல் தானே என்னவோ அந்தச் சமயத்தில் வானமும் அவனுடன் சேர்ந்து குமுறிக் குமுறி அழுதது!

அந்தப் பெரும் மழையின் சத்தத்தையும் மீறி வேலனின் விம்மல் சத்தம் கேட்டது. அவன் மேலே என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தான். 'ஞொய், ஞொய்' என்று சுழன்று சுழன்று காற்று அடித்தது. அந்த அடர்ந்த தோப்பில் இருந்த மரங்களின் கிளைகள் பேயாட்டம் ஆடின. அதுபோலவே சிறுவனும் ஒரு நிலைக்கு வர முடியாமல் தவியாய்த் தவித்தான்.

அடுத்த கணம் ஏதோ வெறி பிடித்தவன் போல் அங்கும் இங்கும் பார்த்தான். சட்டென்று எழுந்தான்; எழுந்து நடந்தான். நடை சற்று வேகமாயிற்று; பிறகு ஓட்டமாக மாறியது. ஓடிக் கொண்டே இருந்தான். "தாத்தா! தாத்தா!" என்று கதறிய வண்ணம் தலைதெறிக்க ஓடினுன். எதிரில் இருப்பவை ஒன்றையும் கவனிக்காமல்

ஓடினன். ஏன் அப்படி ஓடுகிறுன்? எங்கே ஓடுகிறுன்? அது அவனுக்கே தெரியாது. ஏதோ ஓடவேண்டும் என்று தோன்றியது ஓடுகிறுன்.

தோப்பை விட்டு வெளியே வந்தான். ஓர் ஒற்றை யடிப் பாதை – அது கலக்கும் இடத்தில் ஒரு சின்னத் தெரு; அதற்கு அப்பால் ஒரு பெரிய சாலே – அந்தச் சாலே யின் கோடியே தெரியவில்லே. அதில் ஓடிக்கொண்டே யிருந்தான்.

எங்குதான் போகிறுனே ?

அந்த நீண்ட பெருஞ் சாலேயின் மத்தியில் குறுக்கே ஒரு சந்து வந்து கலந்தது. அந்தச் சந்திலிருந்து ஒரு முரட்டு மாடு வெறிபிடித்து ஓடி வந்தது. தன்னுடைய பெரிய கொம்புகளேக் காட்டிக் கொண்டு ஓடி வந்தது. அதன் கூர்மையான கொம்புகளேப் பார்க்கவே பயமாக இருந்தது. வேலன் அந்த மாட்டைக் கவனிக்க வில்லே. ஆனல் மாடு வேலனேக் கவனித்து விட்டது. அவனே நோக்கித் தலேயைக் குனிந்து கொண்டு பயங்கரமாகச் சீறிக் கொண்டு ஓடி வந்தது. அதன் கொம்பில் ஏதோ தினவெடுத்திருக்கிறது போலும். எங்கேயாவது எதை யாவது முட்டினல்தான் அதன் கொம்பின் தினவு தணி யுமோ என்னவோ? தலேயை ஆட்டிக்கொண்டு கொம் பைத் தூக்கிக்கொண்டு வேலனேத் துரத்த ஆரம்பித்து விட்டது. வேலன் ஓடுகிறுன். மாட்டைக் கவனிக்காமல் ஓடுகிறுன். மாடு நெருங்கிவிட்டது. இன்னும் வேலன் கவனிக்கவில்லே. அந்த முரட்டு மாடு அவன் முதுகுக்கு நேரே தாவிப் பாய்ந்தது!

**வா**னத்தில் பளீர் என்று ஒரு மின்னல் மின்னியது. பயங்கரமாக இடி இடித்தது. அந்தச் சாலே ஓரத்து மரத் திலிருந்து சட சட வென்று ஒரு பெரிய கிளே "மளார்"

என்று முறிந்தது. இவ்வளவும் கண்மூடிக் கண் திறக்கும் நேரத்துக்குள் நேர்ந்துவிட்டது. அந்தச் சமயத்தில்தான் வேலன் அதற்கு நேரே வந்து கொண்டிருந்தான். மாடும் அவனுக்குப் பின்னால் தாவிப் பாய்ந்தது. ஐயோ! வேலன் ஒரே சமயத்தில் இரண்டு ஆபத்துக்குள் சிக்கிவிட்டானோ? இல்லை; வேலன் தப்பித்துக் கொண்டான். முன்போலவே ஓடிக் கொண்டிருக்கிறான். அந்த பயங்கரச் சத்தத்தைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். அந்த மாடு மடார் என்று முறிந்து விழுந்த பெரிய கிளைக்கு அடியில் அகப்பட்டுத் தவிப்பதைப் பார்த்தான். அவனுக்கு என்ன செய்வது என்றே தெரியாமல் ஒரு கணம் திகைத்து நின்றான்.

அந்தச் சாலை வழியே போய்க் கொண்டிருந்த ஒருவர் இதையெல்லாம் பார்த்து அப்படியே நடுங்கிப் போய்விட்டார். "டேய்! பையா? யாரப்பா நீ? ஏன் இப்படி ஓடுகிறாய்? கொஞ்சம் தப்பியிருந்தால் உயிரே போயிருக்குமே" என்று வேலனை வழி மறித்துக் கேட்டார்.

வேலன் அவரை மேலும் கீழுமாகப் பார்த்துத் திரு திரு வென்று விழித்தான். "என் தாத்தா!... என் தாத்தா...!" என்று மேலே பேச முடியாமல் தவித்தான். அவன் கண்களில் கண்ணீர் வழிந்தது. வெளியில் மழை பொழிந்துகொண்டிருந்தது.

"சரி! சரி! பார்த்து ஜாக்கிரதையாகப் போ!" என்று சொல்லிவிட்டுக் குடையைச் சாய்த்துப் பிடித்துக்கொண்டு அந்த மனிதர் போய்விட்டார். அவருக்கு என்ன அவசர வேலையோ?

வேலன் அவன் பாட்டுக்கு அந்தக் கொட்டும் மழையில் நனைந்த வண்ணம் போய்க்கொண்டே இருந்தான்.

இப்பொழுது அவனுடைய மூளை தீவிரமாக வேலை செய்தது. அதன் பயனாகத்தானோ என்னவோ அச் சாலை

யின் குறுக்கே வந்த ஒரு தெருவைக் கண்டதும் அவன் நடை சற்றுத் தளர்ந்தது. கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அந்தத் தெருவும் சாலையும் கடக்கும் இடத்துக்கு அருகில் வந்தான். அங்கேயே நின்று விட்டான்.

நின்றபடி யோசித்தான், யோசித்தான், யோசித்தான். தன் நினைவின்றி யோசித்தான்!

அடுத்த கணம் யாருமே எதிர்பாராதது நடந்துவிட்டது. "பாம்! பாம்!" என்ற மோட்டார்கார் ஹாரனின் சத்தம் கேட்டது. "ஐயோ!" என்ற பயங்கர அலறலும் அதைத் தொடர்ந்து 'கிறீச்' என்ற மண்டையைப் பிளக்கும் சத்தமும் கேட்டன. அந்தத் தெருவிலிருந்து வேகமாகத் திரும்பிய கார் 'நய்...ய்...ய்...ய்' என்ற கர்ண கடோரமான சத்தத்துடன் நின்றது!

திடீரென்று நாலா திசைகளிலிருந்தும் இடியோசை கிளம்பி, காதுகளைத் தாக்குவது போலவும் பூமி பிளந்து கால்களுக்குக் கீழே நழுவிச் செல்வது போலவும் வேலனுக்குத் தோன்றியது. அவன் வேகமாக வந்த காரில் அடிபட்டுப் பந்துபோல் தூக்கி எறியப்பட்டான். அவன் இளம் உருவம், பச்சிளம் உடல் செக்கச் செவேலென்ற இரத்தத்தில் கிடந்தது.

இந்த சோகக் காட்சியைப் பார்க்க முடியாமல் கதறுவது போல வானம் உறுமியது!

காருக்குள் இருந்த பெரிய மனிதர் அவசரம் அவசரமாக இறங்கி வந்தார். அடிபட்டுக் கிடந்த வேலனைப் பார்த்தார். அவன் களையான முகத்தைப் பார்த்தார். "அடாடா! பையனைப் பார்த்தால் யாரோ பெரியமனிதர் வீட்டுக் குழந்தையைப் போலல்லவா இருக்கிறான். டிரைவர்! இவனைத் தூக்கி காரில் போடு. நம் டாக்டர் வீட்டுக்குக் காரை விடு, உம்" என்றார்.

டிரைவரின் கைகால்கள் எல்லாம் நடுங்கிக் கொண்டிருந்தன. தன் நடுங்கும் கைகளால் சிறுவனைத் தூக்கிக் காருக்குள் போட்டான். காரை டாக்டர் வீட்டுக்கு ஓட்டினான்.

டாக்டர் வேலனைப் பரிசோதனை செய்தார். அடிபட்ட இடங்களில் அவசரம் அவசரமாக மருந்துகளை வைத்துக் கட்டினார். "அபாயம் ஒன்றுமில்லை. மண்டையில் நல்ல அடி பட்டிருக்கிறது. ஏராளமான இரத்தம் குறைந்து விட்டதால் பையன் களைத்துப் போய் விட்டான். அதோடு இந்தப் பெரிய அதிர்ச்சியையும் அவனால் தாங்க முடியவில்லை. அவனை யாரும் தொந்தரவு செய்ய வேண்டாம். சற்று ஓய்வு எடுத்துக் கொள்ளட்டும், காலையில் பார்த்துக் கொள்ளலாம்" என்றார்.

அதற்குள் பெரிய மனிதர் "டாக்டர்! பையனைப் பார்த்தால் யாரோ பெரிய இடத்துக் குழந்தை போலிருக்கிறான். என்ன செலவானாலும் பாதகமில்லை. நன்றாகக் கவனியுங்கள். பையனுக்கு மூர்ச்சை தெளிந்து பேச ஆரம்பித்தால் அவனை யார் என்று விசாரித்து எனக்கு உடனே தெரிவியுங்கள்" என்றார். டாக்டரிடம் ஒரு நூறு ரூபாயை எடுத்துக் கொடுத்தார். அவரிடம் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டார்.

நூறு ரூபாய் நோட்டைக் கையை நீட்டி வாங்கிக் கொண்ட டாக்டர் "ஆகட்டும்" என்பதற்கு அறிகுறியாகத் தலையைப் பலமாக ஆட்டி வைத்தார். தோளில் கிடந்த 'ஸ்டாதஸ்கோப்'பை எடுத்து மேஜையில் வைத்தார். "பையனுக்கு அப்படி ஒன்றும் நல்ல அடி கூட இல்லை. ஏதோ பயத்தில் பெரிய மனிதர் நூறு ரூபாயை எடுத்துக் கொடுத்து விட்டார். நியாயத்துக்குத்தான் யாரும் பணிவதில்லையே! ஏதோ பயத்தில் தன் தவறை

மறைப்பதற்கு என்ன வேண்டுமானுலும் செய்யத் தயாராக இருக்கிறார்கள்" என்று நினைத்து வாய் குலுங்கச் சிரித்துக்கொண்டார் டாக்டர்.

வேலன் ஏதோ முனகினுன். அவசரமாக எழுந்து அவன் அருகில் சென்ருர். அவனுக்கு நல்லஜுரம் அடித்துக் கொண்டிருந்தது. ஜுர வேகத்தில் அவனையும் அறியாமல் ஏதோ முக்கி முனகி யிருக்கிருன். அவ்வளவுதான்.

வேலனின் அழகிய முகத்தைப் பார்த்தவுடன் அவருக்கே மனம் இளகி விட்டது? யார் வீட்டுக் குழந்தையோ! மழையில் ஏதாவது கப்பல் விட்டு விளையாடிக் கொண்டிருந்தானே என்னவோ. பிள்ளையைக் காணுமல் பெற்ருேர்கள் எங்கெல்லாம் தேடுகிருர்களோ என்று எண்ணி அநுதாபப் பட்டார். டாக்டர் கண்டாரா அவன் அனுதை என்று? அல்லது அந்தப் பெரிய மனிதருக்குத் தான் தெரியுமா? அப்படித் தெரிந்திருந்தால் அவனுக்கு இந்த உதவிகள் கிடைத்திருக்குமா ?

யாரோ பெரிய மனிதர் வீட்டுப் பிள்ளையோ என்ற பயத்தில் எல்லாம் நடக்கிறது. இல்லா விட்டால்! இல்லா விட்டால் என்ன ? கண்ணுக்கு எதிரிலேயே காரில் அடிபட்டு இறந்தவர்களைப் பார்த்திருக்கிருேம். அதற்கு வேண்டிய சாட்சிகளும் இருந்திருக்கின்றன. இருந்தும் பணத்தின் உதவியால் தப்பித்துக் கொண்ட சம்பவங்களை நாம் கேள்விப் பட்டதில்லையா ? ஏழைகள் அவர்கள் மத்தியில் நீதியை எதிர் பார்க்க முடியுமா ?

*        *        *

**பொ**ழுதும் விடிந்தது. ஆனுல் கவிகள் வர்ணனை செய்யும் அந்த அழகுடன் விடியவில்லை. வேறு விதமாக விடிந்தது. அன்று பறவைகள் கீதம் பாடவில்லை; மலர்கள் மலர வில்லை; வண்டுகள் தேனை நாடி மலர்களைத் தேடிச்

செல்ல வில்லை. இருண்ட இரவு விடிந்த பகலாக மாறிற்று. ஆனாலும் போதிய வெளிச்சம் ஏற்படவில்லை,

இன்றும் மழையின் வேகம் குறைந்தபாடில்லை. மழை பெய்து கொண்டுதான் இருந்தது.

வேலனுக்கு மூர்ச்சை தெளிய வில்லை. ஆனால் அவன் ஏதோ ஒரு கனவு கண்டு கொண்டிருந்தான்.

தீபங்கள் சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றன. வெண்கல மணிகளின் கிண்கிணி நாதம் கேட்கிறது. "டணார்! டணார்!" என்று கண்டாமணியின் ஓசை காதில் மோது கிறது. எங்கும் தெய்விக மணம் வீசி மனத்தை மகிழ்விக் கிறது.

எங்கோ எல்லையில்லாத, தொல்லையில்லாத, பிறப்பும் இறப்பும் இல்லாத ஒரு இடத்திலிருந்து கேட்கும் இன் னொலி. உள்ளமும் உடலும் சிலிர்க்கும் ஒரு இனிமையான சந்தர்ப்பம்.

அவ்வளவுதான், கண்ணைப் பறிக்கும் ஒரு ஜோதி. அந்த ஜோதிக்குள் கிழவன் நடேசன் மலர்ந்த முகத்துடன் சிரித்துக் கொண்டிருக்கிறான். அவன் முகத்தில் சுருக்க மில்லை. அவன் முதுகில் கூன் இல்லை. கண்கள் முகத்துக்கு மேல் வந்து சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கின் றன. உடம்பு தள தளவென்று மினு மினுக்கிறது!

சிறிது நேரம் நடேசனைப் பார்த்த வண்ணம் மயங்கி இருந்தான் வேலன். அவனுக்குப் பேசவே தோன்றவில்லை. "வேலா! ஏன் பேச மாட்டேன் என்கிறாய்?" என்று கேட்டான் கிழவன் நடேசன்.

வேலனின் உள்ளத்தையே உருக்கும் அந்த அன்புக் குரலை ஆதரவான பேச்சைக்கேட்டதும் தன் சுய உணர்வு பெற்றான்.

“ தாத்தா என்னை விட்டு விட்டுப் போகிறீர்களே!” என்றான்.

“ வேலா ! நான் எப்பொழுதும் உன் அருகில் தான் இருப்பேன். நான் சொன்னதை எல்லாம் மறந்து விடாதே! தைரியமாக இரு. தெய்வம் உனக்குத் துணை புரியும். பயம், சந்தேகம், சோம்பல் முதலியவைகளை விட்டு விடு. எத்தனை பெரிய ஆபத்துக்கள் வந்தாலும் அவற்றை நம்பிக்கையினால் வென்று விடலாம். நம்பிக்கை கேட்ட வரமெல்லாம் கொடுக்கும்'' என்றான் நடேசன். சட்டென்று நடேசனின் புனிதத் திரு உருவம் மறைந்து விட்டது.

அதற்குப் பிறகு தேவ கானம் கேட்கவில்லை. கண்டாமணிகள் அசைந்தாட வில்லை. உள்ளத்தையும் உடலையும் மகிழ்வித்த அந்தத் தெய்வீக மணத்தைக் காணோம்.

‘டக் டக்’ கென்ற டாக்டரின் பூட்ஸ் சத்தம்தான் கேட்டது.

சிறுவன் வேலன் கண் விழித்துப் பார்த்தான்.

தான் ஒரு கட்டிலில் வசதியுடன் சுகமாகப் படுத்திருப்பதை உணர்ந்தான். அவன் முகத்துக்கு நேர் மேலே டாக்டரின் முகம் இருந்தது. அந்தப் புது முகத்தைப் பார்த்ததும் அவன் பயந்தான். பயத்தினால் விழித்துக் கொண்டிருந்த சிறுவனின் கண்களிலிருந்து கண்ணீர்த் துளிகள் முத்துப்போல் வெளி வந்தன. அது கன்னத்தின் வழியே உருண்டோடிக் கழுத்தில் விழுந்த போது அவனுக்குக் குறு குறுத்தது!

வேலனுக்குச் சட்டென்று நடேசனின் நினைவு வந்து விட்டது! அவனுக்கு நடுக்க மெடுத்தது! சுற்றிலும் ஒரு முறை பார்த்தான். அப்படியே கண்ணை மூடிச் சோர்ந்து படுத்துவிட்டான். மீண்டும் மூர்ச்சையாகி விட்டான்.

* * *

மூன்று நாட்கள் ஓடி மறைந்தன. வேலன் அதற்குப் பிறகு கண்களைத் திறந்து பார்க்கவில்லை. அவனுக்கு நல்ல உணர்ச்சி வரவில்லை. அவன் வாய் திறந்து ஒரு வார்த்தையும் பேசவில்லை. டாக்டர் மிகுந்த சிரத்தையுடன் அவனைக் கவனித்து வந்தார். தன்னுடைய திறமை அத்தனையும் காண்பித்துக் கவலையோடு கவனித்து வந்தார். வேலனைக் கொண்டு வந்து டாக்டரிடம் விட்டுப் போன பெரிய மனிதர் தினம் காலையிலும் மாலையிலும் வந்து பார்த்து விட்டுப் போனார். அவர் மனத்தில் ஏனோ அமைதி இல்லை!

நாலாம் நாள்.

எல்லையில்லாத சூனியத்திலிருந்து ஆழங் காண முடியாத மௌனக் கடலிலிருந்து, எங்கோ அதள பாதளத்தில் இருக்கும் இருட் சிறையிலிருந்து மேலே மேலே வந்து கொண்டிருந்தான் வேலன். அவன் தலையில் பெரிய பாருங் கல்லைத் தூக்கி வைத்ததுபோலிருந்தது. கண்களைத் திறக்க முடியாமல் கட்டிப்போட்டது போலிருந்தது. ஏதோ சில மனிதக் குரல்கள் கேட்டன. யாரோ பேசிக் கொண்டிருந்தனர். வேலன் மிகுந்த சிரமத்துடன் கண்ணைத் திறந்தான். சுற்றும் முற்றும் பார்த்தான். தன்னுடைய ஞாபகத்தை வரவழைத்தான். டாக்டர் வீட்டில் படுத்திருப்பதை உணர்ந்தான். சந்தேகத்துக்கு இடமின்றி உணர்ந்து கொண்டான். டாக்டரும் வெள்ளை உடை தரித்திருந்த ஒரு நர்ஸும் ஏதோ பேசிக் கொண்டிருந்தனர். தலையைத் தூக்கி அதைக் கேட்க முயன்றான். இப்பொழுதுதான் தன் தலையில் கட்டுக் கட்டியிருப்பதை உணர்ந்தான். தன் தாத்தா இறந்ததும், தான் இன்னது செய்வதென்று தெரியாமல் ஓடி வந்ததும், கடைசியில் காரில் அடிப்பட்டுப் போனதும் அவனுக்கு நினைவு வந்தது. "தாத்தா! தாத்தா!" என்று சத்தம் போட்டான்.

வேலனின் குரல் கேட்டு டாக்டர் ஓடி வந்தார். அவன் தெளிவான முகத்தைப் பார்த்தார். அவன் கண்களைக் கூர்ந்து கவனித்துப் பார்த்தார். அவர் முகத்தில் ஒரு மகிழ்ச்சி ஏற்பட்டது. பையன் வெகு விரைவில் குணமாகி விடுவான் என்று திருப்தி அடைந்தார். அவன் கன்னத்தை அன்போடு வருடிக் கொண்டே " தம்பி! உன் பெயர் என்ன? " என்று கேட்டார்.

" வேலன் " என்றான்.

" உன் தந்தையின் பெயர் ? "

" தெரியாது."

" தாயாரின் பெயர் ? "

" காவேரி."

" அந்த அம்மாள் எங்கே இருக்கிறார்கள் ? "

" செத்துப் போய்விட்டார்கள். "

" அப்போ உனக்குத் தாய் தந்தை; உற்றார் உறவினர் யாருமே கிடையாதா ?

" இல்லை."

டாக்டருக்கு ஒரு கணம் ஒன்றுமே புரியவில்லை. மேலும் பலப் பல கேள்விகளைக் கேட்டு அவனைப் பற்றி நன்றாகத் தெரிந்து கொண்டார். அவன் ஒரு அனாதை என்பதைப் புரிந்து கொண்டார். "ப்பூ" என்று உதட்டைப் பிதுக்கினார். அவருக்குப் பெரிய ஏமாற்றமாக இருந்தது! அவன் யாராவது பெரிய மனிதர் வீட்டுப் பையனாக இருப்பான்; அங்கிருந்து ஏதாவது கிடைக்கும் என்று எதிர்பார்த்திருந்த அவருக்கு இது பெரிய அதிர்ச்சியாகவே போய்விட்டது. இருந்தாலும் வேலனுடைய களங்கமற்ற முகம் அவர் கடமையை உணர்த்திற்று. ஏதோ ஒரு உணர்ச்சி அவர் இதயத்தைத் தொட்டுவிட்டது. வேலனுக்கு வேண்டிய வைத்திய வசதிகளைக் குறைவில்லாமல் மீண்டும் கவனித்து வந்தார்.

அவசரம் அவசரமாக அவனைக் கொண்டு வந்து விட்ட பெரிய மனிதருக்கு அவனைப் பற்றிச் சொல்லி அனுப்பினார். அந்தப் பையன் ஒரு நாதியற்றவன்; அனாதை என்று குறிப்பு அனுப்பினார்.

இதைக்கேட்டதும் அந்தப் பெரிய மனிதர் மிகுந்த சந்தோஷப்பட்டார். போன செல்வம் திரும்பி வந்ததுபோல மகிழ்ந்தார். "அப்பாடா!" என்று ஒரு நீண்ட பெருமூச்சு விட்டார். அந்தப் பையன் கையில் பத்து ரூபாய் பணத்தைக் கொடுத்து அனுப்பி விடுங்கள்" என்று டாக்டருக்குச் சொல்லி அனுப்பிவிட்டார். பணம் படைத்த பெரிய மனிதர் அல்லவா? மிகப் பெருந்தன்மையுடன் நடந்து கொண்டுவிட்டார்!

இரண்டு வாரங்கள் கழிந்தன. கையில் பத்து ரூபாய் பணத்தோடு சிறுவன் வேலன் இந்தப் பரந்த உலகில் தன் எதிர்கால வாழ்வைத் தேடி புறப்பட்டு விட்டான். ஏதோ மனம் போனபடி போனான். கையில் காசு இருந்ததால் வேளா வேளைக்குச் சாப்பிட்டான். இரவில் எங்கேயோ வழி நடைப் பாதையில் படுத்துத் தூங்கினான். இத்தனை காலமும் அவன் தாத்தா கூடவே இருந்ததால் அவனுக்கு ஒரு நிம்மதி இருந்தது. கவலையில்லாமல் இருந்தான். இப்பொழுது அவனுக்கு எல்லாமே கஷ்டமாயிருந்தது. எல்லாக் காரியங்களையும் தானே கவனித்துக் கொள்ள வேண்டியிருந்தது. அதனால் அவனுக்கு இன்னும் பல புதிய விஷயங்கள் தெரிந்தன.

தீயர்கள், திருடர்கள், தீராத நோய் உடையவர்கள் மத்தியில் இரவு நேரங்களில் அவன் துன்பப்பட நேர்ந்தது. அவனையறியாமல் அவர்களுடைய கூட்டுறவால் அந்தச் சோம்பேறி வாழ்வுக்கு அவன் மனம் திரும்பியது. அப்போது அவன் தாத்தா சொன்ன வாசகங்கள் அவன் நினைவுக்கு வந்தன. அவர் சொன்ன வாக்கியங்கள் நாலா

பக்கங்களிலிருந்தும் பெரிய ஒலி பெருக்கி மூலம் வந்து அவன் காதுகளில் தாக்கியதுபோல அவன் உணர்ந்தான். தலையை இறுக்கிப் பிடித்துக்கொண்டான். "பிச்சை எடுப்பதைவிடக் கொடுமை ஒன்றும் கிடையாது. உழைக்க வேண்டும்; உழைத்துத்தான் சாப்பிட வேண்டும்" என்று மனத்துக்குள் சொல்லிக் கொண்டான். பொழுது விடிந்ததும் முதல் காரியமாக எங்கேயாவது வேலை தேட வேண்டும் என்று உறுதியாகத் தீர்மானம் செய்து கொண்டான்.

கையில் இருக்கும் காசு இன்னும் இரண்டு நாளைக்குத்தான் வரும். அதற்குள் வேலை கிடைத்து விட்டால் நல்லது என்று எண்ணினான்.

பொழுது புலர்ந்தது. வேலன் வேலை தேடப் புறப்பட்டான். பலப்பலஇடங்களில் வேலைகேட்டான். ஒருவராவது அவன் நிலைகண்டு இரங்கவில்லை. அவனுடைய ஆதரவற்ற நிலைக்குப் பச்சாதாபப்பட வில்லை. அதற்குப்பதில் அவனைப் பலர் ஏசினார்கள், சிலர் தூற்றினார்கள். "வேலையில்லை போ!" என்று கண்ணியமாகச் சொல்லி அனுப்பிய நல்ல மனிதர்களும் இருந்தனர். "பிச்சைக்கார நாய்க்கு வேலையாம். எதையாவது திருடிக் கொண்டு போவதற்கா?" என்று விரட்டி அடித்த தயாள குணம் படைத்தவர்களும் இருந்தனர். "தாய் தகப்பன் இல்லை என்று சொல்லுகிறாயே? உன்னை எப்படி நம்புவது?" என்று அவன் நேர்மையைக்கண்டு சந்தேகித்து அவன் இளம் மனத்தைப் புண்படுத்திய புண்ணியவான்கள் சிலரும் இருந்தனர்.

இதையெல்லாம் கேட்டு மனம் நொந்து போனான். அங்குமிங்கும் அலைந்து அலைந்து அலுத்துப் போய் விட்டான். அதனால் வேலனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

அருகில் தெரிந்த ஒரு பெரிய வீட்டுக்கு ஆத்திரத்தோடு போனான். அந்த வீட்டின் கதவைத் தட தட வென்று பலமாகத் தட்டினான்.

அந்த வீட்டுக்காரர் ஒரு டாக்டர். கொஞ்சம் இரக்கமுள்ள டாக்டர். உள்ளதை உள்ளபடி சொல்லும் டாக்டர். ஆகையால் அவரைத் தேடி அதிக நோயாளிகள் செல்லுவதில்லை. ஏதாவது புதுப் பெயரைச் சொல்லி "ஆ! ஊ!" என்று பயமுறுத்தி மருந்து கொடுக்கும் டாக்டர்களைத்தானே ஜனங்கள் நம்புகிறார்கள்!

கதவை இடிக்கும் சத்தம் கேட்டவுடன் யாரோ நோயாளிதான் என்று நினைத்து அவசரமாகக் கதவைத் திறந்தார் டாக்டர். "யாரப்பா நீ? உனக்கு என்ன வேணும்?" என்று சாவதானமாகக் கேட்டார்.

"நான்தான் வேலன்" என்றான்.

டாக்டருக்குச் சிரிப்பு வந்து விட்டது. "நீ என்ன ஜவஹர்லால் நேருவா? உன்னைப் பற்றி உலகமே தெரிந்து கொண்டிருக்கும் என்று நினைத்துக் கொண்டாயா?" என்றார்.

"நான் ஏன் ஸார் அப்படி நினைத்துக் கொள்ளப் போகிறேன்? நான் ஒரு ஏழை. எனக்கு ஏதாவது வேலை வேணும்" என்று பல்லைக் காட்டிப் பரிதாபமாகக் கெஞ்சினான் வேலன்.

இப்பொழுதுதான் டாக்டருக்கு விஷயம் விளங்கிற்று. அவனை ஒருதரம் கால்முதல் தலை வரை கூர்ந்து பார்த்தார். அவர் மனத்தை என்னவோ செய்தது. சற்று நேரம் தலையைச் சொறிந்து கொண்டு யோசித்தார்.

"நான் உனக்கு என்ன வேலை கொடுப்பது? அப்படி உனக்கு வேலை கொடுத்தாலும் உன் சாப்பாட்டுக்குப் போதுமான சம்பளம் என்னால் கொடுக்க முடியாது! உனக்கு வேறு யாரும் நிறைய சம்பளம் தரமாட்டார்கள். நான் சொல்லுவதைக் கேள். எங்கேயாவது ஹோட்டலில் போய் வேலை கேளு. ஒரு இடத்தில் இல்லாவிட்டாலும்

இன்னொரு இடத்தில் வேலை கிடைக்கும். சம்பளம் கிடைக்காவிட்டாலும் மூன்று வேளை சாப்பாடாவது தாராளமாகக் கிடைக்கும்!" என்றார்.

டாக்டர் சொன்னது வேலனுக்கு மிகுந்த திருப்தியைக் கொடுத்தது. தனக்கு ஏதோ வேலை கிடைத்துவிட்டது போலவே சந்தோஷப்பட்டான். அங்கிருந்து புறப்பட்டான். இரண்டொரு ஹோட்டலில் வேலை காலி இல்லை என்று சொல்லி அவனைத் துரத்திவிட்டனர். கடைசியில் ஒரு ஹோட்டலில் அவனுக்கு வேலை கிடைத்தது.

பார்ப்பதற்கு அழகாகவும், சிறு பையனாகவும், சுட்டிகையாகவும், நல்ல உடல் கட்டுடனும் இருந்ததால் அந்த ஹோட்டல் காரர் அவனை வேலைக்கு எடுத்துக் கொண்டார். அந்த ஹோட்டலில் வேலனுக்கு என்ன வேலை தெரியுமா? குழாயில் தண்ணீர் அடித்தல், பாத்திரங்கள் தேய்த்தல், மேஜை துடைத்தல் இன்னும் சில சில்லரை வேலைகள். ஹோட்டலில் எட்டுமணி நேர வேலை என்றுதான் பெயர். வேலனுக்கு பன்னிரண்டு மணி நேர வேலை இருந்தது. ஆனால் மூன்று வேளையும் வயிறாரச் சாப்பிட்டான். சாப்பாட்டுக்கு ஒன்றும் பஞ்சமில்லை. வெறும் சோற்றை மட்டும் சாப்பிட்டு வருவதால் மட்டும் மனசு திருப்தி அடைந்து விடுகிறதா? ஓய்வே இல்லாவிட்டால் அதில் எப்படி சந்தோஷம் இருக்கும்? வேலனுக்கு அந்த வேலை அவ்வளவாகப் பிடிக்கவில்லை. இருந்தாலும் வேறு வழியின்றிச் செய்து வந்தான். வாரத்துக்கு ஒரு நாள் விடுமுறை கிடைக்கும். அன்றைக்குச் சாப்பாட்டு வாயில் மண்தான். வயிற்றுக்குத்தான் அன்று உணவு அகப்படாதே ஒழிய அறிவுக்கு நல்ல விருந்து கிடைக்கும். நூல் நிலையங்களுக்குச் சென்று பலப்பல புத்தகங்களைப் படிப்பான். உழைப்பால் உயர்ந்த

பெரியோர்களின் வாழ்க்கைச் சரித்திரங்களைப் படிப்பான். அவனுடைய சோர்ந்த உள்ளத்துக்கு அந்தச் சரித்திரங்கள் நல்ல தெம்பை அளித்தன. இப்படி ஒரு வருஷம் அந்த வேலையில் காலம் தள்ளினான்.

*    *    *

ஒரு நாள் காலை. தன்னுடன் வேலை செய்து வந்த தொழிலாளியை ஹோட்டல் முதலாளி நிறுத்தி விட்டார். அவன் செய்யாத குற்றத்தை அவன்மீது சுமத்தப்பட்டது. ஐந்து வருஷங்களுக்கு மேலாக நாணயமாக வேலை பார்த்து வந்த தொழிலாளியைத் திடீர் என்று சந்தேகக் கண் கொண்டு பார்க்க ஆரம்பித்து விட்டார். யாரோ வஞ்சகன் அவன் மீது திருட்டுக் குற்றம் சாட்டி விட்டான். அதைத் தீர விசாரிக்காமலே அவனை வேலையை விட்டு அனுப்பி விட்டார். அந்தத் தொழிலாளி தான் வேலையை விட்டுப் போவதற்காக வருத்தப்படவில்லை. தன்மீது திருட்டுக் குற்றம் சாட்டப்பட்டதை எண்ணி வருந்தினான்.

அவன் நிலை கண்டு வேலன் வேதனைப்பட்டான். அவன்மீது பச்சாதாபப் பட்டான். அவனுக்கு ஆறுதலாக இரண்டு வார்த்தைகள் சொன்னான். "வேலா! இந்த முதலாளிகளே இப்படித்தான். என்னுடைய அருமையான இளமையை இந்த முதலாளிக்கு உழைத்தேன். என் எதிர்காலம் பசுமையாக இருக்கும் என்று உழைத்தேன். இப்பொழுது கொஞ்சம் வயதாகி விட்டது. எனக்கும் கொஞ்சம் உலகம் தெரிய ஆரம்பித்து விட்டது. எனக்கு அதிகச் சம்பளம் கொடுக்க வேண்டும் என்பதற்காக ஏதோ காரணம் காட்டி வேலையை விட்டு நிறுத்தி விட்டார்" என்றான். அவன் குரலில் ஏமாற்றம் தொனித்தது.

மொத்தத்தில் இந்த நிகழ்ச்சி வேலனின் சிந்தனையைத் தூண்டி விட்டது. ஏதோ யோசித்தான். நேரே தன் முதலாளியிடம் சென்றான்.

"எசமான்!" என்றான்.

"யாரு, வேலனா? என்ன சேதி?"

"நான் வந்து ஒரு வருஷம் ஆகிவிட்டது!"

"ஆமாம்; அதற்கென்ன?"

"எனக்கு இன்னும் சம்பளம் போடவில்லை."

"உனக்குத்தான் யாரும் இல்லை என்று சொன்னாயே? பணம் எதற்கு?"

"என்ன எசமான் இப்படிக் கேட்கிறீங்க? பணம் எதற்கா? தலையணையில் பஞ்சை அடைப்பதுபோல வயிற்றில் சோற்றை அடைத்து விட்டால் மட்டும் போதுமா? எனக்கு மட்டும் வேறு ஆசைகள் இருக்காதா?"

"டேய் வேலா! நீ பேசவில்லை. என் ஒரு வருஷத்துச் சாப்பாடு உன்னை இப்படிப் பேசச் சொல்லுகிறது. தின்ற திமிரில் நீ பேசுகிறாய்? போடா, போ! உனக்கு எப்பொழுது சம்பளம் கொடுப்பது என்று எனக்குத் தெரியும்?"

"என்னை உங்களிடமே நிலையாக வேலைக்கு வைத்துக் கொள்கிறீர்களா? அதையாவது சொல்லுங்கள். எனக்கு நிம்மதியாகவாவது இருக்கும்."

"அப்படி யெல்லாம் உனக்கு எழுதிக் கொடுக்க முடியாது. அனாதைக் கழுதைக்கு வாயைப்பாரு!" என்று அவன் கழுத்தைப் பிடித்துத் தெட்டித் தள்ளினார். வேலன் தட தட வென்று வெளியில் போய் பொதகடீரென்று கீழே விழுந்தான்.

ஏமாற்றமடைந்த வேலனுக்குக் கோபம் கோபமாக வந்தது. ஏழையின் கோபம் அவன் வாழ்வைத் தானே

கெடுக்கும். ஆமாம் அப்படித்தான் ஆகிவிட்டது. "இவர் எப்பொழுதோ ஒரு நாளைக்குத் திடீர் என்று நிறுத்தும் வரை காத்துக்கொண்டிருப்பானேன்! நாம் இப்பொழுதே நின்றுகொள்ளுவோமே" என்று நினைத்தான். அன்றைக்கே அந்த வேலைக்குத் தலை முழுகி விட்டான். அதில் அவன் திருப்தியடைந்தான்.

பாவம்! இன்னும் போதிய பக்குவம் அடையவில்லை அவன். இன்னொரு இடத்திலும் இப்படித்தான் இருக்கும் என்பதை அவன் இன்னும் அறியவில்லை. உடனே இன்னொரு வேலை கிடைத்து விடுமா? அவனுக்காக யார் வேலையை வைத்துக் கொண்டு காத்திருக்கப் போகிறார்கள்?

பல தினங்கள் வேலை கிடைக்காமல் கஷ்டப்பட்டான் வேலன். ரயிலடியில் மூட்டைத் தூக்கினான். கொத்தனார்களிடம் சிற்றாளாக இருந்தான். பத்திரிகை விற்கும் பையனாக இருந்தான். ஒரு தொழிற்சாலையில் தினக்கூலிக்கு வேலை செய்தான். இப்படி ஒரு வேலையிலும் நிலை இல்லாமல் பத்து வருஷ காலம் பாடுபட்டான். இந்த அனுபவங்கள் அவனுக்கு ஏழ்மையை, வறுமையின் கொடுமையை, வஞ்சகர்களின் சூழ்ச்சியை, தொழிலாளர்களின் கஷ்டங்களை, உலகத்தின் நிலைமையை எல்லாம் கற்றுக் கொடுத்தது.

ஏழைகளிடமும், தொழிலாளர்களிடமும் இருக்கும் பல குறைபாடுகளை நினைத்து வருந்தினான். அவர்களுடைய ஒற்றுமைக் குறைவை எண்ணி வேதனைப்பட்டான். அவர்களுக்குள் யாராவது கொஞ்சம் முன்னுக்கு வந்து விட்டால் அவர்களைப் பார்த்துப் பொறாமைப்படும் சமூகத்தை நினைத்துத் துன்பப் பட்டான். ஆடம்பரத்துக்கும் ஆர்பாட்டத்துக்கும் மயங்கும் மதிகெட்ட மக்களை எண்ணி எண்ணி மனம் புழுங்கினான்.

பணக்காரர்களையும், முதலாளிகளையும், நிலச்சுவான் தார்களையும் ஈரமற்றவர்களாகச் செய்து வருபவர்கள் ஏழை மக்களேதான். அவர்களிடம் வேலை பார்க்கும் சிலர் அவரவர்களின் சொந்த லாபத்தைக் கருதி முதலாளி களைக் கெடுத்து விடுகின்றனர். அவர்களுடைய நல்ல மனத்தையும் பாழ்படுத்தி விடுகின்றனர். இதனால் சில நல்ல நோக்கமுள்ள முதலாளிகளும் மனம் மாறி விடுகின் றனர் என்பதைத் தன் பத்து வருஷத்து வாழ்க்கையில் தெரிந்துகொண்டான் வேலன்.

* * *

இப்பொழுது வேலனுக்குப் பதினெட்டு வயது. ஒரு மனிதன் வாழ்க்கையில் சரியான பருவம்.

சில தினங்களாக வேலை கிடைக்காததால் கையில் காசு இல்லாமல் பட்டினி கிடக்கும்படி நேரிட்டுவிட்டது. பசியின் கொடுமையும் நாளைக்கு என்ன செய்வது என்ற வேதனையும் அவனை வாட்டியெடுக்க நடக்க முடியாமல் நடந்து போய்க் கொண்டிருந்தான். கடற்கரையின் நடை பாதையிலே தான் நடந்து போய்க் கொண்டிருந்தான். வயிறு மட்டும் நிறைந்திருந்தால் இப்பொழுது எவ்வளவு நன்றாக இருந்திருக்கும் என்று அவன் மனம் எண்ண மிட்டது.

இந்த உலகம் இருக்கிறதே, இது மிக விசித்திர மானது. வயிற்றுப் பசியைத்தான் போக்கிக் கொள்ள முடியாதே ஒழிய வேறு பல பசிகளைச் சுலபமாய் போக்கிக் கொள்ளலாம். வரிசையாக சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய பெரிய கட்டிடங்கள் அமைந்த தெருக்களில் அலை கிறேம். உள்ளும் புறமும் அவைகள் பார்க்க மிக அழ காக இருக்கின்றன. அவற்றின் அமைப்பு சிற்பத்தையும் சித்திரத்தையும், சுகத்தையும் சுகாதாரத்தையும், மற்றும்

எத்தனை எத்தனையோ எண்ணங்களையும் நமக்கு உண்டாக்குகின்றன.

விதம் விதமான உடையணிந்த கவலையற்ற மனிதர்கள் நமக்கு முன் சிரித்தவண்ணம் செல்லுகின்றனர். ஆனால் பட்டினியோடும், பசியோடும் வேலை கிடைக்காத கொடுமையால் இன்னும் உயிரோடு இருக்கிறோம் என்ற சோகமான உண்மையை எடுத்துச் சொல்லிக் கொண்டிருப்பவர்களைக் கவனிக்காமலே அவர்கள் போய்க் கொண்டிருக்கிறார்கள். ஆனால் பட்டினியோடும் பசியோடும் இருக்கும் மனிதனுடைய மனம் தான் எதையும் அதிகமாக அனுபவிக்க முடிகிறது.

**மா**லை நெருங்கி விட்டது. வேலன் கடலுக்கு அருகில் போய் ஈர மண்ணில் உட்கார்ந்தான். அவனைப் பார்த்துக் கடல் சிரித்துக் கொண்டிருந்தது. படை படையாக அலைகள் பிறந்து கரையை நோக்கி ஓடி வந்தன. கரையில் வெள்ளை வெளேரென்ற நுரைத் தூளை வாரி இரைத்துவிட்டு மீண்டும் பின் வாங்கி கடலில் கலந்து விட்டன. வானத்துக்கும் கடலுக்கும் இடையே உள்ள பரந்த வெளியில் குமுறித் தாவும் அந்த அலைகளின் 'ஓம்! ஓம்!' என்ற இன்ப நாதம் அந்த வெளி எங்கும் நிறைந்து ஒலித்தது.

தூரத்தில் அந்தப் பெரிய கடலின் பயங்கர அலைகளுக்கு மத்தியில் ஒரு கட்டுமரம் அவ்வப்போது தோன்றி மறைந்து கொண்டிருந்தது. அலையின் உயரத்துக்குக் கட்டுமரம் வரும். உடனே தலைகுப்புற விழும். இப்படியாக அது அலைந்து கொண்டிருந்தது. வேலனின் உள்ளமும் அதைப் போலவே அலைந்து கொண்டிருந்தது. அவன் உள்ளத்தில் ஒரு கேள்வி தோன்றி மறைந்து கொண்டிருந்தது. "இனி மேல் என்ன செய்வது?" "இனி மேல் என்ன செய்வது?" என்று அவன் தன்னைத் தானே கேட்டுக்

கொண்டான். அதற்கு விடை காண முயன்றான்; முடிய வில்லை. மண்டையைக் குடைந்து கொண்டு "இனி மேல் என்ன செய்வது?" என்ற கேள்வி மீண்டும் அவன் உள் ளத்தில் விசுவரூபம் எடுத்தது.

இப்பொழுது நன்றாக இருட்டிவிட்டது. சுற்றுப் புறத்தில் யாருமே இல்லை. ஒரே சூனியமாகவும் இருள் சூழ்ந்து மிருந்தது.

அந்த நிசப்தத்தில் யாரோ ஓடி வருவதுபோல் சத்தம் கேட்டது. வேலன் சுற்று முற்றும் பார்த்தான். சற்றுத் தூரத்தில் யாரோ கடலை நோக்கி ஓடி வந்தது தெரிந்தது. சுற்றிலும் நல்ல இருள் சூழ்ந்திருந்ததால் அந்த உருவத் தைச் சரியாக இனம் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஏதோ ஒரு உணர்ச்சி அவனைப் பிடித்து உந்தியது. அவ னும் அந்த உருவத்தை நோக்கி விரைந்து சென்றான். அந்த உருவம் கடலுக்கு வெகு சமீபத்தில் வந்து விட்டது. வேலனும் அருகில் சென்று விட்டான். பெண் உருவில் இருந்த அந்த உருவம் சட்டென்று தாவிக் கடலில் குதித் தது! வேலனும் கடலில் குதித்தான்!

கடலின் பட்டுப்போன்ற மார்பகத்தைக் காற்று மெதுவாகத் தட்டிக் கொடுத்தது. காற்று சற்று உஷ்ண மாகவே வீசிக்கொண்டிருந்தது. அந்த உஷ்ணக் காற்றின் ஆலிங்கனத்தில் சொக்கிப் போய்த்தானோ என்னவோ கடல் பெருமூச்செறிந்தது; பொங்கிப் பொங்கி அலை அலை யாக வந்து கரையில் மோதிக் குதித்தது. அப்படி மோதும் அலைகள் நாலா பக்கங்களிலும் சிதறி விழுந்தன. சிதறிய அலைகளும் மணலில் கலந்து உருகி மெதுவாக மூச்சுவிட்டு மறைந்தன.

இருள் சூழ்ந்த அந்தக் கடலின் அடிவாரத்தில் ஒரு வெளிச்சம் மினு மினுத்தது. அது வட்ட வடிவமாகச்

செக்கச் செவேலென்று நெருப்புத் தணல்போல மேலே மேலே வந்து கொண்டிருந்தது. நிலவின் ஒளிபட்டுக் கடல் அலைகள் வெள்ளை வெளேரென்று கண்ணைப் பறித்தன. சற்றுத் தூரத்தில் தெரிந்த ஒரு அலை உச்சியில் வேலனின் தலை தெரிந்தது. தலை வழியாகத் தண்ணீர் சொட்டிக் கொண்டிருந்தது முகத்தில் தைரியம் நிரம்பி யிருந்தது. அவன் தன்னுடைய ஒரு கையால் அந்தப் பெண்ணை அணைத்துப் பிடித்து அலைக்கு மேலே தூக்கிக் கொண்டிருந்தான். அவள் தன் கைகளை உயரத் தூக்கியவண்ணம் கத்தினள். கைகளை வீசித் தண்ணீரை வாரி இறைத்தாள்; பயங்கரமாக ஊளையிட்டாள்.

“ஐயையோ! நான் முழ்கிச் சாகிறேனே, கடவுளே! என் மூச்சுத் திணறுகிறதே!” என்று கூச்சல் போட்டாள். உப்புத் தண்ணீரை ‘அபக்’ ‘அபக்’ கென்று குடித்தாள்.

வேலன் அவளைத் தண்ணீருக்கு மேலேயே தூக்கிப் பிடித்திருந்தான். தன் பலம் முழுவதையும் உபயோகப் படுத்தி அவளைத் தண்ணீரில் மூழ்காமல் தூக்கிப் பிடித்திருந்தான். இன்னொரு கையால் தண்ணீரைத் தள்ளிக் கொண்டு கரையை நோக்கிப் பாய்ந்து நீந்தி வந்தான்.

திடீரென்று அடித்த பேரலை அவனைக் கரையை நோக்கித் தள்ளிக் கொண்டு வந்தது. அலையில் அவர்கள் இருவரும் ஒருவரோடு ஒருவர் கட்டி புரண்டு கொண்டு வந்ததைப் பார்த்தால் கடல் நீரில் குளித்து முழுகிக் களியாட்டம் ஆடும் காதலர்களைப் போலவே காட்சி அளித்தார்கள்!

வானத்தில் இருந்த வெண் நிலவு, மேகத்துக்குள் மறைந்த தன் பாதி உருவத்தைக் காண்பித்துக் கொண்டு நின்ற நிலையைப் பார்த்தால் அது இவர்களைப் பார்த்துச்

சிரிப்பது போலிருந்தது. சுற்றிச் சுற்றிச் சுழன்று வந்த கலங்கரை விளக்கின் பிரகாசமான வெளிச்சமும் சிரிக்கத் தான் செய்தது! வேலனின் வலிவுமிகுந்த கரங்களால் பிளந்து தள்ளப்படும் கடல் நீர்கூடச் சிரித்துக் கொண்டு தான் இருந்தது!

ஆமாம்! சிரித்துச் சிரித்தானே கவலையைத் தணித்துக்கொள்ள வேண்டும். துக்கமும் துயரமும் கஷ்டமும் கவலையும் சிரித்து மகிழ்வதில்தான் மறையும். நாம் எல்லாருமே சிரிக்கப் பழகிக் கொள்ள வேண்டும். எந்தத் துக்ககரமான செயலையும் பார்த்துச் சிரித்து விட்டால் எல்லாமே மறந்து விடும். அப்படிச் செய்வதற்கு நாம் என்ன நிலவா? கலங்கரை விளக்கா? இல்லை, கடல் அலைகளா? நாம் மனிதர்களாயிற்றே என்று நினைக்கிறீர்களா? ஆம் மனிதர்கள்தான். மனிதன் ஒருவனால்தான் சிரிக்க முடியும். பகுத்தறிவை உபயோகித்துச் சிரித்துப் பழக வேண்டும். பகுத்தறிவு இல்லாவிட்டால்தானே சிரிக்க முடியாது!

கடைசியாக வந்த பெரிய அலை வேலனையும் அந்தப் பெண்மணியையும் கரையில் கொண்டு வந்து தள்ளி விட்டது. தாங்கள் குடித்திருந்த கடல் நீரினால் களைத்துப் போய் இருவரும் அந்த ஈர மணலில் சோர்ந்து கிடந்தனர்.

சற்று நேரம் கழித்து, வானத்திலிருந்த நிலவு இன்னும் கொஞ்சம் மேலே வந்த பிறகு வேலன் களைப்புத் தீர்ந்து கண்களைத் திறந்து பார்த்தான். தன் எதிரில் சோர்ந்து படுத்துக்கிடந்த அந்தப் பெண்ணைப் பார்த்தான். அவளது தலைமயிர் கருப்பாக இருந்தது. நீளமாக இல்லாவிட்டாலும் அடர்ந்து இருந்தது. அலை அலையாக நெளிந்து லேசாக ஆடிக் கொண்டிருந்தது.

வயிறு நிறையத் தண்ணீர் குடித்திருந்ததால் அவள் வயிறு சற்று உப்பியிருந்தது. மிகுந்த களைப்புடன்

துவண்டு கிடந்தாள். மூச்சுத் திணறித் திணறி வந்து கொண்டிருந்தது. அவள் நிலைமையை வேலன் ஒரு கணத்தில் புரிந்து கொண்டான். உடனே உணர்ச்சி பெற்றான்.

சட்டென்று அவளைத் தூக்கித் தலையில் வைத்துக் கொண்டு சக்கரம் சுழற்றுவது போல் கிறு கிறுவென்று சுழற்றினான். அவள் குடித்திருந்த கடல் நீரெல்லாம் வெளியில் வந்து விட்டது. அவளைத் தூக்கிக் கொண்டு போய்க் காய்ந்த மணலில் போட்டான். அவளுக்கு முன்னால் கடல் பரந்து கிடந்தது; நிலவின் குளிர்ந்த கிரணங்களால் அது வர்ணிக்க முடியாத அழகு பெற்று விளங்கியது. மெதுவாக வீசிக் கொண்டிருந்த இளம் காற்று அவன் மனத்தில் விவரிக்க முடியாத ஏதோ ஒரு இன்பத்தை ஊட்டிக் கொண்டிருந்தது,

தன்னையும் அறியாமல் எழுந்து அவள் முகத்துக்கு முகம் நேராகப் பார்த்தான். அவளது சிவந்த உருண்ட கன்னங்களைப் பார்த்தான். ஈரம் பாய்ந்து துடிதுடிப்போடு இருந்த அழகிய உதடுகளைப் பார்த்தான். அது புன்சிரிப்பால் லேசாகப் பிரிந்து நின்ற கோலத்தைப் பார்த்தான். மூடியிருந்த கண்கள்; அதற்கு மத்தியில் நீண்டு வளைந்து நிமிர்ந்து நின்ற மூக்கு எல்லாவற்றையும் பார்த்தான். பார்த்துக்கொண்டே யிருந்தான்!

அவள் உடைகள் நனைந்து இருந்ததால் உடலோடு உடலாக ஒட்டிக் கொண்டிருந்தது. அவள் அணிந்திருந்த புடவையும், அதற்கு ஏற்ற ரவிக்கையும் அவள் உடலுக்குப் பொருத்தமாகவும் அமைப்பாகவும் இருந்தன. ஒரு கை தேர்ந்த சிற்பி கடைந்தெடுத்த பொற்பாவை போல் விளங்கினாள்.

அவன் பார்த்துக்கொண்டு இருக்கும்போதே மூடியிருந்த அவள் கண்கள் இரண்டும் திறந்தன. பட்டாம்

பூச்சியின் இறக்கைகள் போல் அந்தக் கண்களின் இமைகள் ஒரு கணம் படபடவென்று துடித்துக்கொண்டன. சற்று நேரம் இமைக்காமல் இருந்தன. அப்பொழுது அந்தக் கண்களை வேலன் கூர்ந்து பார்த்தான். அந்த இரண்டு கண்களும் சாதாரணக் கண்களா? இல்லை, கன்னங்கரேலென்று சுழன்ற கண்கள்; கருத்தைக் கவரும் கண்கள். தங்கள் இமைகளால் கை காட்டி, விழிகளால் இன்ப மூட்டி திக்கற்ற வேலனை திணற அடித்துக் கொண்டிருந்தன.

அவன் வியப்பும் திகைப்பும் அடைந்தவனாய் அந்த அழகிய கண்களைப் பார்த்தபடி யோசித்தான். மீண்டும் அந்தச் சுந்தர முகத்தைப் பார்த்தான். அவ்வளவுதான்; வந்தது மோசம்! அவன் உறுதியான உள்ளம் சலசலத்தது; பலம் நிறைந்த உடல் சிலு சிலுத்தது.

"என்ன அதிசயம்! என்றுமே அனுபவிக்காத உணர்ச்சியாக இருக்கிறதே! இவ்வாறு உடம்பைக் கிளுகிளுக்க வைக்கும் சக்தி அந்தக் கண்களில் இருக்கிறதா? என்ன காந்த சக்தியோ? என்ன மாய சக்தியோ? இப்படி மனத்தை மகிழ்விக்கிறதே!" என்று எண்ணினான் வேலன்.

அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை.

இந்த மாதிரி சமயத்தில் வேலனுக்கு மட்டுமா புரியாது! யாருக்குமே புரியாது! இந்திரனும், சந்திரனும், இராவணனும் இன்னும் எத்தனை எத்தனையோ இதிகாச புருஷர்களும் சரித்திர நாயகர்களும் தடுமாறித் தங்கள் நினைவிழந்ததை, அழிந்து மடிந்து போனதை நாம் படித்ததில்லையா?

ஆனால் வேலன் மனத்தில் காதல் பிறந்திருக்கிறது. அவன் கருத்து காதலால் கலங்கிவிடாது. அவன் வாழ்க்கையில் அடிபட்டவன் அல்லவா? இருந்தாலும் அவன்

ஏழையாயிற்றே! வீடு வாசல் அற்ற அனாதையாயிற்றே! அவன் உள்ளத்தில் காதல் ஏற்படலாமா?

காதலுக்கு யார் கட்டுப்பாடு விதிக்க முடியும்?

இந்தக் காதல் ஒன்றுதான் ஏழையென்றும் பணக்காரன் என்றும், பாமரன் என்றும் பட்டதாரி என்றும், உயர்ந்த சாதி தாழ்ந்த சாதி என்றும், ஆண்டை அடிமை என்றும் பாராமல் எல்லாருக்கும் ஒரே தரமாய் இருந்து வரும் அபூர்வ சக்தி! ஆனால் இது வளர்வதற்கு எத்தனை தடைகள்! எத்தனை தொல்லைகள்! அடடா! எழுத்தாலும் சொல்லாலும் அதை விளக்கிவிட முடியுமா? முடியாது! உலகம் தோன்றிய நாளிலிருந்தே இது இருந்து வருகிறது. இதனால்தான் உலகமும் வளர்ந்து வருகிறது என்று கூடச் சொல்லலாம்.

இதைப் போலவே இன்னொரு சக்தியும் இருக்கிறது. அதுவும் ஏற்றத் தாழ்வைப் பாராத அபூர்வ சக்திதான்! அந்தச் சக்திக்கு ஒவ்வொரு மனிதனும் என்றாவது ஒருநாள் பணிந்துதான் ஆகவேண்டும். ஆனால் அதைப்பற்றி இப்பொழுது நினைக்கக் கூடாது. வாழ்வை நினைத்த பின் தாழ்வை நினைப்பது வாழ்வுக்கு அழகல்ல!

இந்தச் சமயத்தில் அவள் தன் சுய உணர்வைப் பெற்றாள். 'கிறீச்' சென்று கத்திக்கொண்டு எழுந்து உட்கார்ந்தாள். சுற்றும் முற்றும் விழித்துப் பார்த்தாள். அவளுக்கு விஷயம் விளங்கி விட்டது. பயம் நிறைந்த தன் அகன்ற கண்களால் வேலனைப் பார்த்தாள்; பார்த்தாள்; பார்த்துக் கொண்டே இருந்தாள்.

அவள் கண்களில் நிரம்பியிருந்த பயம் கொஞ்சம் கொஞ்சமாக தெளிந்து கொண்டிருந்தது. கையில் ஒட்டியிருந்த மணலைத் தட்டிக் கொண்டே எழுந்தாள். ஈரப் புடவையை அப்படியே இறுக்கித் தன் இரு கைகளாலும்

முறுக்கிப் பிழிந்தாள். புடவைத் தலைப்பை உதறிக் கொண்டே தன் ஆடைகளைச் சரி செய்து கொண்டாள்.

வேலன் அவளைப் பாராதது போலவே ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டிருந்தான். புதுமையும் பூரிப்பும் கொண்டு விளங்கும் அவள் அழகிய உடலைப் பார்த்தான்.

அவளும் வாய் பேசாமல் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

நனைந்து போன உடைகளும், சிலுசிலு வென்று அடித்த ஈரக் காற்றும் குளிரை உண்டாக்கின. அலைகளின் ஓசை கேட்டுக் கொண்டிருந்தது.

அந்த அலைச் சத்தத்துக்கும் மேலே விம்மல் சத்தம் கேட்டது. வேலன் திடுக்கிட்டான். அவன் ஊனையும் உள்ளத்தையும் உருக்கிய அந்தச் சோகம் நிறைந்த சத்தம் தனக்கு எதிரில் நிற்கும் பெண்மணியிடமிருந்து தான் வருகிறது என்பதை ஒரு கணத்தில் உணர்ந்து கொண்டான்.

விம்மல் சத்தம் இப்பொழுது அழுகையாகப் பீறிக் கொண்டு வந்தது.

அந்த வேதனையை வேலனால் சகித்துக் கொண்டிருக்க முடியவில்லை. அந்த மணல் வெளியில் இப்படியும் அப்படியும் அலைந்தான். அவன் முதுகுக்குப் பின்னால் மூடிப் பிசைந்து கொண்டிருந்த கைகள் அவன் சிந்தனையின் வேகத்தைச் காண்பித்துக் கொண்டிருந்தன. நிலைப்படாமல் அலைபட்ட தன் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டான்.

"பெண்ணே!........" இந்த வார்த்தை அவன் வாயிலிருந்து வருவதற்குள் அவன் உடலில் ஒரு தரம் சூடு ஏறித் தணிந்தது. நெஞ்சு 'திக்திக்' கென்று துரித காலத்தில்

அடித்துக் கொண்டது. உடல் லேசாக நடுங்கியது.

அவள் தன் தலையைத் தூக்கி வேலனை நிமிர்ந்து பார்த்தாள். வேலனும் பார்த்தான். அவன் இதயம் துடித்துக் கொண்டிருந்தது. திடீரென்று மேகக் கூட்டத்திலிருந்து நிலவு வெளி வந்தது. அதனால் அந்த வெண்மணல் வெளி மேலும் வெளிச்சமாகிவிட்டது. இப்பொழுது அவளை வேலனால் நன்றாகப் பார்க்க முடிந்தது. சுருண்ட அவள் கேசம் கன்னத்தில் புரண்டு கொண்டிருந்தது. கரிய பெரிய கண்கள் சுற்றிச் சுழன்று கொண்டிருந்தன. அவள் இளம் தோள்கள் வெடவெட வென்று நடுங்கிக் கொண்டிருந்தன. அவள் அழகிய முகத்தைப் பார்த்தான். சற்றுக் கவனித்துப் பார்த்தான். அவள் கண்களிலிருந்து சாரை சாரையாக நீர் வடிந்து கொண்டிருந்தது.

"பெண்ணே! பயப்படாதே! உனக்கு எந்த விதமான தீங்கும் செய்ய மாட்டேன்" என்றான். அந்தக் குரலில் அன்பும் ஆதரவும், பரிவும் பாசமும் கலந்து இருந்தன.

அவள் பதில் பேசாமல் தலையைக் குனிந்தவண்ணம் நின்று கொண்டிருந்தாள். அவள் கால்கள் மணலைக் கிளறிக் கொண்டிருந்தன.

"எனக்கு எல்லாரும் ஒன்றுதான். நான் கடலில் முழுகிச் சாக வந்தேன். என்னைக் காப்பாற்றி எனக்குத் தீங்கிழைத்து விட்டீர்கள்!" என்றாள் அவள். அவள் சொன்ன வார்த்தைகளில் இருந்த அழுத்தம் வேலனை நடு நடுங்கச் செய்து விட்டது. அவன் ஒரு கணம் திகைத்து விட்டான்.

திடீரென்று வேலன் பேச ஆரம்பித்தான். தைரியமாகப் பேசினான். தன் பதினெட்டு வருஷத்து வாழ்க்கையில் அவளைப் போன்ற அழகியைப் பார்த்ததில்லை என்றான். சட்டென்று மேலே பேச முடியாமல் திணறினான்.

அப்பொழுதெல்லாம் அவன் இதயம் பேசியது. அவன் கண்கள் பேசின. அவன் உடலின் ஒவ்வொரு அவயங்களும் பேசிக் கொண்டிருந்தன.

அவள் குபீரென்று சிரித்தாள்.

அவள் சிரிப்பு வேலனின் இதயத்தைத் தாக்கி மயக்கி விட்டது. அவன் ஏதோ பேச முயன்றான். என்ன பேசுவது என்று தெரியால் திணறிக் கொண்டு நின்றான்.

வேலனைப் பார்த்து அவள் லேசாகச் சிரித்தாள். அவள் உதடுகள் அசைந்தன. அவள் உடல் நெளிந்தது. ஏதோ சொல்ல ஆரம்பித்தாள்.

"நீங்களும் என்னைப் போலவே வாழ்க்கையில் மிகுந்த கஷ்டம் அனுபவித்திருக்கிறீர்கள். சந்தோஷமில்லாமல் இருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன்" என்றாள்.

வேலனுக்கு இந்தச் சொற்கள் காதில் தேன் மாரி பொழிந்தது போலிருந்தது. அவன் சிறகில்லாமலே வான வெளியில் பறக்க ஆரம்பித்து விட்டான். அவன் உள்ளமும் உடலும் ஒரு புது உணர்ச்சி பெற்று விளங்கியது. அப்படியே சொக்கிப் போய் விட்டான்.

மிகுந்த சிரமத்துடன் பேச முயன்றான். மகிழ்ச்சியால் அவன் மூச்சு திணறிற்று. நெஞ்சை ஏதோ வந்து அடைத்தது. திணறிக் கொண்டே "பெண்ணே! உன் பெயர் என்ன?" என்றான்

"வேலம்மாள்!" என்றாள் கொஞ்சும் குரலில்.

"உண்மையாகவா? உன் பெயர் வேலம்மாளா?" என்றான். அவன் குரலில் வியப்பும் குதூகலமும் கலந்து கும்மாளி போட்டன.

"ஏன் அப்படி ஆச்சரியப்படுகிறீர்கள்?" என்றாள் மிகுந்த அமைதியோடு.

"என் பெயர் வேலன்" என்முன்.

"ஆ! என்ன பொருத்தம்!" என்ற வார்த்தைகள் அவளையும் அறியாமல் அவள் வாயிலிருந்து வெளி வந்தன.

சற்று நேரம் அங்கு மௌனம் நிலவியிருந்தது. அலை ஓசையைச் தவிர வெறு சத்தமே இல்லை.

அந்த சத்தத்தையும் மீறி ஒரு பெருமூச்சு விட்டான் வேலன். "நீ தற்கொலை செய்து கொள்ள ஏன் விரும்பினுய்? அப்படி உனக்கு என்ன நேர்ந்து விட்டது?" என்முன்.

"என்னைக் காப்பாற்றிய உங்களுக்கு எப்படி நன்றி தெரிவிப்பது என்றே தெரியவில்லை. ஏன் என்னைக் காப்பாற்றினீர்கள்? நான் சாக விரும்பினுலும் தெய்வம் என்னைச் சாகவிடாது போலிருக்கிறதே" என்முள் மிகுந்த அலுப்புடன்.

வேலன் ஒரு நிலைக்கு வந்துவிட்டான். அவன் மூளை தெளிவாக இருந்தது. அவன் சிந்தனை செயல்பட ஆரம்பித்து விட்டது.

"பெண்ணே! தற்கொலை ஒரு கோழையின் செயலாகும். கண்ணகி பிறந்த நாட்டில், வீரப் பெண்மணிகள் தோன்றிய தமிழகத்தில் பிறந்த நீ தற்கொலை செய்து கொள்ளலாமா? தற்கொலை செய்து கொள்வதாயிருந்தால் ஒரு நாளைக்கு நான் நூறு முறை தற்கொலை செய்து கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட கஷ்டம் எனக்கு. ஆனல் நாம் கஷ்டப்படுகிருேமே ஒழிய, இந்த உலகம் இன்பமானது. நீல வானமும், நிலவும், கடலும், அதன் அலைகளும், இந்த வெண் மணலும் இன்பமயமாக விளங்கவில்லையா? நம் அறிவினல் துன்பத்தை ஒதுக்கித் தள்ளி இன்பத்தை எடுத்துக் கொள்ள வேணும். அது தான் வாழும் வழி. நம் காரியம் முடிந்த பிறகுதான் சாவோம்;

அது வரை நமக்குச் சாவே கிடையாது'' என்றான். கடைசியில் அவளையும் தன்னுடன் சேர்த்துக்கொண்டு பன்மையில் கூறி முடித்தான்.

வேலம்மாள் கவனமாக இதைக் கேட்டாள். ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள். ''ஐயா! நீங்கள் என் அறிவைத் தூண்டி விட்டீர்கள். இனிமேல் நான் சாக மாட்டேன். சாக முயற்சிக்கவும் மாட்டேன். நான் இந்த உலகில் வாழப் பிறந்தவள். இப்பொழுது நாழியாகி விட்டது. அடுத்த ஞாயிற்றுக்கிழமை மாலையில் இங்கு வாருங்கள். என் வாழ்க்கைக் கதையை, என் சோக சரித்திரத்தைச் சொல்லுகிறேன்'' என்றாள். கை கூப்பி வேலனை வணங்கினாள். சட்டென்று திரும்பினாள். அந்தக் கடற்கரை மணலையும் லட்சியம் செய்யாமல் வேகமாகச் சென்றாள்.

''இவள் சாதாரணப் பெண்ணா? இல்லை பெண் உருவில் வந்த மோகினியா?'' என்று நினைத்தான் வேலன். அவள் சென்ற திக்கையே பார்த்துக் கொண்டிருந்தான். தன் வலது காலினால் மணலைக் கிளறிக் கொண்டே திக்பிரமை பிடித்தவன் போல் நின்று கொண்டிருந்தான். தூரத்தில் மணல் வெளியில் வேலம்மாளின் அழகிய உருவம் நடந்து சென்றது. கலக்கமும் பிரமையும் நிறைந்து நின்ற தன் கண்களை இமைக்காமல் அந்த உருவத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். பால் போன்ற நிலவு பிரகாசித்துக் கொண்டிருந்தது. விரிந்து பரந்து கிடக்கும் கடல் சிரித்துக் கொண்டிருந்தது.

* * *

மறு நாள்.

வேலன் இன்று ஒரு முடிவுக்கு வந்துவிட்டான். ஏதாவது ஒரு வேலையை எப்படியாவது தேடிக் கண்டு பிடித்து விட வேண்டும் என்று தீர்மானம் செய்து கொண்டான்.

அடுத்த ஞாயிற்றுக்கிழமை வேலம்மாளைப் பார்க்கும் போது வயிற்றில் பசி இருக்கக் கூடாது என்று எண்ணினான். "அன்றைக்குப் போன தொழிற்சாலைக்கே போய் மீண்டும் வேலை கேட்க வேண்டும். எவ்வளவு கஷ்டமான வேலையாக இருந்தாலும் குறைந்த கூலியாக இருந்தாலும் அதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். அந்தத் தொழிற்சாலை மேஸ்திரி சாதாரண தண்ணீர் கொடுக்கும் பையனாக இருந்து மேஸ்திரி வேலைக்கு உயர்ந்தவர் என்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். அவருக்கு ஏழையின் கஷ்டம் தெரிந்திருக்கும். அவரை எப்படியாவது நேரில் பார்த்து வேலை வாங்கி விட வேண்டும்."

இப்படி நூறாவது தடவையாக நினைத்துக் கொண்டு "காந்தி இரும்பு தொழிற்சாலை"யை நோக்கிப் புறப்பட்டான். அவன் வயிறு நேற்றுப் போலவே காலியாக இருந்தது. வயிற்றின் கொடுமையை நினைத்து ஒரு நீண்ட பெரு மூச்சு விட்டான். வேலமாளின் நினைவு வந்தது. அவள் அழகிய முகம் அவன் மனத்துக்கு ஒரு தெம்பைக் கொடுத்தது. ஏதோ பாட்டை வாயால் முணு முணுத்துக் கொண்டே ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தான். ஆகாயம் நிர்மலமா யிருந்தது.

காலை நேரத்திலேயே வெய்யில் கடுமையாக காய்ந்தது. தூரத்தில் காந்தி தொழிற்சாலையின் பெரிய கட்டிடம் தெரிந்தது. எத்தனை எத்தனையோ தொழிலாளர்கள் சேர்ந்து உழைத்த உழைப்பெல்லாம் அந்தக் கட்டிடத்தின் கம்பீர்யத்தில் தெரிந்தது கட்டிடம் நிலைத்து நிற்பதற்காக அஸ்திவாரம் எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் தொழிற்சாலையின் உயர்வுக்குத் தொழிலாளர்கள். ஆனால் அந்தப பெரிய கட்டிடத்தின் பூமிக்கு அடியில் அஸ்திவாரம் இருப்பதை யாராவது பார்க்கமுடியுமா? அது தன்னைத் தியாகம் செய்து கொண்டு கட்டிடத்தைக்

காப்பாற்றி வருகிறது. அதுபோலவே எத்தனை எத்தனையோ தொழிலாளர்கள் உழைப்பால், காந்தி இரும்புத் தொழிற்சாலைக்குப் பெயரும் புகழும் வந்தாலும் அதனால் லாபம் பெறுபவர் அதன் முதலாளிதான்.

இந்தத் தொழிற்சாலையின் முதலாளிக்கு காந்தி மகானின் மீதோ நம்பிக்கை கிடையாது. இருந்தாலும் அந்த மகானிடம் மக்களுக்கு இருக்கும் எல்லையற்ற பக்தியை வைத்துப் பணம் பண்ணுகிறார்.

அந்தத் தொழிற்சாலையின் வாசலில் இவனைப் போலவே இன்னொரு வாலிபன் உட்கார்ந்திருந்தான். வேலன் அவனை நெருங்கி, "ஏன் ஸார்! மேஸ்திரி ஐயா வந்துவிட்டார்களா?" என்று கேட்டான். அவன் குரலில் பணிவு இருந்தது.

"ஏன்?" என்றான் அந்த வாலிபன்.

"அவரைப் பார்த்து வேலை கேட்பதற்குத்தான்!"

"பெரிய மனிதர்கள் யாரிடமிருந்தாவது சிபார்சுக் கடிதம் கொண்டு வந்திருக்கிறீரா?"

"சிபார்சுக் கடிதமா? சிபார்சுக் கடிதம் எதற்கு ஸார்? என் கையில் வேலை யிருக்கிறது. பட்டரையில், லேத்தில் என்னை விட்டுப் பார்க்கட்டும். வேலை செய்து காண்பிக்கிறேன். அதோடு இந்தக் தொழிற்சாலையின் மேஸ்திரி ஏழைக்கு இரங்குபவர் என்றும் கேள்விப் பட்டேன்."

"உன்னைப்போல் தான் நானும் கேள்விப் பட்டேன். ஆனால் அவர் தன்னையே முதலாளி என்று நினைத்துக் கொண்டிருக்கிறார். முதலாளிக்கும் இவர் வார்த்தையில் அசைக்க முடியாத நம்பிக்கை."

"சந்தோஷப்பட வேண்டிய காரியம் ஸார் நம்மைப் போல ஒரு தொழிலாளியை மேஸ்திரியாக்கி அவரை இவ்வளவு தூரம் நம்புவதற்காக முதலாளியைப் பாராட்ட வேண்டும்."

"உங்களுக்கு ஒன்றும் தெரியவில்லை என்றுதான் நினைக்கிறேன். அவர் வேலையை மெச்சி, அவர் திறமையைப் புகழ்ந்து அவரை மேஸ்திரியாக்கிவிட வில்லை அவரிடம் நல்ல திறமை இருக்கிறது. அவர் திறமைக்கு ஒரு பட்டம் பெற்றவரை வைப்பதாயிருந்தால் ஆயிரம், இரண்டாயிரம் கொடுக்க வேண்டும். அப்படியே கொடுத்தாலும் அவர்களிடம் தொழில் திறமையைப் பூரணமாகக் காண முடியாது. அதற்காகத்தான் இவரை மேஸ்திரியாக்கி அவருக்கு எழுநூறு ரூபாய் சம்பளத்தைக் கொடுத்துச் சில சாதாரணமான அதிகாரங்களையும் கொடுத்திருப்பது போல பாவனை செய்திருக்கிறார் முதலாளி."

"அந்த அளவுக்காவது முதலாளியைப் பாராட்டத் தானே வேண்டும்?"

"ஆமாம் பாராட்டத்தான் வேண்டும். என் வீட்டுக்குப் பக்கத்தில் ஒருவர் கோழி வளர்க்கிறார். தினம் தனக்கு இல்லாவிட்டாலும் கோழிக்கு நல்ல தீனி போடுகிறார். ஏன்? அதன் மீது இரக்கப்பட்டா? வாயில்லாத ஜீவன் ஆயிற்றே பட்டினியோடு கிடக்கிறதே என்று பச்சாதாபப் பட்டா? அதெல்லாம் ஒன்றுமில்லை. கோழி நன்றாக வளர்ந்தால் ஒரு நாள் நல்ல விருந்துக்கு உதவுமே என்று தான். அப்படித்தான் இங்கும் மேஸ்திரிக்குக் கருணை காட்டப்படுகிறது."

அது எப்படியாவது போகட்டும், மேஸ்திரி எனக்கு வேலை கொடுப்பார் இல்லையா?"

"அந்த மேஸ்திரி வேலை கொடுப்பாரா, மாட்டாரா என்பதை நீரே தெரிந்து கொள்ளும். இந்தத் தொழிற் சாலையிலேயே அவருடன் வேலை செய்யும் ஒரு தொழி லாளி இருக்கிறார். அந்தத் தொழிலாளியும் மேஸ்திரியும் ஒன்றாகவே இந்தத் தொழிற்சாலைக்கு வந்தவர்கள். அவர் திறமைசாலி என்பதும் மேஸ்திரிக்குத் தெரியும். அவர் மேஸ்திரியிடம் தம் சம்பளத்தை உயர்த்தச் சொல்லிக் கேட்டாராம். அதற்கு மேஸ்திரி என்ன பதில் சொன்னார் தெரியுமா? 'பி. ஏ., — எம். ஏ., படித்து இன்ஜினியர் பட்டம் பெற்றவர்கள் எல்லாம் இருநூறு முந்நூற்றுக்குத் தாளம் போடுகிறார்கள். நீ இருநூற்று ஐம்பது ரூபாயை முழுசா வாங்கிக் கொண்டு போதவில்லை என்கிறாயே. கடவுள் அவரவர்களுக்குத் தகுந்தபடி அளந்துதான் விட் டிருக்கிறார்' என்று சொன்னாராம். இவர் அக்கிரமத்துக்குக் கடவுள் துணை! 'மேஸ்திரி ஐயா எந்தக் காலேஜில் இன்ஜினியர் பட்டம் பெற்றுக் கொண்டு வந்து வேலை செய்கிறாரு! மாதம் எழுநூறு ரூபாய்க்கு மேலே வாங்கிக் கொள்ளுகிறாரே' என்று கேட்கலாமா என்று அந்தத் தொழிலாளி நினைத்தாராம். ஆனால் கேட்கவில்லை. அப் படிக் கேட்டால் வேலைக்கே ஆபத்து வந்துவிடுமே என்று பேசாமல் இருந்து விட்டார். அப்படிப்பட்ட புண்ணிய வானா உமக்கு வேலை கொடுக்கப் போகிறார்? எனக்கு என்னவோ நம்பிக்கை இல்லை" என்று ஒரு நீண்ட பிரசங்கமே செய்தான் அந்த வாலிபன்.

"வெறும் ஏட்டுப் படிப்பு படித்து விட்டால் மட்டும் சிறந்த அறிவாளி ஆகிவிட முடியுமா? இந்தத் தொழில் நிலையத்திலேயே பத்து வருஷங்களுக்கு மேலாக வேலை செய்து வருகிறாரே அந்தத் தொழிலாளி; அது மட்டும் படிப்பில்லையா? இது நல்ல அனுபவம் நிறைந்த, அறிவு நிறைந்த, உழைப்பின் மூலம் நேரிடையாகக் கற்ற கல்வி

யாயிற்றே ஸார். பள்ளிக்கூடங்களில் யார் இப்படிக் கற்றுக் கொடுக்கிறார்கள். அதை அந்த மேஸ்திரிக்கு எடுத்துச் சொல்லவேணும். சொன்னால்தானே அவருக்குத் தெரியும்'' என்றான் வேலன்.

அந்த வாலிபன் வேலனின் நிலை கண்டு இரங்கினான். ''ஸார்! நான் சொல்லுவதைக் கேட்டுக்கொள்ளுங்கள். என் தந்தையும் ஒரு தொழிலாளிதான். அவர்தான் எனக்கும் சொன்னார். அதைத்தான் உங்களுக்குச் சொல்லுகிறேன். எங்கேயாவது வேலைக்கு இருந்தால் நியாயத்தையும் உண்மையையும் விட மேலே இருக்கிறவர்களின் மனதறிந்து நடந்துகொள்ள வேணும். அவர் மூன்றும் மூன்றும் பத்து என்றால் 'ஆமாம்' என்றுதான் சொல்ல வேணும். 'இல்லை ஆறு' என்றால் அது உண்மையாக இருந்தாலும் தன்னை மதிக்க வில்லை என்று மேலே இருப்பவர் கோபித்துக் கொள்ளுவார் என்று சொல்லியிருக்கிறார். நாம் அப்படியே நடக்கவேண்டுமென்பதில்லை. பொறுத்திருந்து சமயம் பார்த்து அவர்களிடம் உண்மையையும் நியாயத்தையும் எடுத்துச் சொல்லலாம். இப்படிப் பொறுமையைக் கடைப் பிடிக்காததால்தான் எத்தனையோ தொழிலாளிகள் வேலையை இழந்து விடுகின்றனர்'' என்றான் அந்த வாலிபன்.

வேலன் சிரித்தான்.

''என்ன சிரிக்கிறீர்களே! உங்களிடம் சொல்லுவதற்கு என்ன? எனக்கு உண்மையிலேயே வேலை செய்யத் தெரியாது. எப்படியோ அவரை இவரைக் காக்காய் பிடித்துச் சிபாரிசுக் கடிதமும், நான் படித்த தொழிற் பள்ளிக்கூடத்துச் சர்டிபிகேட்டும் பெற்று வந்திருக்கிறேன். நிஜமாகவே வேலை செய்து காண்பி என்றால் என் பாடு திண்டாட்டம்தான்!'' என்றான் அந்த வாலிபன். அவன் குரலில் உண்மை இருந்தது.

“நண்பரே! வித்தியாசமாக நினைத்துக் கொள்ளக் கூடாது. நான் ஒரு ஏழை. சாப்பிட்டு இரண்டு நாள் ஆகிறது. எனக்கு இந்த வேலைகளில் நல்ல அனுபவம் உண்டு. படித்துப் பட்டம் பெற்ற மேதாவிகள் கூட என்னோடு வேலை செய்ய முடியாது. இருந்தும் என்ன? எனக்கு எந்தப் பெரிய மனிதர்களையும் தெரியாதே சார்! நீங்கள் தான் உதவி செய்ய வேணும்” என்று அழமாட்டாக் குறையாகச் சொன்னான் வேலன். அவன் கண்கள் கலங்கி யிருந்தன.

“பயப்படாதீர்கள். இந்த தொழிற்சாலையில் மாதச் சம்பளத்துக்கு உங்களை வேலைக்கு வைத்துக் கொள்ளும்படி என்னால் செய்ய முடியாது. ஆனால் தினக் கூலிக்குக் கட்டாயம் ஏற்பாடு செய்கிறேன். அது என்னால் முடியும்!”

“ரொம்ப வந்தனம், சார்!” என்றான் வேலன்.

அந்த வாலிபன் ஒரு எட்டணா காசை எடுத்து அவனிடம் கொடுத்து “நீங்கள் போய் ஏதாவது சாப்பிட்டு விட்டு வாருங்கள். நான் உங்கள் வேலைக்கு ஏற்பாடு செய்கிறேன்” என்றான்.

வேலனைப் பார்த்தவுடனேயே அவனுக்கு ஏதாவது உதவிசெய்ய வேண்டும் என்று அந்த வாலிபனுக்குப் பட்டு விட்டது. வேலனின் களங்கமற்ற முகம், கவடு சூதற்ற பேச்சு அவன் இதயத்தைத் தொட்டு விட்டது. பார்த்தால் பெரிய செல்வந்தர் வீட்டுப் பிள்ளைபோல் தோற்றமளிக்கிறான். பேச்சில் உயர்ந்த பண்பு இருக்கிறது. முகத்தில் நல்ல தைரியம் இருக்கிறது. எல்லாம் இருந்தும் என்ன? வறுமைதான் அவனை வாட்டிக் கொண்டிருக்கிறதே! அவனைப் பார்க்கும்போது நாம் எவ்வளவோ மேல் அல்லவா? என்று அந்த வாலிபன் உள்ளம் எண்ணியது.

இப்படித் தமக்குக் கீழே இருப்பவர்களைப் பார்த்துத் திருப்திப் படவேண்டியதுதான். ஆனால் அதற்காகக் கீழே இருப்பவர்கள் கீழேயே இருக்கும்படி விடலாமா? அவர்கள் தரம் உயரப் பாடுபட வேண்டாமா? அவர்கள் வாழ்க்கைத் தரம் உயர முடியாமல், உண்டு களித்து வாழும் கூட்டத்துக்கும் பாடம் கற்பிக்கப் பாடுபட வேண்டும்.

வேலன் அகமும் முகமும் மலர அந்தக் காசை வாங்கிக் கொண்டு போய் அதிக விளம்பரம் இல்லாத ஆனால் சுகாதார சுத்தத்துடன் இருக்கும் சாதாரண ஹோட்டலில் போய் வயிறு நிறையச் சாப்பிட்டு விட்டு வந்தான்.

"தேசியம், சமதர்மம், என்றெல்லாம் வானளாவ மேடை ஏறிப் பேசுகிறார்கள். ஏழை மக்களின் துயரங்களை வாய் கிழிய வார்த்தைகளால் அடுக்குகிறார்கள். அதன் மூலம் ஏழை மக்களின் செல்வாக்கைப் பெற்றுத் தங்கள் சொந்த வாழ்க்கையை உயர்த்திக் கொள்ளும் ஏழை பங்காளர்களான பங்களா வாசிகளை விட உண்மையிலேயே ஏழைக்கு இரங்கும் ஏழைகள் நாட்டில் இன்னும் இருக்கத்தான் செய்கிறார்கள். அப்படிப்பட்ட ஏழைகளால் தான் தேசத்தில் இன்னும் கொஞ்சமாவது நியாயமும் தர்மமும் இருந்து வருகிறது; மழை பெய்கிறது" என்று எண்ணினான் வேலன். வயிற்றுப் பசியை நீக்கிய அந்த வாலிபனுக்கு மானசீகமாகத் தன் நன்றி கலந்த வணக்கத்தையும் மரியாதையையும் தெரிவித்துக்கொண்டான்.

* * *

**யா**ரோ முன்பின் தெரியாத அந்த வாலிபனின் உதவியால் வேலனுக்குக் காந்தி இரும்புத் தொழிற்சாலையில் வேலை கிடைத்தது. தினக் கூலிக்குத்தான்; தினம் மூன்று ரூபாய் கூலி கிடைத்து வந்தது. வேலன் சந்தோஷமாகவும்

உற்சாகமாகவும் வேலை செய்தான். அவனுடைய அபார மான வேலைத் திறமையையும் தொழில் நுணுக்கங்களில் உள்ள சாமர்த்தியங்களையும் பார்த்து அவனுடன் வேலை செய்துவந்த தொழிலாளர்கள் வேலனை மெச்சிப் பாராட்டி ஞர்கள். அவனுக்கு இருக்கும் அபூர்வமான மூளைத் திறமையை எண்ணி வியந்து போனார்கள். அவன் அதிகச் சம்பளம் வாங்கும் பெரிய தொழில் நிபுணர்களைவிட அதிகமாகவே உற்பத்தி செய்தான். மிகவும் சுத்தமாகச் சாமான்களைச் செய்தான். இருந்தும் அவன் பிற தொழி லாளர்களைப் போலக் களைப்பு அடைவதில்லை. சிரித்துக் கொண்டும், பேசிக் கொண்டும் அவ்வப்போது பலப்பல ஹாஸ்யங்களை அள்ளி வீசிக் கொண்டும் வேலை செய் தான். அவனுடைய சரளமான சுபாவமும், கபடமற்றப் பேச்சும், கருத்தான வேலைத் திறனும் தொழிலாளர்களை எல்லாம் கவர்ந்து விட்டது. அவர்கள் வேலனை சுற்றிச் சுற்றி வந்தார்கள். நாலு தினங்களுக்குள்ளாகவே வேலன் அந்தத் தொழிற்சாலையின் அத்தனை தொழிலாளர்களின் கவனத்துக்கும் உரியவனாகி விட்டான்.

வேலை முடிந்து திரும்பியதும் அவன் வயிறு நிறையச் சாப்பிடுவான். தன் சகத் தொழிலாளி வீட்டில் போய்ப் படுத்துக் கொள்வான். அந்த தொழிலாளி வேலனுக்கு ஒரு அறை கொடுத்து உதவியிருந்தான். அப்போது அவ னுக்கு வேலம்மாளின் நினைவு வந்துவிடும். அவள் வரச் சொன்ன ஞாயிற்றுக்கிழமையை நினைத்துப் பார்ப்பான். நாலு நாட்கள்தான் ஆகியிருக்கிறது. இருந்தும் அவனுக்கு அது நாலு வருஷங்கள் ஆகிவிட்டதுபோல ஒரு தோற்ற மும் கூடவே நேற்றுத்தான் வேலம்மாளைச் சந்தித்தது போல ஒரு இன்ப நினைவும் ஏற்படும். அவன் உள்ளம் வேலம்மாளைப் பார்ப்பதற்காகத் துடிதுடித்துக் கொண் டிருந்தது. தன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த

வேலம்மாளின் களியும் ஒளியும் நிறைந்த கண்களை நினைத்து அவன் மனம் குழம்பிப் போவான். அவள் மணல் வெளியிலே மயங்கிக் கிடந்த கோலத்தை நினைத்துப் பார்த்து மகிழ்ந்து போவான். அமைதியாக, மௌனமாக, அழகாகக் கிடந்த வேலம்மாளின் எழில் உருவம் அவன் மனக் கண் முன் வரும். புன்னகை செய்தபடி நெளிந்து கொண்டிருந்த உதடுகள், மனத்தை மயக்கிய அந்தக் கரிய பெரிய மருளும் விழிகள், குழி விழுந்த சிவந்த கன்னங்கள், சுருள் சுருளாகக் காற்றில் அலைந்த கருமையான கேசங்கள் எல்லாமே நினைவுக்கு வரும். அந்த மகிழ்வூட்டும் இன்பக் காட்சியை எண்ணிய வண்ணம் தூங்குவான்.

அன்றும் அப்படித்தான் அவன் வேலம்மாளை நினைத்துக் கொண்டு படுத்திருந்தான், நீண்ட நேரம் வரை அவனுக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. சுற்றிலும் இருள் சூழ்ந்திருந்தது. இருளும் அமைதியும் அவனை என்னவோ செய்து கொண்டிருந்தது. வெளியில் வந்து வானத்தை அண்ணாந்து பார்த்தான். மின்னும் நட்சத்திரங்கள் அவனைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டிச் சிரித்தன. கொஞ்ச நேரம் அந்த நட்சத்திரங்களைப் பார்த்தான். திரும்பவும் படுத்துக்கொள்ளத் தன் அறைக்குள் சென்றான். படுக்கையில் படுத்தான். கண்ணை மூடினான். விதி அவனைப் பார்த்துச் சிரித்தது!

* * *

ஐந்து நாட்கள் கழிந்தன. ஞாயிற்றுக்கிழமை வந்தது. வேலன் அன்று அதிகாலையிலேயே எழுந்து விட்டான். வேலம்மாளைப் பார்க்கப் போகிறோம் என்ற எண்ணம் அவன் மனத்தைக் குதூகலிக்கும்படிச் செய்து கொண்டிருந்தது. எப்பொழுது மாலை வரும் வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். அடிக்கடி கடிகாரத்தைப் பார்த்தான். அவன் மனோ வேகத்துக்குத் தகுந்தபடி

கடிகாரம் ஓடுமா? கடிகாரம் ஓடுவதாகவே அவனுக்குத் தோன்றவில்லை. பொழுதே போகாதோ என்று நினைத்தான். எப்படியோ வேலனை வேதனைப் படுத்தி வந்த பகல் பொழுது ஒரு மாதிரி நகர்ந்து விட்டது.

வேலன் தன்னை நன்றாக அலங்காரம் செய்து கொண்டான். சலவை மடிப்பு கலையாத சட்டையும் வேஷ்டியும் அணிந்து கொண்டான். நேரே கடற்கரைக்குச் சென்றான்.

வேலம்மாள் அவனுக்கு முன்னதாகவே அங்கு வந்து காத்திருந்தாள். வேலனை அவளுக்குச் சட்டென்று அடையாளம் தெரிந்து கொள்ள முடியவில்லை. வேலனுக்கும் அவளை அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. சற்று நேரம் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

வேலம்மாள் "வணக்கம்!" என்றாள்.

வேலனும் "வணக்கம்" என்றான்.

சடக்கென்று வேலம்மாள் எழுந்தாள். அங்கிருந்து நடக்க ஆரம்பித்தாள்.

வேலனும் அவளைப் பின்தொடர்ந்து சென்றான்.

வேலம்மாளும் வேலனும் மௌனமாகவே சென்று கொண்டிருந்தனர். அவன் அவளைக் கடைக் கண்ணால் பார்த்துக் கொண்டே சென்றான். அவளும் அவனை ஓரக் கண்ணால் பார்த்த வண்ணம் சென்றாள். அப்பொழுது இருவர் கண்களும் விநோதமாகப் பிரகாசித்தன. அவள் கன்னங்குழிய சிரித்தாள். அவனும் சிரித்தான். ஆனால் இருவரும் எதுவும் பேசவில்லை. அவர்கள் பாதங்கள் கடற்கரை மணலில் புதைந்து எழுந்தன.

தூரத்தில் தெரிந்த ஒரு தோட்டத்தை நோக்கி அவர்கள் சென்று கொண்டிருந்தனர். திடீரென்று புடவைத் தடுக்கி வேலம்மாள் தடுமாறி விழுந்து விட்டாள். வேலன்

அவளைத் தாங்கிப் பிடித்தான். அப்பொழுது அவள் உடல் வெட வெட வென்று நடுங்கியது; நெருப்பாகச் சுட்டது!

வானம் நிர்மலமா யிருந்தது. அவர்கள் அந்தச் சிறிய தோட்டத்துக்குள் வந்து விட்டனர். தூரத்தில் ஒரு பறவை கீதம் இசைத்துக் கொண்டிருந்தது. வேலன் அந்தக் கீதத்தைக் கேட்டான். வேலம்மாளும் அனுபவித்தாள். சற்றுத் தூரத்தில் ஒரு மரம் தாழப் படர்ந்திருந்தது. வேலம்மாள் அதைப் பார்த்தாள். அதன் கிளையில் ஏறி அமர்ந்தாள். அந்த மரத்தைச் சுற்றி மலர் குலுங்கும் புஷ்பச் செடிகள் நிறைந்திருந்தன. வேலன் அவளுக்குப் பின்னால் இருந்த வேறு ஒரு கிளையைப் பிடித்த வண்ணம் அவளை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் மரக்கிளையிலிருந்து கீழே இறங்க முயன்றாள். வேலன் அவள் கையைப் பிடித்து இறக்கி விட்டான். அவ்வளவுதான்! ஏதோ ஒரு காந்த சக்தி தன்னைத் தாக்கியதுபோல் உணர்ந்தான். அப்படியே கண்ணை மூடிக் கொண்டான்.

அவன் உடல் காற்றிலே பறப்பது போலிருந்தது. அவன் வான மண்டலத்தை நோக்கிச் செல்லுகிறான். அவன் கையைப் பற்றிய வண்ணம் வேலம்மாள் நடந்து வருகிறாள்.

இருவரும் மேகக் கூட்டங்களில் நடந்து செல்லுகின்றனர். வெள்ளை மேகங்கள் அவர்களுக்கு வழி விட்டு விலகி நின்றன. மின்னும் நட்சத்திரங்கள் கண்ணைச் சிமிட்டி வரவேற்பு அளிக்கின்றன. மேகங்கள் மீது கால்கள் படுகின்றதா என்றே சந்தேகமா யிருக்கிறது. பட்டுப் போன்ற அவ்வளவு மிருதுவான மேகங்கள்.

வேலன் கண்ணைத் திறந்தான். வேலம்மாள் சற்றுத் தூரத்தில் தன்னையே உற்றுப் பார்த்துக் கொண்டு நிற்பதைப் பார்த்தான்.

"வேலம்மாள்!" என்ருன்.

"ஏன்?" என்ருள்.

"இன்றைக்கும் நாழியாகி விட்டது என்று சொல்லி விட்டுப் போய்விடுவாயோ?"

"அப்படிச் செய்ய மாட்டேன்."

"அப்படியானுல் நீ ஏன் கடலில் விழுந்தாய்? இன்று அதைச் சொல்வதாகச் சொன்னுயே?"

வேலம்மாள் அவன் அருகில் வந்து அமர்ந்தாள்.

"ஐயா! தங்களை எனக்கு முன்பின் தெரியாது. இருந்தாலும் தாங்கள் எனக்கு உயிர் அளித்தீர்கள். என் உள்ளத்திலும் இடம் பெற்று விட்டீர்கள். உயிர் கொடுத்த உங்களிடமே என் வாழ்க்கையையும் ஒப் படைத்து என் கதையைச் சொல்லுகிறேன், கேளுங்கள்!" என்ருள்.

வேலன் நிறைந்த ஆவலோடு அவள் முகத்தைப் பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தான்.

வேலம்மாள் பேச ஆரம்பித்தாள். அவள் சொற் கள் பொன்னிறக் கதிர்கள் மின்னும் நெல் வயல்களின் மீது காலை இளங் காற்று வீசுவது போலிருந்தது. அவள் பேச்சில் ஒரு தெளிவும், அபூர்வமான வேகமும், உயர்ந்த பண்பும் கலந்து இருந்தன. குரலில் ஒரு இனிமை இருந்தது.

கடலிலிருந்து அடித்த குளிர்ந்த காற்றினுல் வேலம்மா ளின் அழகிய கூந்தல் கலைந்து விட்டது. அவள் கலைந்த் கூந்தல் காற்றில் பறந்தது. அது அவள் நெற்றி, கன்னம்,

தோள்களில் எல்லாம் புரண்டு கொண்டிருந்தது. அவள் அதை யெல்லாம் சிறிதும் பொருட் படுத்தாமல் தன் கதையைச் சொல்ல ஆரம்பித்தாள். எங்கோ தூரத்தில் யாரோ இருவர் கலகல வென்று சிரிக்கும் சத்தம் காற்றில் மிதந்து வந்தது!

கையில் கரணைப் பிடித்து வேலைசெய்து பணம் சேர்த்தவர் என் அருமைத் தகப்பனுர். அவர் உயிரோடு இருந்த வரையில் எனக்கு எந்த விதமான குறைவும் வைக்கவில்லை. இந்த உலகம் எல்லாம் இன்ப மயமாகவும் மனிதர்கள் எல்லாம் உயர்ந்த குணம் படைத்தவர்களாகவுமே நினைத்து வந்தேன். நான் அவருடைய ஒரே மகள் ஆனதால் என்னை மிகவும் செல்வமாக வளர்த்து வந்தார். என் தகப்பனுரின் எல்லையற்ற அன்பினுலும், என் தாயாரின் பரிபூர்ணமான ஆதரவிலும் வளர்ந்து வந்தேன். சாப்பிடுவதும் சந்தோஷமாகப் பள்ளிக்கூடம் போவதும், கும்மியடிப்பதும், கோலாட்டம் ஆடுவதும்தான் என் வேலை. அப்போது என் கவலை யெல்லாம் வேளைக்கு ஒரு ஆடையணிவதும், அதற்கு ஏற்றாற்போல் நகைகள் சூட்டிக்கொள்வதும் தான். அந்தக் காலம் இனிமேல் எப்பொழுது திரும்பி வரப் போகிறது?'' என்று கூறிப் பெருமூச்சு விட்டாள் வேலம்மாள்.

"எல்லாம் நாமே நினைத்துக் கொள்வதுதான். கொஞ்சம் பகுத்தறிவை மட்டும் உபயோகப்படுத்தினுல் எந்தக் காலத்திலும் சந்தோஷமாக இருக்கலாம்'' என்ருன் வேலன்.

"பகுத்தறிவுதான் கிடையாதே! என்ன செய்வது?'' என்று அலுத்துக் கொண்டே மேலே தன் கதையைத் தொடர்ந்தாள் வேலம்மாள்.

"என் தந்தைக்கு முருகப் பெருமானிடம் அலாதி பக்தி! முருகன் என்றால் போதும் அவரிடம் ஒரு தனி உணர்ச்சி ஏற்பட்டு விடும். அதனால் தான் எனக்கும் வேலம்மாள் என்று பெயர் வைத்தார். அவர் போகும் இடமெல்லாம் என்னை அழைத்துக் கொண்டு போவார். சில சமயங்களில் அவர் வேலை செய்யும் இடங்களுக்குக் கூடச் சென்றிருக்கிறேன். அப்போது சேற்றையும் செங் கல்லையும் வைத்துச் சுவர் எழுப்பும் என் தகப்பனாரின் வேலையைப் பார்த்துப் பிரமித்துப் போவேன். அடாடா! அவருடைய வேலைத் திறமையைப் பார்த்துப் பாராட்டா தவர்களே கிடையாது. என் தந்தையின் பெயரைக் கேட் டால் பெரிய பெரிய இன்ஜினீயர்கள் கூட மரியாதையாக நடந்து கொள்வார்கள். இப்படியாக என் தந்தையின் புகழ் வளர்ந்து வந்ததைக் கண்டு ஒரு பிரபல கண்டிராக் டர்,- பெரிய பெரிய கட்டிடங்கள், பாலங்கள், இன்னும் பல மாதிரி வேலைகளையும் கட்டித் தருவதாக முன் கூட்டியே குத்தகை எடுத்துக் கொள்ளும் தொழில் அதிபர் ஒருவர் மாதம் முந்நூறு ரூபாய் சம்பளத்துக்குத் தன் கண்டிராக்டு வேலைகளைக் கவனிக்கும் தலைமைக் கொத்த னாராக அமர்த்திக் கொண்டார்.

"அப்பா அந்த முதலாளியிடம் ஆறே ஆறு மாதங்கள் தான் வேலை செய்தார். அதற்குள் கண்டிராக்ட் எடுக்கும் தொழில் நுணுக்கங்களைக் கற்றுக்கொண்டார். தானே தன்னந் தனியாகக் கண்டிராக்ட் எடுக்க ஆரம்பித்தார். அப்பாவே கொத்தனாராகவும் கண்டிராக்டராகவும் இருந்ததால் ஏராளமாகப் பணம் சேர்த்தார். அந்த அனு பவத்தை அப்பா அடிக்கடி சொல்லுவார்கள். 'முதல் இல்லாமல் பணம் சம்பாதிக்கும் தொழில் கட்டிடம் கட்டும் இன்ஜினீயர் தொழில்; பாதிக்குப் பாதி கொள்ளை லாபம் வரும் தொழில் கண்டிராக்டர் தொழில்' என்று.

"அப்பா சொன்னதும் உண்மைதான். இரண்டு மூன்று வருஷங்களுக்குள்ளாகவே ஏராளமாகப் பணம் சேர்த்தார். யார் யாரை மோசம் செய்து பணம் சேர்த்தாரோ ஒரு நாள் விதி அவருக்குச் சதி செய்து விட்டது. சேறும் சுண்ணும்பும் கலந்த சுவராக எமன் வந்தான். அப்பா தாமே கட்டிய சுவரின் இடிபாடுகளுக்கு இடையில் கிடந்தார். 'வேலம்மா!' என்று ஆசையோடு என்னை அழைக்கும் அப்பா சவமாகக் கிடந்தார். எத்தனையோ காலம் சுகமாக வாழப்போவதாக எண்ணி யார் யாரையோ ஏமாற்றிப் பணம் சேர்த்த என் தந்தை யாருமே எதிர் பாராதபோது இறந்து விட்டார்.

"என் தாயாரும் நானும் என் தகப்பனர் எங்களுக்காக கட்டியிருந்த வீட்டின் இரும்பு போன்ற உறுதியான சுவரில் முட்டிக் கொண்டோம். மோதிக் கொண்டோம். எங்கள் தலைதான் வலித்தது. எங்கேயாவது மாண்டவர் பிழைப்பதுண்டா? இருந்தாலும் அழாமல் இருக்க முடிகிறதா? அழுதுதானே ஆத்திரத்தைத் தணித்துக்கொள்ள வேண்டி யிருக்கிறது? அழுதோம். வாய் விட்டு அழுதோம். தொண்டை வலிக்க அழுதோம். கண்ணில் நீர் வற்றும் வரை அழுதோம். எங்களைப் பார்த்து விதியும் அழுதது!

"அப்பா இறந்தவுடன் யார் யாரோ வந்து 'எனக்குப் பணம் தரவேணும்' 'எனக்குப் பணம் தரவேணும்' என்று ஆயிரம் ஆயிரமாக வாங்கிக்கொண்டு போனர்கள். அப்பாவும் போய் அவர் சேர்த்த பணத்திலும் பெரும்பகுதி போனவுடன் அம்மாவின் உடம்புக்கு நோய் வந்துவிட்டது. டாக்டர்கள் க்ஷயரோகம் என்றார்கள். வியாதியிலேயே மிகக் கொடிய வியாதி, பணத்தையும் உயிரையும் ஒரேயடியாகச் சாப்பிடும் பயங்கர வியாதிக்கு என் அம்மா ஆளாகி விட்டாள். பணம் தண்ணீராகச் செல

வழிக்கப்பட்டது. ஊரில் உள்ள கோயிலுக்கெல்லாம் அபிஷேகங்கள் ஆராதனைகள் நடந்தன. இதற்குள் எங்கள் சொத்தில் இன்னும் கொஞ்சம் கரைந்து விட்டது. என் தாயாரின் எழில் நிறைந்த பொன் உடல்; அழகு நிறைந்த அன்பு உருவம் கரைந்து கொண்டே வந்தது.

"இந்தச் சமயத்தில் என் தாயாரின் தூரத்து உறவினர் என்று சொல்லிக் கொண்டு ஒரு வாலிபர் வந்து சேர்ந்தார். ஆண் துணையில்லாத எங்களுக்கு அவர் வந்தது பெரிய துணையாகத்தான் இருந்தது. துணையாக வந்தவர் எனக்குத் துன்பம் கொடுப்பார் என்று நான் அப்பொழுது நினைக்க வில்லை. எப்படியோ என் தாயாரின் அன்பைப் பெற்று விட்டார். நோயாளிக்கு இரவு பகலாகத் தொண்டு செய் தால் எந்த நோயாளியின் மனம்தான் இரங்காது? என் தாயார் அந்த வாலிபருடைய வார்த்தைகளுக்குக் கட்டுப் பட்டதில் ஒன்றுமே ஆச்சரியமில்லை. என் தாயார் நீண்ட நாளைக்கு இருக்க மாட்டார் என்று டாக்டர்கள் கூறிய வுடன் அந்த வாலிபருக்கு என்மீதும் என் சொத்தின் மீதும் ஒரு கண் விழுந்து விட்டது. இந்த விஷயத்தில் அவர் மூளை வேகமாகவே வேலை செய்தது. யாரோ ஒரு வக்கீலைப் பிடித்தார். சொத்தையெல்லாம் தன் பெயருக்கு மாற்றி ஒரு உயில் எழுதினார். அதில் என் தாயாரிடம் கையெழுத்தைப் பெற முயன்றார். என் தாயார் அதில் இன் னும் இரண்டு வரிகளைச் சேர்க்கச் சொல்லிக் கையெழுத் துப் போட்டுக் கொடுத்தார். அதற்குப் பிறகு என்னைப் பத்து மாதம் சுமந்து பெற்ற என் அருமைத் தாயார் அதிக நாள் உயிரோடு இல்லை. ஒரு நாள் அதிகாலையில் அமைதி யாகவே என் அம்மாவின் ஆவி பிரிந்து விட்டது.

"நான் தாய் தந்தையற்ற அனாதையாகி விட்டேன். நான்தான் பெண் ஆயிற்றே! இந்த உலகில் தன்னந்தனியாக எப்படி வாழ முடியும்? அத்துடன் எனக்கு உற்றார்

உறவினர் எல்லாமாக அந்த வாலிபர் ஒருவர்தான் இருந்தார். ஆகவே அந்த வாலிபருடைய பாதுகாப்பில் கட்டாயமாக இருக்கவேண்டிய அவசியமும் எனக்கு ஏற்பட்டு விட்டது. எங்கள் சொத்துக்களை ஏமாற்றி எடுத்துக் கொண்டதுடன் என்னையும் மணந்து கொள்ளப் பெருமுயற்சிசெய்து வருகிறார். என் மனத்தில் அவரைப்பற்றி நல்ல அபிப்பிராயம் ஏற்படுவதற்காக என் இஷ்டப்படி யெல்லாம் விட்டு விடுகிறார். நான் எங்கு சென்றாலும் எங்கு போனாலும் எத்தனை நாழி கழித்து வீட்டுக்குத் திரும்பினாலும் என்னை ஏன் என்று கேட்பதில்லை. அதற்கு நேர்மாறாகப் பிரமாதமாக உபசாரம் செய்வார். எப்படியாவது நான் மனம் மாறி அவரைக் கல்யாணம் செய்து கொள்ளச் சம்மதித்தால் போதும் என்பதுதான் அவர் எண்ணம்.

"இன்னொரு காரணமும் இருந்தது! அதாவது என் தயார் தன் உயிலில் சேர்த்த 'என் மகள் யாரைக் கல்யாணம் செய்து கொள்ள விரும்புகிறாளோ, அவருக்கு என் மகளை மணம் முடித்து வைத்து இந்தச் சொத்தில் பாதியை அவளுக்குக் கொடுத்து விட வேண்டும்' என்ற இரண்டு வரிகள்தான். அதனாலேயே அவர் என்மீது பிரியம் காட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது. என்னைக் கல்யாணம் செய்து கொள்வதின் மூலம் சொத்து முழுவதையும் தாமே அனுபவிக்கலாம் என்ற ஆசையால் தான் என் மனத்தை மாற்றப் பெருமுயற்சி செய்து வருகிறார், பண வெறி பிடித்த அந்த வாலிபர்" என்று சொல்லி நிறுத்தினாள் வேலம்மாள். வேலனை நிமிர்ந்து பார்த்தாள்.

**வே**லம்மாளின் வார்த்தைகளில் என்ன மந்திரசக்தி யிருந்ததோ தெரியவில்லை. கொத்தனாரின் செல்வ மகள் வேலம்மாள் சின்னஞ் சிறு பெண்ணாகக் குதித்துக் குதித்து விளையாடியதும், அவள் துள்ளிக் குதித்துக் கொண்டு பள்ளிக்கூடம் போனதும், பள்ளிக்கூடத்தில் பலப்பல

பெண்களுடன் ஆடிப் பாடி விளையாடியதும், அவர் தகப்பனார் கட்டிய அழகழகான கட்டிடங்களும், பாதிக்குப் பாதி லாபம் பெறுவதற்காக அவர் தம் வேலையில் மோசம் செய்ததும், அது காரணமாக அவர் கட்டிய சுவரே அவர் தலையில் இடிந்து விழுந்து மாண்டதும், அதே ஏக்கமாக அவள் தாயார் மாண்டதும், இப்பொழுது விலங்கின் மத்தியில் அகப்பட்ட மான் போல வேலம்மாள் தவித்துக் கொண்டிருப்பதும் திரைப்படம் போலச் சுருள் சுருளாக விரிந்து வேலன் மனக்கண் முன்னே காட்சி அளித்தது. அந்தச் சோகமான காட்சிகளைக் கண்டான். கண்டு மனம் துடித்தான்.

வேலம்மாள் மேலே கதையை ஆரம்பித்தாள்:

“என்னை மணந்து கொள்ள முயற்சிக்கிறாரே அந்த வாலிபருக்குப் படிப்பு கிடையாது; உயர்ந்த பண்பு கிடையாது; மிகக் கீழான எண்ணம் படைத்த சாதாரணமான வாலிபர். என் பணம் ஒன்றுக்காகவேதான் என்னை மணந்து கொள்ள ஆசைப்படுகிறார். உண்மையில் என் மீது அவருக்கு ஒரு சிறிதும் அன்பு கிடையாது. இந்த மாதிரி சூழ்நிலையில் நான் அமைதியின்றி இருந்து கொண்டிருந்தேன். திடீரென்று தண்ணீரில் இருந்த மீனைத் தரையில் தூக்கிப் போட்டது போல துடி துடித்தேன். இந்தச் சமயத்தில்தான் அந்த வாலிபர் என்னை மணந்து கொள்ளுவதற்குப் பயங்கரச் சதி செய்து கொண்டிருந்தார். அவர் தன் நண்பரிடம் சொல்லிக் கொண்டிருந்ததை என் காதாலேயே கேட்டேன். பலவந்தமாக மணம் புரிந்து கொண்டு, உடனே சொத்து முழுவதையும் தன் பெயருக்கு மாற்றிக் கொண்டு என்னைப் பழி வாங்கப் போவதாக அந்த நய வஞ்சக வாலிபர் சொல்லிக் கொண்டிருந்தார்.

“இதைக் கேட்டதும் ஒரு கணம் என் தலை சுழன்றது. பூமியே கிடு கிடென்று ஆடுவது போலத் தோன்றியது.

தாயையும் தந்தையும் இழந்து கொஞ்ச நஞ்சம் இருந்த சொத்தையும் இழந்து கடைசியில் அன்பற்ற ஒரு ஆண் மகனிடமா காலம் எல்லாம் கஷ்டப்பட வேண்டும் என்று நினைத்தேன். பலப்பல யோசனைகளைச் செய்தேன். கடைசியில் அந்தச் சொத்தை அவரைரே கட்டியாளட்டும் என்று தீர்மானம் செய்தேன். துன்ப மயமான என் வாழ்வுக்கு ஒரு முடிவு கட்டத் தீர்மானித்தேன். என் தாயும் தந்தையும் சென்ற இடத்துக்கே செல்லுவது என்று முடிவு செய்தேன். அவ்வளவுதான். அடுத்த கணம் கடற்கரையை நோக்கி வந்தேன். கடலில் விழுந்தேன். கடல் நீரில் என் கஷ்ட மெல்லாம் கரைந்து விட்டது. உப்பு நீரில் என் உள்ளம் சுத்தமடைந்து விட்டது. அலைகளின் அமுக்கத்தில் தத்தளித்ததால் எனக்கு தைரியம் பிறந்து விட்டது. உங்கள் உதவியால் உயிர் பெற்றேன். உயிர் மட்டுமா பெற்றேன். புது வாழ்வையே பெற்றுவிட்டேன்'' என்று தன் சோகக் கதையைச் சொல்லி முடித்தாள் வேலம்மாள். அவள் அழகிய கண்கள் ஒளிவிட்டு மின்னின. அவள் முகத்தில் ஏதோ பெரிய கவலை நீங்கியது போன்ற ஒரு தெளிவு நிரம்பி யிருந்தது.

அவர்களுக்கு எதிரில் இருந்த மரத்துக்கு மேலே வந்திருந்த நிலவு, தன் வெண் நிறக் கதிர்களை கடலில் பொழிந்து கொண்டிருந்தது. வான மண்டலத்தின் நீல விதானத்தில் இங்கிதம் தெரிந்த நிலவு மெதுவாக மிதந்து சென்று கொண்டிருந்தது. ஆங்காங்கு சிதறிக் கிடந்த நட்சத்திரங்கள் இக் காதலர்களைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டி மின்னின.

வேலன் அந் நிலவைப் பார்த்தான். கண்ணைச் சிமிட்டும் நட்சத்திரங்களைப் பார்த்தான். வேலம்மாளின் அழகிய முகத்தைப் பார்த்தான். அதில் மின்னும் விழிகளைப் பார்த்தான். தன் வாழ்க்கையை அவளிடம்

உள்ளது உள்ளபடி சொன்னான். தான் ஒரு அனாதை என்பதை அவளுக்குப் புரியும்படி சொன்னான். மூன்று ரூபாய் தினக் கூலிக்குக் காந்தி இரும்புத் தொழிற்சாலையில் வேலை செய்யும் கூலி ஆள் என்பதை எடுத்துச் சொன்னான். வானமே கூரையாக பூமியே வீடாக வாழ்ந்து வந்த தன் வரலாற்றைச் சொன்னான். இப்பொழுது ஒரு தொழிலாளியின் உதவியால் ஒரு சிறு அறையில் வாழும் பரிதாப நிலைமையைச் சொன்னான். " 'வெளுத்த தெல்லாம் பால் இல்லை' உன்னைக் கடலிலிருந்து காப்பாற்றியதாலேயே நான் கருணையுள்ளவன் ஆகமாட்டேன். எல்லாவற்றையும் தீவிரமாக யோசித்து ஒரு முடிவு செய்ய வேண்டும். அவசரப் படக்கூடாது! காலம் எல்லாம் கஷ்டப்படும்படியான ஒரு முடிவை அவசரத்தில் செய்துவிடக் கூடாது" என்றான் வேலன்.

"அவசரமேவேண்டாம். ஆர அமர யோசித்தே முடிவு செய்யுங்கள். நான் கல்யாணம் செய்து கொண்டால் உங்களையே கல்யாணம் செய்து கொள்ளுவது என்று முடிவு செய்துவிட்டேன். உங்கள் வாழ்க்கைக் கதையைக் கேட்ட பிறகு நீங்கள்தான் எனக்குத் தகுந்த கணவர் என்று தீர்மானித்து விட்டேன். நீங்கள்தான் நன்றாக யோசித்து ஒரு முடிவு செய்ய வேண்டும்" என்றாள் வேலம்மாள். அவள் குரலில் ஒரு அழுத்தம் இருந்தது. அவள் முகத்தில் ஒரு தீரம் இருந்தது.

"இதற்கு அந்த வாலிபரின் சம்மதம் வேண்டாமா? அவர் ஏதேனும்......?" என்று மேலே சொல்ல முடியாமல் திணறினான் வேலன். அவன் குரலில் ஒரு படபடப்பு இருந்தது!

"அவர் என்ன சொல்லுவது? நாளைக்கே அந்தச் சொத்து பூராவையும் அவருக்கே எழுதிக் கொடுத்துவிடுகிறேன். நானும் உங்களைப்போல் ஏழையாகி விடுகிறேன்.

அப்போது அவர் என்னை விரும்பவும் மாட்டார். பலவந்தம் செய்யவும் மாட்டார்'' என்ருள் வேலம்மாள்.

''எனக்காக செல்வத்தை, வாழ்வின் ஒளியை இழந்து விடவா போகிருய்?'' என்ருன் வேலன்.

''ஆமாம்! என்னை உயிரோடு வாட்டி வதைத்துக் கொன்று வரும் அந்தச் செல்வத்தை இழந்து விட்டு, என் உள்ளத்துக்கும், உயிருக்கும் காப்பளித்த உண்மையான செல்வத்தைப் பெறப் போகிறேன். இரவுக்கு ஆயிரம் கண்கள் இருக்கின்றன. வானத்தைப் பார்ப்பதற்கு அழ காகத்தான் இருக்கிறது. பகலுக்கோ ஒரே கண்தான். இருந்தாலும் சூரியன் மறைந்து விட்டால் உலகம் ஒளியை இழந்து விடுகிறதே!'' என்ருள்.

''இருக்கலாம். இருந்தாலும் அறிவைக் கொஞ்சம் நன்ருக உபயோகப்படுத்தி வாழ்வில் ஒளி பெற முயல வேண்டும்'' என்ருன் வேலன்.

''உபயோகிக்க வேண்டியதுதான். உபயோகித்துத் தான் முடிந்த முடிவாகச் சொல்லுகிறேன். அறிவுக்கு ஆயிரம் ஆயிரம் கண்கள் இருக்கலாம். ஆனல் இதயத் துக்கு ஒரே கண்தான். அதுதான் அன்பு. அந்த அன்பு மறைந்து விட்டால் வாழ்வில் ஒளி இருக்காதே!'' என்ருள்.

இதைக் கேட்டதும் வேலன் திணறிப் போய் வீட் டான். வேலம்மாளின் தெளிவான அறிவை எண்ணி வியந்தான். தன்னையும் மீறி, ''வேலம்மாள்!'' என்று அழைத்தான். அவன் கண்களில் நீர் நிறைந்து விட் டது. அது ஆனந்தக் கண்ணீரோ? அது வேலனுக்கே தெரியாதே!

''நான் இருக்கிறேன். நீங்கள் தினம் எட்டணு சம் பாதித்தால் கூட அதற்குத் தகுந்தாற் போல் சந்தோஷ

மாக என்னுல் வாழ்க்கையை நடத்த முடியும். அதற்குத் தாங்கள்தான் வாழ்ந்தே காட்டி யிருக்கிறீர்களே! நான் உங்களுக்கு ஒரு போதும் சுமையாக இருக்க மாட்டேன்'' என்ருள் வேலம்மாள். அவள் குரலில் அன்பும் பண்பும் கலந்து இருந்தன. வேலன் செயலற்று உட்கார்ந்திருந் தான். அவன் சிந்தனை சுழன்றது.

சட்டென்று அவளை நிமிர்ந்துபார்த்தான். அன்றலர்ந்த மலர்ந்த மலரைப்போல அவள் முகத்தில் அழகு பிரகாசித் துக் கொண்டிருந்தது. மந்திரவாதியைப் போல் நிலைத்த கண் நிலைத்தபடி மயங்கச் செய்யும்அவள் நீண்ட கருவிழி களும், கண்டவுடன் காதல் பிறக்கும் சிவந்த கன்னங் களும், துடி துடிக்கும் உதிராத அவள் இதழ்களும் அவள் அழகை எடுத்துக் காட்டி வேலனை மேலும் மேலும் திணற அடித்துக் கொண்டிருந்தன.

அத்தகைய அழகைக் கண்டு வேலன் சும்மா யிருக்க முயன்ருலும் அவன் கண்கள் சும்மா இருக்குமா? அவைகள் அவனுக்கு தெரியாமல் அந்த அழகியின் அழகை மனம் குளிரப் பருகி மகிழ்ந்து கொண்டிருந்தன.

வேலம்மாள் எழுந்தாள். "நான் போய் வருகிறேன். நாளைக்கு மாலை காந்தித் தொழிற்சாலையில் உங்களைச் சந்திக்கிறேன்'' என்ருள். அவள் குரலில் உறுதியான ஒரு முடிவு தெரிந்தது.

"வேண்டாம்! வேண்டாம்! கடற்கரையிலே சந்திக் கலாம்! நான் கடற்கரைக்கே வந்து விடுகிறேன்'' என் ருன். அவனுக்கு ஏனே இன்னும் தைரியம் ஏற்படவில்லை.

வேலம்மாள் "ஆகட்டும்'' என்ருள். விடைபெற்றுக் கொண்டாள். வேலன் சென்று விட்டான்.

அவர்கள் பிரிந்து சென்ற போது நிலா வானத்தில் மிகவும் உயரத்துக்கு வந்து விட்டது. இரவின் மோகனம்

அதிகரித்துக் கொண்டிருந்தது. அவர்கள் சென்றவுடன் எல்லையற்றுப் பரந்து விரிந்து கிடக்கும் அமைதியான கடலும், பால் போன்ற இன்ப நிலவும், மின்னும் நட்சத்திரங்கள் நிறைந்த நீலவானமும்தான் மிஞ்சி இருந்தன!

* * *

**வே**லன் அவன் வாழ்நாளிலேயே இல்லாத உற்சாகத்துடன் படுக்கையைவிட்டு எழுந்தான். அவன் சகத் தொழிலாளியிடம் என்ன என்னவோ பேசினுன். ஏதேதோ கேள்விகள் கேட்டான். ஒரு குடும்பம் நடத்துவதற்கு மாதம் எத்தனை ரூபாய் வேண்டும் என்று ஆவலோடு கேட்டான். என்னைத் தொழிற்சாலையில் மாதச் சம்பளத்துக்கு எடுத்துக்கொள்ள மாட்டார்களா? என்று ஏக்கத்துடன் விசாரித்தான்.

திடீரென்று அவனுக்கு வேலம்மாளின் நினைவு வந்து விட்டது. அவள் கருங் கூந்தலை அலங்கரித்த ரோஜா மலர்கள் நினைவுக்கு வந்தன. அவன் உள்ளம் கனவு காண ஆரம்பித்து விட்டது. வேலம்மாள் அழகிய ரோஜா மலராக இருந்தால், நான் பள பளக்கும் பனித் துளியாக மாறி அந்த சிவந்த மலருக்குள் விழுவேன். அவள் அழகைப் பருகுவேன். அவள் என்னைப் பார்த்துப் புன்னகை பூப்பாள் என்று நினைத்தான். பைத்தியம் போல் தானே சிரித்துக் கொண்டான். மேலே அண்ணுந்து பார்த்தான். சுவரில் நெற்கதிர்கள் கொத்தாகக் கட்டி யிருந்தன.

அடாடா! என் வேலம்மாள் பொன்னிறமுள்ள நெற்கதிரானுல் நான் சின்னஞ் சிறு ப்ச்சைக் கிளியாகி அதைக் கடித்துக்கொண்டு ஆகாயத்தில் பறப்பேன். அவள்; என் காதலி; வேலம்மாள்; முத்துப் போன்ற தன் பற்கள் முப்பத்திரண்டையும் காட்டிச் சிரிப்பாள் என்று நினைத்தான். கலகல வென்று வாய்விட்டுச் சிரித்து விட்டான்.

சிரிப்புச் சத்தத்தைக் கேட்ட அவன் சகத் தொழிலாளி "என்னவேலா? உனக்கு எப்பொழுது பார்த்தாலும் சிரிப்புத்தானு! உனக்கென்ன குடும்பமா? பொறுப்பா! ஒண்டிக் கட்டைதானே சிரிக்கத்தான் செய்வாய்" என்ருன்.

"குடும்பம் நடத்துவதா கஷ்டம் என்கிருய்? அது அளவில்லாத இன்பம் தரும் வாழ்க்கையாயிற்றே? அந்த இன்பத்தை நான் அடைவதற்கு முன்பே, ஏ! பகவானே! என்னை நீ அழைத்துக்கொண்டு விடாதே! பூமியே! நீ என்னைத் தாங்கிக்கொண்டிரு. பிறகு எது வந்தாலும் வரட்டும், நான் வாழ வேண்டியவன், சந்தோஷமாக வாழ வேண்டியவன்" என்ருன் வேலன்.

"உனக்கு அதை அனுபவித்தால்தான் தெரியும்? புறப்படு வேலைக்குப் போகலாம்" என்ருன் அந்தத் தொழிலாளி.

"போக வேண்டியதுதான். வயிற்றுப் பிழைப்புக்குப் பிறகுதானே எல்லாம்" என்று சொல்லிக்கொண்டு வேலன் புறப்பட்டான்.

**தொ**ழிற்சாலைக்குச் சென்ருன். அவனுடைய உற்சாகமான முகத்தைப் பார்த்தவுடன் தொழிலாளர்களுக்கு எல்லாம் உற்சாகம் உண்டாயிற்று. அவர்களும் வேலனைப் போலவே வேலை செய்ய முயன்று கொண்டிருந்தார்கள்.

வேலனை வேலைக்கு அமர்த்திய அந்த வாலிபனும் அதே தொழிற்சாலையில் மாதச் சம்பளத்தில் அமர்ந்து விட்டான். அவனுக்குச் சிபாரிசும் செல்வாக்கும் இருந்ததால் மாதம் இருநூற்றைம்பது ரூபாய் சம்பளத்தில் அந்தத் தொழிற்சாலையின் ஒரு சிறிய பகுதியின் மேஸ்திரியாகவே அமர்ந்து விட்டான். அவன் வேலனின் திறமையைப் பார்த்துத் திகைத்துப் போய்விட்டான். தான்

ஏதோ ஒரு நல்ல காரியத்தைச் செய்து விட்டதாகச் சந்தோஷப்பட்டான்.

"அடாடா! வேலனுக்கு இருக்கும் தொழில் நுணுக்க அறிவு நம் இன்ஜினீயர்களுக்குக் கூட கிடையாது. அவன் தன் திறமையைத் தினம் மூன்று ரூபாய்க்கு விற்று வருகிறான். ஆனால் அதே சமயத்தில் முப்பது ரூபாய் பெருமானமுள்ள சாமான்களை உற்பத்திச் செய்கிறான். அப்படிச் செய்வதால் அவன் அந்தஸ்து உயரவா போகிறது. அவன் வெறும் வேலைக்காரனாகவும் கூலிக்காரனாகவும்தான் இருக்கப் போகிறான். அடாடா! வேலனிடம் மட்டும் பணம் இருந்தால்! உம், பணம் இருந்தால்தான் வேலைத் திறமையே வேண்டாமே! அது இல்லாமலே அவன் எஜமானனாக இருக்கலாமே! அப்பட்டித்தானே இன்றுவரையில் இந்தப் பாழாய்போன உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது!" என்று எண்ணினான்.

அடிக்கடி வேலனை வந்து பார்த்து அவனுக்கு ஊக்கமளித்து வந்தான். வேலனும் அவனைக் கடவுளாகவே நினைத்து வந்தான். அவனுக்கு எப்படி நன்றி தெரிவிப்பது என்று தெரியாமல் தவித்தான். "நான் உங்களை ஒரு நாளும் மறக்கவே மாட்டேன்" என்று நன்றி கலந்த உணர்ச்சியுடன் தடுமாறும் குரலில் கூறினான்.

"நீங்கள் சௌகர்யமாக இருந்தால் அதுவே எனக்குச் சந்தோஷம். உங்களைப் போன்ற திறமையான தொழிலாளர்களால்தான் தொழில்கள் மேன்மையடைய முடியும். இதையெல்லாம் முதலாளிகள் என்றுதான் உணர்வார்களோ தெரியவில்லை" என்றான் அந்த வாலிபன்.

"முதலாளிகள் உணர வேண்டாம், ஸார்! உங்களைப் போன்ற தொழில் தெரிந்த தொழிலாளர்கள் தெரிந்து கொண்டாலே போதும். நீங்கள் பாராட்டுவதில்தான் உண்மை இருக்கிறது. அதில்தான் ஊக்கமும் பிறக்கும்"

"உண்மை இருக்கட்டும், ஸார்! உண்மை மட்டும் சாப்பாடு போடுமா? உங்கள் வாழ்க்கைத்தரம் உயர நீங்கள் அதிகச் சம்பளம் வாங்குவதற்கு முதலாளிகள் உங்கள் திறமையைப் பார்த்துப் பாராட்ட வேண்டாமா?"

"உண்மையும், உழைப்பும் ஒரு நாளைக்கு வெற்றி பெற்றே தீரும். அதில் எனக்கு நல்ல நம்பிக்கை இருக்கிறது! என் தாத்தா நான் கடைப்பிடிப்பதற்காக எனக்குக் கற்பித்து விட்டுப்போன பாடம் இதுதான்" என்றான் வேலன்.

வேலனின் உண்மையான உள்ளத்தைப் பார்த்து அந்த வாலிபன் ஆச்சரியப்பட்டுப் போனான். அவனை யறியாமல் அவன் வேலனுக்கு மரியாதை செய்ய ஆரம்பித்து விட்டான்.

இவ்வளவு தூரம் பாராட்டுகிற இடத்தில் சில புல்லுருவிகள் இல்லாமலும் இல்லை. அவர்கள் வேலனைப் பற்றிக் கயிறு திரிக்க ஆரம்பித்து விட்டார்கள். அவன் நேர்மையைப் பற்றிக் குறைவாகப் பேசினார்கள். அவன் தொழில் திறமையைக் கலாட்டா செய்தார்கள். அவனைப் பற்றி அவதூறுகள் கிளப்பி விட்டார்கள். தலைமை மேஸ்திரிக்கு அவனைக் கண்டால் பிடிக்காமல் இருப்பதற்கு வேண்டிய பலப்பல வழிவகைகளைச் செய்து அதை வளர்த்து வந்தார்கள்.

தொழிலாளர்கள் உயராமல் இருப்பதற்கு இதுதான் காரணம். தங்கள் தொழிலை மறந்து பிறரைப் பார்த்துப் பொறாமைப்படுவதிலும் அவனுக்கு அழிவு தேடுவதிலும் தன் காலத்தைக் கழித்துத் தாங்களும் வாழாமல் பிறரையும் வாழ முடியாமல் செய்து வருகிறார்கள்.

வேலன் இதையெல்லாம் ஒன்றையும் கவனிக்காமல் வேலையைக் கவனித்து வந்தான். உற்சாகத்துடனும்,

ஊக்கத்துடனும் உழைத்து வந்தான். அவன் வேலைத் திறமை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தது.

*　　　*　　　*

**நா**ட்கள், வாரங்கள், மாதங்கள் என்று மூன்று மாதங்கள் ஓடி விட்டன. வேலனும் வேலம்மாளும் தினம் தவருமல் கடற்கரையில், பூந்தோட்டத்தில் சந்தித்தார்கள்.

ஒரு நாள் சில வேலை தொந்தரவால் வேலனுக்குக் குறித்த நேரத்தில் வர முடியாமல் போய்விட்டது. வேலம்மாள் தாங்கள் மனம் விட்டுப் பேசிக்கொண்ட பழைய தோட்டத்துக்குச் சென்ருள். மலர் குலுங்கும் புஷ்பங்கள் நிறைந்த பூஞ்செடிகள் அவளைப் பார்த்துத் தங்கள் இதழ்களை விரித்து வரவேற்றன. சின்ன சின்னப் பறவைகள் தங்கள் காதலனோடு சேர்ந்து உட்கார்ந்து பாடிக் கொண்டிருந்தன. இதை யெல்லாம் பார்த்தாள். நானோ கவலையோடு இருக்கிறேன். இந்த மலர்கள் எல்லாம் அழகழகாக மலர்ந்திருக்கின்றன. என் காதலனைக் காணுது நான் தனித்திருக்கிறேன். இந்தச் சின்னக் குருவிகளோ தன் காதலனோடு பாடிக் கொண்டிருக்கிறது என்று நினைத்தாள். ஒன்றை ஒன்று தழுவிக் கொண்டிருந்த மரக்கிளைகளைப் பார்த்தாள். சிந்தையில் கவலை நீங்கி இன்புற்ருள். அந்த மலர்ச் செடிகளில் குனிந்து ஒரு மலர்ந்த மலரைப் பறித்தாள்.

அவள் கையிலிருந்த மலரைச் சட்டென்று பறித்தான் வேலன். கலகல வென்று சிரித்தான். வேலம்மாளும் சிரித்தாள். மலர்கள் சிரித்தன. மரங்கள் சிரித்தன. குருவிகளும் குக்கூ வென்று சிரித்தன.

"ஏன் இத்தனை நேரம்?" என்ருள்.

"நாழியாகி விட்டது" என்ருன்.

"அதுதான் சொல்லாமலே தெரிகிறதே!" என்று மீண்டும் சிரித்தாள்.

இப்படியாக அவர்கள் காதல் கடற்கரையிலும், மலர் வனத்திலும் மாறி மாறி வளர்ந்தது.

இப்பொழுது அவர்களே அறியாமலே அவர்கள் ஒருவரை ஒருவர் அதிகமாக நேசிக்க ஆரம்பித்து விட்டனர். வேலம்மாளும் தன் சொத்தை யெல்லாம் தனக்குப் பாதுகாப்பாக இருந்து வந்த அந்த வாலிபனுக்கே மாற்றிக் கொடுத்துவிட்டு வேலனை மணந்து கொள்ள அந்த வாலிபனின் சம்மதத்தையும் பெற்று விட்டாள். வேலனும் அந்த வாலிபனிடம் சென்றான். வேலம்மாளைத் தான் மணந்து கொள்ளப் போவதாகவும் அதற்கு ஆதரவு தரவேணும் என்றும், கேட்டுக் கொண்டான்.

வேலம்மாளின் தியாகம்; சொத்து அத்தனையும் அந்த வாலிபனுக்கே அளித்த தியாகம்தான்— அந்த வாலிபனின் மனத்தையே மாற்றி விட்டது. அவன் வேலம்மாளின் மாசு மறுவற்ற காதலை எண்ணி வியந்தான். அவள் கல்யாணத்தைக் கோலாகலமாக நடத்துவதாகச் சொன்னான்.

"வேண்டாம்? எங்கள் கல்யாணம் கோலாகலமாக நடக்க வேண்டாம். நாங்கள் ஒருவரை ஒருவர் காதலித்து மணம் செய்து கொள்ளப் போகிறோம். இந்தத் திருமணத்துக்கு நீங்கள் சம்மதம் கொடுத்ததே போதும்." என்று சொன்னாள் வேலம்மாள்.

"கல்யாணத்துக்காகப் பணம் செலவழிப்பதும் பிறர் மெச்ச வேண்டும் என்று ஆடம்பரத்துக்காக ஆர்பாட்டங்கள் நடத்துவதும் எனக்குக் கொஞ்சமும் பிடிக்காது. கடவுள் சன்னதியில் நாங்கள் இருவரும் எங்கள் வாழ்க்கை ஒப்பந்தத்துக்குப் பிரமாணம் எடுத்துக் கொள்கிறோம். அதுவே போதும்" என்றான் வேலன்.

"நாலுபேர் முன்னிலையில் கல்யாணம் செய்து கொண்டால்தானே உங்களைக் கணவன் மனைவி என்று நம்புவார்கள்? இல்லாவிட்டால்........." என்று இழுத்தான் அந்த வாலிபன்.

"நாங்களோ அநாதைகள். எங்களுக்கு யாருமில்லை. எங்களைப் பார்த்து நாலுபேர் என்ன சொல்லப் போகிறார்கள்? அப்படியே சொன்னால்தான் சொல்லிவிட்டுப்போகட்டுமே! அதனால் நாங்கள் கணவனும் மனைவியும் இல்லாமல் போய் விடுவோமா? இதெல்லாம் நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளும் அர்த்தமற்ற பேச்சுக்கள்" என்றான் வேலன்.

"அடுத்த புதன்கிழமை முருகன் சன்னிதியில் எங்கள் திருமணத்தை நாங்களே நடத்திக் கொள்ளப் போகிறோம். அதற்குத் தாங்கள் வந்து ஆசீர்வதித்தால் அதுவே போதும். ஊரே வந்ததுபோல் சந்தோஷப்படுவோம், கோலாகலமாகத் திருமணம் நடந்ததுபோல் திருப்தி அடைவோம்" என்றாள் வேலம்மாள்.

"ஆகட்டும்" என்றான் அந்த வாலிபன்.

புதன்கிழமை வந்தது.

வேலனும் வேலம்மாளும் புது ஆடைகள் அணிந்து கொண்டு முருகக் கடவுளின் சன்னிதியில் தங்கள் வாழ்க்கை ஒப்பந்தத்துக்குப் பிரமாணம் எடுத்துக் கொண்டார்கள். அம்மி மிதிக்காமல், அருந்ததியைப் பார்க்காமல், அக்கினியை வலம் வராமல், ஊரைக் கூட்டாமல், மேளம் கொட்டாமல், வீண் செலவு செய்யாமல் ஆண்டவனின் புனிதமான சன்னிதியில் அவர்கள் இருவரும் கணவனும் மனைவியும் ஆயினர்.

அகமும் முகமும் மலர அவர்கள் முருகப் பெருமானின் கோயிலை வலம் வந்தார்கள். தங்களை வாழ்விக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டு வணங்கினார்கள். இந்தத்

திருமணத்துக்கு எந்த விதமான இடையூறும் செய்யாமல் நடத்தி வைத்த அந்த வாலிபனைக் கையெடுத்துக் கும்பிட்டனர்.

அந்த வாலிபனும் பதிலுக்கு வணங்கினன். "நீங்கள் இருவரும் இன்று போலவே என்றும் வாழ வேண்டும்" என்று வாழ்த்தினன். அவர்களிடமிருந்து விடைபெற்றுக் கொண்டான்.

அந்த வாலிபன் சென்ற பிறகு வேலனும் வேலம்மாளும் கைகோத்தபடி கடவுளுக்கு எதிரில் நின்றனர். "எங்கள் உயிர் உள்ள வரையில் நாங்கள் இருவரும் வாழ்விலும் தாழ்விலும் இணை பிரியாமல் இருக்க எங்களுக்குக் கருணை புரிய வேணும்" என்று வேண்டிக் கொண்டனர். எங்கிருந்தோ நாதஸ்வரத்தின் இனிய கானம் காற்றிலே மிதந்து வந்தது. காதலர்கள் இருவரும் அது தங்கள் திருமணத்துக்காகவே வாசிப்பதாக எண்ணி மகிழ்ந்தனர்.

அவர்கள் இதயத்தில் இன்பம் ஊற்றுகப் பெருக்கெடுத்தது. ஏதோ ஒரு அழகிய அருவி சலசலத்துக் கொண்டு ஓடுவது போல் இருந்தது. அடக்கமாக, ஆனல் மிகத்தெளிவாக, சின்னஞ்சிறுகுழந்தையின் தூய்மையான உள்ளத்தைப் போன்ற பரிசுத்தமான மனத்துடன் இப்புது உணர்ச்சியை அனுபவித்தான் வேலன். வேலம்மாளும் அதே நிலைமையில்தான் இருந்தாள். அவள் கருங்கூந்தலில் இருந்த மலர்ந்த மலர்களின் இனிய மணத்தை அனுபவித்துக்கொண்டிருந்தாள்.

அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். இப்போது அவர்களுக்குப் பேசுவதற்கு அதிக விஷயங்கள் இல்லையோ என்னவோ பேசாமலேயே நடந்தார்கள். கோவில் பிரகாரத்தின் மதில் சுவர் ஓரமாக வந்து அமர்ந்தார்கள்.

"சரி, கல்யாணம் ஆகிவிட்டது. இனிமேல் நாம் அனாதைகள் இல்லை" என்றான் வேலன்.

"ஆமாம். நாம் இனிமேல் அனாதைகள் அல்ல. ஆதரவற்றவர்கள் அல்ல. ஒருவருக்கு ஒருவர் ஆதரவாகிவிட்டோம்" என்றாள் வேலம்மாள். வேலனின் கையை எடுத்துத் தன் கையோடு சேர்த்து வைத்துக்கொண்டாள்.

"கடவுள்......" என்று ஏதோ சொல்லுவதற்கு ஆரம்பித்தான் வேலன்.

"கடவுள் நம்மை ஒருபோதும் கைவிட மாட்டார்" என்றாள் வேலம்மாள்.

காற்று வீசிக் கொண்டிருந்தது. கோவிலின் நந்தவனத்தில் இருந்து மனத்தை மயக்கும் மலர்களின் மணம் காற்றிலே மிதந்து வந்தது. வேலம்மாள் இதயத்தில் ஏதோ இனம் தெரியாத இன்பம் பொங்கி எழுந்தது. அவள் தலையைச் சுற்றிக் கொண்டு வந்தது. அவள் கண்களை மூடினாள். தலை மெதுவாகச் சாய்ந்தது; ஆனால் அது அவள் தோளில் சாயவில்லை. வேலனின் பரந்த மார்பில் பள்ளிகொண்டு விட்டது.

வானம் நிர்மலமா யிருந்தது. வஸந்த காலத்தின் இன்ப மயமான காற்று ஜிலுஜிலு வென்று அடித்துக் கொண்டிருந்தது. வேலன் தன் மீது சாய்ந்த வேலம்மாளின் தலையை அன்போடு வருடினான். அவன் கண்களில் ஒரு புது ஒளி படர்ந்தது. அவன் முகத்திலே புது பாவம் தோன்றியது. மூச்சுக் கூட விடாமல் வேலம்மாளின் அழகிய முகத்தைப் பார்த்தான்; பார்த்துக் கொண்டே இருந்தான்.

தான் பிறந்த நாள் முதல் பட்ட கஷ்டங்கள் எல்லாம் மறைந்து விட்டது போல் மகிழ்ந்தான். தானும் வேலம்மாளும் வாழப் போகும் இன்ப வாழ்க்கையை எண்ணினான். இப்படி எதை எதையோ சிந்தித்தபடி தன்னை

மறந்து உட்கார்ந்திருந்தான். கண்களை மூடினான். திக்பிரமை பிடித்தவன் போல், மூர்ச்சை அடைந்தவன் போல் அப்படியே அசையாமல் கிடந்தான்.

அவன் உடல் வான வெளியில் மிதப்பது போல் இருந்தது. பூமிக்கும் சந்திர மண்டலத்துக்கும் பளிங்குக் கல்லால் ஆன படிகள் அமைத்திருந்தன. வேலம்மாளின் கையைப் பிடித்தவாறு வேலன் அந்தப் படிகளில் ஏறினான். அந்தரமான படிகளில் ஏறும்போது ஆயிரம் முறை ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். சந்திர கிரணங்களின் ஜோதி உயிர் பெற்ற மேகக் கூட்டங்கள், வெள்ளை மலர்கள் குன்றுகளாக வந்தது போன்று காட்சி அளித்தன. அன்னங்கள் மிதப்பது போல் அவை வானக் கடலில் மிதந்து சென்றன.

இம் மேகக் கூட்டங்களில் சில வலைகள் பரப்பிக் கிடப்பது போல் பரந்து கிடந்தன. சில கடல் அலைகள் போல் காட்சி அளித்தன. சில பூச் சிதறியது போலத் தோன்றியது. மின்னும் நட்சத்திரக் கூட்டம், வானக் கடலிலே வெடித்த வயிரங்களோ, சிதறுண்ட இன்பங்களோ என்று ஒளிவிட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தன.

கந்தர்வப் பெண்களின் தேனினும் இனிய கீதமும், அமுதம் போன்ற வாத்ய இசையும் வேலனையும் வேலம்மாளையும் இன்பக் கடலில் மூழ்கடித்தன. சந்திரனின் குளிர்ந்த கிரணங்களும் இவற்றோடு மாறாப் புதுமை கொண்டு வரும் புல்லாங் குழலின் அமுத கீதமும் இசைத்துக் கொண்டிருந்தது. ஜில்லென்று வீசிய காற்றோ வேலம்மாளின் நெற்றியில் சுருண்டு தொங்கிக் கொண்டிருந்த கருங் கூந்தலோடு விளையாடிக் கொண்டிருந்தன.

தூரத்தில் தெரிந்த பளிங்கு மண்டபத்துக்குள் புது மணத் தம்பதிகள் புகுந்து சென்றனர். அந்த சுகந்த

மண்டபத்தின் உச்சி மேடைக்கு உல்லாசமாக ஏறிச் சென்றனர். அம்மேடை மீது வெண் பட்டை விரித்து வைத்திருந்த சாய்மானமான ஆசனத்தில் அமர்ந்தனர். தாயின் மடியில் சாய்ந்தது போல அவர்கள் உள்ளத்துக்கு ஒரு ஆறுதல் உண்டாயிற்று. வேலனும் வேலம்மாளும் தங்களை மறந்து உயிர் கலந்திருந்தனர்.

திடீரென்று கேட்ட கோயில் மணியோசை அவர்களை உணர்ச்சி பெறச் செய்தது. அவர்கள் கனவு உலகத்திலிருந்து திரும்பி வந்தனர். கோயிலை விட்டுக் கிளம்பினர். ஏற்கனவே புதிதாக வாடகைக்குப் பிடித்திருந்த தங்கள் புது வீட்டுக்கு விரைந்து சென்றனர்.

வீட்டுக்குப் போனதும் வேலன் தன் சகோதரத் தொழிலாளி ஒருவன் தனக்காகக் காத்துக் கொண்டிருந்ததைப் பார்த்தான்.

"என்ன விசேஷம்? இன்று வேலைக்குப் போகவில்லையா?" என்று கேட்டான்.

"அவன் பதில் சொல்லாமல் திரு திரு வென்று விழித்தான். பிறகு விஷயத்தைச் சொன்னான்.

"போதுமான அளவு மின்சாரம் இல்லாததால் இன்று முதல் தினக் கூலிக்கு வேலை செய்து வந்த தொழிலாளர்களை நிறுத்தி விடுகிறோம்!" என்று காந்தி இரும்புத் தொழிற்சாலை வாசலில் கடிதம் எழுதி ஒட்டி யிருந்ததைச் சொன்னான்.

வயிற்றுப் பிழைப்பில் மண் விழுந்ததை நினைத்ததும் வேலனுக்கு திடீரென்று மூளையில் ஏதோ தாக்கிக் கால் வழியாக இறங்கியது போலிருந்தது.

சற்று முன் வேலன் அனுபவித்த எல்லையற்ற இன்பமும் இப்பொழுது அவன் படும் வேதனையையும் நினைத்துப் பார்க்கவே முடியவில்லையே! ஆம், இதுதான் வாழ்க்கை.

இதைக் கண்டு மனம் தளராமல் இருந்தால்தான் வாழ லாம். வேலனுக்கு இதெல்லாம் தெரியாதா என்ன ?

தன்னைப் போல் வேலையை இழந்து விட்ட தன் சகோதர தொழிலாளிக்கு ஆறுதல் கூறி அனுப்பி விட்டு வீட்டுக்குள் சென்றான் வேலன். வீட்டுக்குள் அமைதி நிலவி இருந்தது. வேலம்மாள் புது ஆடைகளைக் களைந்து கொண்டிருந்தாள். அந்த அறையின் பழைய ஜன்னல் கள் அகலத் திறந்து கிடந்தன. அங்கிருந்த தகரப் பெட்டி திறந்து கிடந்தது. அதைப் பார்த்தால் வேலனின் நிலை மையை எண்ணி வாயைப் பிளந்து பெருமூச்சு விடுவது போல் இருந்தது. பக்கத்துக் குடிசை வீட்டில் பால் போதா மல் தன் பலத்தை எல்லாம் காட்டி 'வீல்' 'வீல்' என்று அழுது கொண்டிருந்தது, உலகம் தெரியாத சின்னஞ் சிறு குழந்தை. அது வேலனின் வேதனைப்படும் உள்ளத்தைப் பார்த்து அழுவது போலிருந்தது.

வேலன் அங்கிருந்த தூணில் சாய்ந்த வண்ணம் உட் கார்ந்தான். அவன் சிந்தனை வேகமாக வேலை செய்தது. "நாளைக்கு என்ன செய்வது?" "நாளைக்கு என்ன செய்வது?" என்ற கேள்வி நாலா பக்கமும் எழுந்தது. அவன் உருவமே அவனுக்கு முன் எழுந்து நின்று அவனைப் பார்த்து அந்தக் கேள்வியைக் கேட்டுக் கெண்டிருந்தது. அவன் அமைதியாக ஆனால் மிகத் தைரியமாகவே இருந் தான். அந்தக் கேள்விக்கு விடை காண முயன்று கொண்டிருந்தான்.

வேலம்மாள் வேறு ஆடை அணிந்து அவனுக்கு எதி ரில் வந்து அமர்ந்தாள். வேலன் அவளைப் பார்த்தான்; பார்த்து லேசாகச் சிரித்தான். அந்தச் சிரிப்பில் அவன் உதடுகள் அசைவதைப் பார்த்தால் அவன் தனக்குத்தானே கேட்கும்படி ஏதோ இரகசியத்தை முணுமுணுப்பது போலிருந்தது.

வேலம்மாள் அவனை ஆதரவோடு பார்த்தாள். அவன் சாய்ந்து கொண்டே உட்கார்ந்திருந்த நிலையைப் பார்த்தாள். "சற்று முன் நடந்த சம்பாஷணை எல்லாவற்றையும் நான் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன். வேலை போய் விட்டதே என்று வருத்தமா?" என்று கேட்டாள். அவள் குரலில் அன்பும் தைரியமும் கலந்து இருந்தன.

"அப்படி யெல்லாம் ஒன்றும் இல்லை" என்று சொன்னான் வேலன்.

அவன் முகம், உடல், பலம் பொருந்திய அவன் கைகள், நிமிர்ந்து நின்ற விரிந்த மார்பு எல்லாம் இருந்த நிலையைப் பார்த்தால் அவன் சொன்னது போலவே அவன் சிறிதும் வருத்தப்படவில்லை என்று தோன்றியது.

வேலம்மாள் சற்று முன் வந்து நிமிர்ந்து உட்கார்ந்தாள். தொண்டையைக் கனைத்து விட்டுக் கணீரென்ற குரலில் தெளிவாகச் சொன்னாள்:

"நீங்கள் இதற்காகக் கொஞ்சமும் கவலைப்பட வேண்டாம். நான் இதை யெல்லாம் முன்னமேயே எதிர்பார்த்தேன். ஆகையால் நான் இதைக் கேட்டுத் திடுக்கிடவில்லை. நான் சொல்லுவதைக் கேளுங்கள். இன்றோடு நீங்கள் பிறருக்கு உழைப்பதை நிறுத்தி விடுங்கள். எத்தனை காலத்துக்கு நீங்கள் அவர்களுக்கு உழைத்தாலும் 'பணம் கொடுக்கிறோம் அவன் உழைக்கிறான்' என்று நினைப்பார்களே ஒழிய, உங்கள் மீது சிறிதும் அன்பு காட்ட மாட்டார்கள். நீங்கள் மனைவி மக்களோடு மகிழ்ச்சியாக இருப்பதைக் கண்டால் அவர்களுக்குப் பிடிக்காது. இன்று முதல் நீங்கள் உங்களுக்காகவே உழைக்க முயலுங்கள். உங்கள் உழைப்பால் நீங்கள் உயரப் பாடுபடுங்கள்."

வேலன் வேலம்மாள் சொன்னதைக் கேட்டான் அவள் அழகிய முகத்தைப் பார்த்தான். அவள் மின்னும்

விழிகள் அவன் முகத்துக்கு நேராகச் சிரித்தன. அது உண்மையை எடுத்து உரைக்கும் சிரிப்பாக, தன்னம்பிக்கையையும் தைரியத்தையும் அளிக்கும் சிரிப்பாக அவனுக்குத் தோன்றியது. வேலம்மாள் அவன் கரத்தை ஆதரவோடு பற்றினாள். வேலன் புத்துணர்ச்சி பெற்றான்.

''ஆமாம்; நீ சொல்லுவதும் உண்மைதான். போன வாரம் எங்கள் காந்தித் தொழிற்சாலையில் ஒரு சம்பவம் நடந்தது. அப்பொழுது எனக்கு அது பெரிதாகத் தோன்றவில்லை. இப்பொழுது அந்தச் சம்பவமும் நீ சொன்ன வார்த்தைகளும் என் அறிவைத் தூண்டி விட்டன''.

''என்ன சம்பவம்? அதைச் சொல்லுங்கள் கேட்கலாம்'' என்றாள்.

''தொழிற்சாலையின் ஆரம்ப காலத்தில் எங்கள் முதலாளிக்கு......''

''எங்கள் முதலாளி என்ன வேண்டிக்கிடக்கிறது? அந்த முதலாளி என்று சொல்லுங்களேன்.''

''சரி, அந்த முதலாளிக்குத் துணையாக ஒருவர் வேலைக்கு வந்தார். அந்தத் தொழிற்சாலையின் வளர்ச்சிக்காக முதலாளிமீது உண்மையாகவே அன்பு வைத்துக் குறைந்த சம்பளத்தில் இரவு பகலாக உழைத்தார். தொழிற்சாலை உயர்ந்தது. மேலும் தொழிலாளர்கள் தேவைப் பட்டனர். அதற்குப் பழைய தொழிலாளி செய்த வேலைக்கு அந்தத் தொழிலாளியை விட அதிக சம்பளத்தில் அவனையே அதிகாரம் செய்வது போல வேறு ஒரு தொழிலாளியை நியமித்தார் முதலாளி. பழைய தொழிலாளி இதைப் பார்த்து வருத்தப்பட்டான். வேறு ஒரு ஆளை வேலைக்கு வைத்து விட்டதற்காக அல்ல. தன்னைவிட அதிகமாக அவனுக்குச் சம்பளம் கொடுக்கிறார்களே என்று தான். நல்ல திறமையும் அறிவும் இருந்து

அவனுக்கு அதிகச் சம்பளம் கொடுத்திருந்தால் அந்தத் தொழிலாளி அதைச் சந்தோஷத்துடன் வரவேற்றிருப்பான். புது ஆளோ மிகச் சாதாரணமானவன். ஆகவே நேரே முதலாளியிடம் சென்றான். 'என்னைவிட அதிகச் சம்பளத்துக்கு அவன் என்ன சாதித்துவிடப் போகிறான்? அத்துடன் நீங்கள் கஷ்டதிசையில் இருந்தபோது நான் உங்களுடன் இரவுபகலாக உழைக்கவில்லையா? அதற்கு இதுதானா நீங்கள் அளிக்கும் உதவி?' என்று கேட்டான். அந்த முதலாளி அவன் மனத்துக்குத் திருப்தியாகக் கூட பதில்சொல்லாமல் கடுமையாகக் கடிந்து அனுப்பிவிட்டார். அந்தத் தொழிலாளி கொஞ்சம் முதுகு எலும்பு உள்ளவன்; சுயமரியாதை உடையவன்; மிகுந்த ரோஷமுள்ளவன். உடனே தன் வேலையை ராஜினாமா செய்தான். காந்தித் தொழிற்சாலையை விட்டுப் போய்விட்டான்."

"அப்படி எல்லாம் அவசரப் பட்டிருக்கக் கூடாது. முதலாளியும் மனிதர்தானே. அவருக்கு ஏதேதோ வேலைகள் இருக்கும். புது ஆளின் திறமையில் நம்பிக்கை இருக்கலாம். அதற்காக இரவு பகல் என்று உழைத்து ஒரு ஸ்தாபனத்தை வளர்த்து அது நல்ல நிலைமையில் இருக்கும்போது வேலையை விட்டு விடலாமா?"

"உன்னைப்போல் அவனும் நன்றாகப் பேசுவான். ஆனால் அவன் மனம் பட்ட வேதனையை நீ அறிய மாட்டாய். 'இந்தமாதிரி நன்றி கெட்டவர்களுக்கு வேலை செய்வதை விட வீட்டில் சும்மாவே இருக்கலாம்' என்று சொன்னான். அவன் சொன்னது அவ்வளவும் உண்மை என்பது அந்த முதலாளி அவனைப் பற்றி எங்களிடம் சொன்னபோது தெரிந்தது."

"என்ன சொல்லியிருக்கப் போகிறார். தொலைந்தான். பீடை ஒழிந்தது. தொழிற்சாலைக்கு க்ஷேமம் என்றுசொல்லியிருப்பார். அப்படித்தான் முதலாளிகள்சொல்லுவார்கள்."

"அப்படிச் சொன்னால்தான் பாதகமில்லையே? அத் தொழிலாளியின் நிலைமையை விளக்க ஒரு கதையே சொன்னார்:

'பெரிய குளத்தில் எருமை ஒன்று படுத்திருந்தது. அதன் கொம்பு நுனியில் ஒரு ஈ உட்கார்ந்து கொண்டிருந் தது. தன் வாலை ஆட்டி முதுகில் அடிக்கும்போதெல்லாம் கொம்பில் இருந்த ஈ பறந்தது. எருமை திடீரென்று தன் தலையைத் தண்ணீருக்குள் அமுக்கியது. ஈ கொம்பி லிருந்து பறந்து விட்டது! இனி இந்தக் கொம்பில் இருப்ப தில் பலன் இல்லை என்று அறிந்ததும் அந்த எருமையைப் பார்த்து எருமையே போய் வருகிறேன் என்று ஈ கூறியது. எருமை அந்த ஈயைப் பார்த்துக் கேலியாகச் சிரித்துவிட்டு இத்தனை நாழி எங்கிருந்தாய் என்று கேட்டது. உன் கொம்பில் தான் உட்கார்ந்திருந்தேன் என்றது ஈ. ஓகோ! என் கொம்பில் இருந்தாயோ என்று ஆச்சரியத்துடன் கேட்டது எருமை' என்று சொல்லி அது போல இவன் இந்தத் தொழிற்சாலையில் இருந்ததே எனக்குத் தெரிய வில்லை. ஏதோ பாவம் தொலைந்து போகிறான் என்று பார்த் தால் வேலையைவிட்டுப் போகிறானும், போகட்டுமே என்று இரவு பகல் என்று பார்க்காமல் உழைத்த ஏழைத் தொழி லாளியை நெஞ்சில் ஈரமில்லாமல் கலாட்டா செய்தார் அந்தத் தொழிற்சாலை முதலாளி?"

"அது இதர தொழிலாளிகளின் மண்டையில் ஏறி இருக்க வேண்டும். அப்படிப் பாடுபட்டு உழைத்த தொழிலாளியைக் கேலி செய்யும் போது பார்த்துக்கொண் டிருக்கலாமா? இன்று அந்தத் தொழிலாளியைச் சொன் னது போல் தானே நாளைக்கு இன்னொருவரையும் சொல்லுவார்?"

"அது எனக்கே அப்பொழுது தோன்றவில்லையே! அவ்வளவு நுண்ணிய அறிவு, உணர்ச்சி இவைகள் எல்லாம்

இதர தொழிலாளர்களுக்கு இருந்தால் ஏன் அவர்கள் நிலைமை இப்படித் தாழ்ந்து கிடக்கிறது? அதுதான் கொஞ்சமும் கிடையாதே'' என்றான் வேலன்.

“அது எப்படியாவது போகட்டும். நான் இந்த நிலைமையை எதிர்பார்த்து ஐந்நூறு ரூபாய் முன் கூட்டியே தயார் செய்து வைத்திருக்கிறேன். அதை வைத்துக் கொண்டு நீங்கள் சொந்தமாகவே ஏதாவது ஒரு தொழில் ஆரம்பியுங்கள். அந்தத் தொழிலில் பாடுபட்டால் அது உங்களுக்குப் பின்னால் பலன் தரும். நமக்கு நாமே பாடு பட்டுக்கொள்வதால் நம் மனத்துக்கே உற்சாகம் உண்டாகும்; ஊக்கம் பிறக்கும். அதனால்தான் 'தன் கையே தனக்கு உதவி' என்று சொல்லி யிருக்கிறார்கள்'' என்றாள் வேலம்மாள்.

இதைக் கேட்டவுடன் வேலன் மனத்தில் உற்சாகம் பீறிக் கொண்டு வந்தது. அவளை அப்படியே குழந்தையைத் தூக்குவது போல் தூக்க வேண்டும்; தூக்கிக் கொண்டு கிறு கிறுவென்று சுற்ற வேண்டும் என்று ஆத்திரப் பட்டான், அவன் தன் பலம் பொருந்திய கையை அகல விரித்துக் கொண்டு அவளை அப்படியே விழுங்கி விடுவது போலப் பார்த்தான்.

“வேலம்மாள்! இந்தச் சிறு முதலே போதும். இதை வைத்துக் கொண்டே இந்த உலகம் வியக்கும் காரியங்களைச் சாதிப்பேன். ஆயிரம் ஆயிரம் தொழிலாளர்கள் மனம் குளிர அவர்களுக்கு வேலை கொடுத்து அவர்கள் குடும்பங்களைக் காப்பாற்றுவேன். முதலாளிகள் எப்படித் தொழிலாளிகளிடம் நடந்து கொள்ள வேண்டும் என்று நடந்து காண்பிப்பேன். தொழிலாளிகள் எப்படி தொழிற்சாலையின் கட்டுப்பாடுகளுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்பதைக் கற்றுக் கொடுப்பேன். அவர்கள் வேலை அற்ப ஆயுள் கொண்டதல்ல. சர்க்கார் உத்தியோ

கத்தை விட நிரந்தரமானது என்று நிர்ணயிப்பேன். அதன் மூலம் இந்த நாட்டின் நிலையையே உயர்த்துவேன்'' என்றான்.

இதைச் சொல்லும்போது அவன் கண்கள் ஒளிவிட்டு மின்னின. ஆனந்த மிகுதியால் அவன் உடல் நடுங்கியது. கைகள் அவனையும் அறியாமல் வேலம்மாளின் கழுத்தில் தவழ்ந்து புரண்டு கொண்டிருந்த தலை மயிரைத் தள்ளிக் கொண்டிருந்தன.

வேலம்மாள் தன் மயக்கும் விழிகளால் அவனைப் பார்த்தாள். சிவந்த தன் உதடுகள் மலரப் புன்னகை புரிந்தாள். சற்று நேரம் மௌனமாக இருந்தாள். பிறகு நீண்ட பெருமூச்சு விட்டுவிட்டு ''நீங்கள் செய்வீர்கள். உங்களால் செய்ய முடியும். எனக்கு அந்த நம்பிக்கை இருக்கிறது'' என்றாள்.

தூரத்தில் காந்தித் தொழிற்சாலையின் பெரிய மணி ஓசை தொழிலாளர்களை வேலைக்கு வரும்படி வருந்தி அழைத்தது. அதன் 'டாண்' 'டாண்' என்று ஒலித்த ஒவ்வொரு நாத ஒலியும் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து வந்து அவர்கள் சம்பாஷணையில் கலந்து ஓய்ந்தது.

* * *

தன்னை அரும் பாடுபட்டு வளர்த்து, தன் வாழ்க்கைக்கு வேண்டிய நல்ல அறிவையும் புகட்டிய தன் தாத்தாவின் ஞாபகார்த்தமாக அவர் புனிதமான நாமத்தில் ''நடேசன் தொழிற்சாலை'' என்று ஒரு சிறிய தொழிற்சாலையை அதாவது சர்வ சாதாரணமான ஒரு 'ரிப்பேர் கடை'யை ஆரம்பித்தான் வேலன். அந்த சின்னஞ் சிறு கடையின் வாசலில் '' எந்த விதமான ரிப்பேரும் இங்கு செய்து கொடுக்கப்படும்'' என்று ஒரு போர்டு எழுதிப் போட்டான். அவனுக்குத்தான் எல்லா

விதமான தொழிலும் தெரியுமே. ஆகலால் அவன் தன்னந்தனியாகவே சைக்கிள் ரிப்பேர் கிராமபோன் ரிப் பேர், பூட்டு ரிப்பேர் என்று எல்லாவிதமான சில்லரை ரிப்பேர்களையும் சீக்கிரம் செய்து கொடுத்து வந்தான்.

தான் செய்யும் ரிப்பேர்களுக்குத் தகுந்த கூலி வாங்கி னன். ஒரு முறை அவன் ரிப்பேர் செய்த சாமான்கள் திரும்பவும் கெட்டு விடாமல் மிக உறுதியாக இருக்கும்படி பார்த்துக் கொடுத்தான். அதனுல் சின்ன சின்ன ரிப்பேர் கள் எல்லாம் வேலனைத் தேடி வந்தன. வேலனிடம் ரிப் பேர் செய்து சென்றவர்கள் அவன் வேலைத் திறமையை யும் நாணயத்தையும் பற்றிச் சொல்ல ஆரம்பித்தனர். அனுவசியமாக நாள் கடத்தாமல் சீக்கிரம் செய்து கொடுக் கும் சுறுசுறுப்பைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தனர். அதனுல் அவனைத் தேடி இன்னும் பல சின்ன வேலைகளும் பெரிய வேலைகளும் சேர்ந்து வந்தன. தன்னிடம் வரும் வேலையைத் தானே செய்ய முடியாததால் வேறு ஒரு தொழிலாளியை வேலைக்கு வைத்துக் கொண்டான்.

அந்தத் தொழிலாளிக்கு மதிப்பும் மரியாதையும் கொடுத்து அன்போடு நடத்தி வந்தான். அவனுக்குப் பிற தொழிற்சாலைகளில் கொடுக்கும் சம்பளத்துடன் லாபத்தில் அவனுக்கும் நல்ல பங்கு கொடுத்தான். அதனுல் அந்தத் தொழிலாளியும் வஞ்சகமில்லாமல் உழைத்தான். தினம் தினம் அவர்கள் தேவைக்கு அதிகமாகவே பணம் வந்தது. அவன் கேட்ட கூலிக்கு மேல் அவன் வேலைத் திறமையை மெச்சிப் பலர் அதிகப் பணம் கொடுத்தனர். அவன் நல்ல குணத்தைக் கண்டு அவனுக்கு மேலும் மேலும் வேலை களைக் கொடுத்தார்கள்.

தொழிற்சாலையின் வருவாயை யெல்லாம் அப்படியே வேலன் வேலம்மாளிடம் கொடுத்தான். அதன் வரவு செலவு கணக்குகளை வேலம்மாளே கவனித்துக் கொண்டாள்.

சிக்கனமாகக் குடும்பத்தை நடத்தித் தொழிற்சாலையின் வளர்ச்சிக்காக பணத்தை மிச்சம் பிடித்து அதற்கு வேண்டிய நல்ல தொழில் இயந்திரங்களை வாங்குவதற்குத் திட்டம் வகுத்தாள். வேலனுக்கு வேளை தவருமல் சத்துள்ள ஆகாரங்களைச் சமைத்து அன்போடு போட்டாள். இப்படியாக வேலனையும் தொழிற்சாலையையும் கண்ணை இமை காப்பது போல கவனமாகக் காத்து வந்தாள்.

வேலன் இப்பொழுது வேளா வேளைக்குச் சாப்பிடுவதாலும், மனக் கஷ்டம் இல்லாமல் இருந்து வருவதாலும் அவன் உடம்பு நன்ருக இருந்தது. அவன் முகத்தில் ஒரு தளதளப்பு ஏற்பட்டது. அவன் கன்னங்கள் சதை பிடித்து உப்பின. கைகள் எல்லாம் உருண்டு திரண்டு பலம் பெற்றன. அவன் உடல் அழகு பெற்று விளங்கியது. வேலனைப் பார்த்தவர்கள் வைத்த கண் வாங்காமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

வேலம்மாள் தன் கணவனைப் பார்த்துக் களிப்படைந்தாள். அவன் அழகிய உருவத்தைப் பார்த்து ஆனந்தப்பட்டாள். தன் அறிவு அத்தனையும் செலவழித்து அவன் சந்தோஷமாக இருக்கும்படி நடந்துவந்தாள்.

வேலனின் தற்போதைய தோற்றமே அவனுக்கு ஒரு மதிப்பை உண்டாக்கி விட்டது. ஆமாம், உலகமே ஆடம்பரத்துக்குத்தானே மயங்குகிறது! இன்றைக்கு மட்டுந்தான் அப்படியா? அந்தக் காலத்திலும் அப்படித்தான் இருந்திருக்கிறது. அமுதத்துக்காக கடலைக் கடைந்தபோது முதலில் வந்த லக்ஷ்மியைப் பொன்னுடைப் போர்த்திக் கொண்டு ஆடம்பரத்துடனும் அலங்காரத்துடனும் காட்சியளித்த விஷ்ணுவுக்குத்தான் கொடுத்தார்கள். வெறும் கௌபீனதாரியாக இருந்த சிவனுக்கு விஷத்தைக் கொடுத்தார்கள் என்று புராணங்கள் கூறுகின்றனவே. அப்படி

யிருக்கும்போது வேலனின் அழகிய தோற்றத்தைக் கண்டு மக்கள் மதிப்பும் மரியாதையும் வைத்ததில் ஆச்சரியம் இல்லை அல்லவா? இதனால் இப்பொழுது வேலனின் தொழிற்சாலைக்கு இன்னும் அதிக வேலைகள் வந்து குவிய ஆரம்பித்தன. வேலன் தன் வேலைகளை முடித்துக் கொடுக்க முடியாமல் தவித்தான். மேலும் தொழிற்சாலை யையும் அதன் சிப்பந்திகளையும் விஸ்தரிக்க ஆரம்பித்தான்.

ஐந்நூறு ரூபாய் முதலில் சின்னஞ் சிறு கடையில் இருந்த தொழிற்சாலை இன்று ஐயாயிரம் ரூபாய் முதலில் ஐம்பது தொழிலாளர்களைக் கொண்ட பெரிய தொழிற் சாலையாக வளர்ந்து விட்டது. ஐந்தே வருஷத்தில் இந்த அபூர்வமான வளர்ச்சியைப் பெற்று விட்டது, 'நடேசன் தொழிற்சாலை'. அது வளர்ந்து வரும் வேகத்தைப் பார்த்து இதர முதலாளிகள் பொறாமை கொள்ள ஆரம் பித்தனர். நேற்று எங்கேயோ கிடந்தவன் இன்று இவ் வளவு பெரிய தொழிற்சாலையின் சொந்தக்காரனாக விளங்குவதா என்று வேதனைப்பட்டனர். வேலனின் வேலைத் திறமையைப் பழித்து அவனிடம் இருந்த தொழி லாளர்களைக் கலைக்க ஆரம்பித்தனர். அப்படி அவர்கள் பொறாமைப் பட்டதாலேயே வேலன் இன்னும் கொஞ்சம் கவனமாகவும் கருத்துடனும் தொழிற்சாலையைக் கவனிக்க ஆரம்பித்தான்.

வேலனின் கள்ளமற்ற உள்ளம், கஷ்டப்பட்ட உடல், வேதனைப்பட்ட மனம் வேலம்மாளின் ஆதரவால், அவ ளுடைய அருமையான உபதேசத்தால் வளம் பெற்றது. அவன் மனத்தில் பண ஆசை ஏற்படாமல், படாடோபத் துக்கு ஆசைப்படாமல், போலிக் கவுரவத்தை நாடாமல் இருக்கும்படி பார்த்து வந்தாள். வேலன் மனித உணர்ச்சி உள்ள மனிதனாகவே இருந்தான். அப்படி அவன் மனித னாகவே இருந்ததால் அவன் தொழில் மேலும் பெருகிற்று.

தொழிலாளர்கள் அவனை இன்னும் அதிகமாக நேசிக்க ஆரம்பித்தார்கள். நாள் முழுவதும் அவனுடன் சேர்ந்து வேலைசெய்து வந்த தொழிலாளர்கள் அவன் உண்மைக்குப் பணிந்து விட்டார்கள். அவர்களை அறியாமல் அவனைத் தலைவனாக நினைத்து மரியாதை செய்யும் மனப் பக்குவம் பெற்று விட்டனர்.

அதனால் வெளியில் வேலனின் நியாயத்தையும் நேர்மையையும்; தயவையும், தாராளத்தையும் பற்றிப் புகழ்ந்து பேச ஆரம்பித்தார்கள். முதலாளியையே புகழ்ந்த தொழிலாளர்களைப்பார்த்து முதலாளிகள் வியந்தனர். வேலனின் புகழ் வளர்ந்தது. இப்போது முந்நூறு பேருக்கு மேல் வேலை செய்யும் தொழிற்சாலையாக முன்னும் பின்னும் அழகுடன் விளங்கும் கட்டிடத்தில் நடேசன் தொழிற்சாலை நடந்து வந்தது.

வேலன் எப்போதும் போலவே வேலைகளைக் கவனித்து வந்தாலும் முன்போல் அவனே எல்லா வேலைகளையும் செய்வதில்லை. எல்லா வேலைகளையும் தானே செய்து தொழிலாளர்கள் முன்னுக்கு வர முடியாமல் செய்ய முயலுவதில்லை. தொழிலாளர்களுக்கு முன்பாக இந்திரன் சந்திரன் என்று புகழ்ந்து பேசி வேலையை வாங்கிக்கொண்டு பின்னால் எல்லாம் தன்னால்தான் நடப்பதுபோல நடிப்ப தில்லை. தொழிற்சாலைக்கு வெளியில் தொழிலாளர்களைப் பற்றி 'அவர்கள் உதவாக்கரைகள். ஏதோ வேலைக்கு வைத்துக்கொண்டிருக்கிறேன். என்ன சொன்னாலும் அவர்கள் மண்டையில் ஏறுவதில்லை' என்று புறங் கூறுவதில்லை. உண்மையாகவே தொழிலாளர்களை நேசித்தான். நன்றாகத் தொழில் செய்தவர்களை ஊக்குவித்தான். சம்பளத்தில் அதிக பாகுபாடு செய்யா விட்டாலும் அவர்கள் செய்யும் வேலைக்குத் தகுந்தபடி, உற்பத்தியின் உயர்வுக்குத் தகுந்த படி தனி ஊதியம் வேறு கொடுத்தான். தொழிற்சாலை

யில் வரும் லாபத்திலும் அவர்களுக்குப் பங்கு கொடுத்தான். அதனால் தொழிலாளர்களின் ஊக்கம் குன்றி மங்கி மறையாமல் மேலும் வளர்ந்து வந்தது. தொழிற்சாலை மேலும் பெருகிற்று. தொழிலாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தன.

தொழிலாளர்களே தொழில் ஸ்தாபனங்களின் தலைவராகவோ சொந்தக்காரர்களாகவோ இருந்தால் தொழிலாளர்களை முன்னுக்கு வர விடமாட்டார்கள். அவர்கள் மேதையைக் கண்டு பொருமைப்படுவார்கள். அவர்கள் செய்யும் வேலைக்கு மதிப்புக் கொடுக்க மாட்டார்கள். இது இப்பொழுது நம் கண்முன் காணும் உண்மை. வேலன் அதற்கு நேர்மாருக விளங்கி வந்தான்.

இப்பொழுது ஐந்நூறு பேருக்குமேல் வேலை செய்யும் மிகப்பெரிய தொழிற்சாலையாக "நடேசன் தொழிற்சாலை" மாறி விட்டது. வேலன் பெரிய தொழில் அதிபர்களில் ஒருவனுக விளங்கினுன்—இனி வேலனை அப்படி ஒருமைப் படுத்திச்சொல்லலாமா? அப்படிச்சொன்னுல் தொழிலாளர்கள், ஏன்? பொதுமக்கள்கூட அல்லவா மனம் வருத்தப் படுவார்கள்? தொழில் அதிபர்களில் ஒருவராக வேலன் விளங்கி வந்தார்.

"நடேசன் தொழிற்சாலை"யின் அதிபரான வேலன் தன் தொழிற்சாலையின் லாபத்தில் கால் பங்கைத் தரும ஸ்தாபனங்களுக்கு நன்கொடையாக வழங்கி வந்தார். கல்வி ஸ்தாபனங்களுக்கு அள்ளிக் கொடுத்தார். ஆஸ்பத்திரிகளில் நடேசன் தொழிற்சாலை வார்டுகள் கட்டப்பட்டன. அதில் அநாதைகள் மட்டும் வைத்து ஆதரிக்க வழி வகைகள் வகுக்கப்பட்டன. பள்ளிக்கூடங்களில் நடேசன் தொழிற்சாலை உதவியில் எத்தனையோ ஏழை மாணவர்கள், — உண்மையிலேயே ஏழைதான் என்று தீர்மானித்த ஏழை மாணவர்கள், படித்து வந்தனர். அநாதைகளைத்

தேடிக் கண்டு பிடித்து அவர்கள் அநாதைகள்தானு என்று அறிந்து அத்தீனர்களின் துயர்களைத் துடைக்கப் பாடு பட்டார். அவர்கள் வாழ வழி செய்தார்.

வேலனின் புகழ் ஏழைகளின் மத்தியிலும், மத்தியதர வர்க்கத்தாரின் இடையிலும், செல்வந்தர்கள் வாயிலும் பரவ ஆரம்பித்து விட்டது. ஆனுல் வேலன் அந்தப் புகழுக்கு மயங்கவில்லை. ஞானியைப்போல் கர்மமே கண்ணுக எல்லாவற்றையும் கவனித்து வந்தார். தன் அருமை மனைவி மனம் நோகாமல் குடும்பம் நடத்தி வந்தார். சின்னஞ் சிறு வீட்டிலேயே படாடோபம் இல்லாமல் அதற்காகப் பஞ்ச கோலம் போடாமல், எளிய வாழ்வு நடத்துவது போன்ற ஏமாற்றும் வித்தைகள் ஒன்றும் செய்யாமல் சௌகர்யமாக வாழ்ந்து வந்தார்.

வேலனை யாரென்று அறியாதபோது அவருக்குக் காந்தித் தொழிற்சாலையில் வேலை வாங்கித் தந்த அந்த உத்தம வாலிபரின் நேரடியான நிர்வாகத்தில் "நடேசன் தொழிற்சாலை" எந்தவித குறைவும் இல்லாமல் நடந்து வந்தது. அது நிலைத்து நடப்பதற்கான நல்ல வழி வகைகளை எல்லாம் வேலன் வகுத்து வைத்து விட்டார்.

வேலனுக்கு இப்பொழுது நாற்பது வயது நிரம்பி விட்டது. அவர் மனம் என்னமோ எப்பொழுதும் போலவேதான் ஏழைக்கு இரங்கும் சுபாவத்துடன் இருந்து வருகிறது. ஆனுல் சமூகத்தில் மகோன்னத ஸ்தானத்தைப் பெற்று விட்டார். பொழுது விடிந்து பொழுது போனுல் பலப்பல பொது ஸ்தாபனங்கள் பொதுக் கூட்டங்கள் போட்டு வேலன் புகழ் பாடிக் கொண்டிருந்தன. மக்கள் சாதாரணமாகவே வேலனை வள்ளல் என்றே வழங்க ஆரம்பித்து விட்டனர். பத்திரிகைகள் பத்தி பத்தியாக வேலனைப் பற்றி எழுதித் தள்ளின. தொழிலாளர் சம்மந்தமான எந்தப் பிரச்னைகள்

வந்தாலும் வேலன் என்ன சொல்லுகிறார் என்று எல்லாப் பத்திரிகையின் நிருபர்களும் அவர் வீட்டைத் தேடி வந்தனர். வேலம்மாள் இதையெல்லாம் கண்டு மகிழ்ந்தாள். பத்திரிகைகளில் வேலனைப் பற்றி வந்தவைகளை எல்லாம் படித்து மகிழ்ந்தாள்.

வேலனோ இதை யெல்லாம் லட்சியம் செய்யவே இல்லை. "இவர்கள் புகழ்வது என் தற்பொழுதைய பணத்தை உத்தேசித்துத்தானே ஒழிய என் சேவைக்கு அல்ல. என் நல்ல எண்ணத்துக்கு அல்ல. நான் உழைப்பால் உயர்ந்த சாதாரண ஏழைதானே?" என்று சொல்லி விடுவார்.

வேலம்மாள் தன் கணவரின் அடக்கத்தைக் கண்டு அசந்து விடுவாள். நீங்கள்தான் கண் கண்ட தெய்வம் என்று வாயார வாழ்த்தி வணங்குவாள். வேலனோ "எல்லாம் உன்னால்தான். நீ தான் உண்மையிலேயே தெய்வத்துக்குச் சமானமானவள்" என்று சொல்லுவார்.

அவர் மனது நாற்பது வருஷங்களுக்குப் பின்னால் சென்றது. அவர் மனக் கண்முன் பயங்கர இடியும் கண்ணைப் பறிக்கும் மின்னலும், கொட்டும் மழையும் அதற்கு மத்தியில் தமக்கு இந்த உலகில் ஆதரவாக இருந்த ஒரே ஒரு அன்புத் தெய்வமான அருமைத் தாத்தாவைப் பறி கொடுத்து விட்டுத் தன்னந் தனியாக ஓடி வந்த காட்சி நினைவுக்கு வந்தது. அதற்குப் பின் ஒன்றன்பின் ஒன்றாக நிகழ்ந்த சம்பவங்கள் எல்லாம் நினைவுக்கு வந்தன. வேலம்மாளின் கூட்டுறவுக்குப் பின் தன் வாழ்வு வளம் பெற்று, தன் உழைப்பு உயர்வடைந்ததை எண்ணிப் பார்த்தார். நன்றி உணர்ச்சியுடன் தம் எதிரில் உட்கார்ந்திருந்த காதல் மனைவியை, தர்ம பத்தினியை, அறத்தின் உருவமான வேலம்மாளைப் பார்த்தார். கருணை நிறைந்த அவள் கண்களைப் பார்த்தார். அதில் தவழ்ந்த சாந்தத்தைப் பார்த்தார்.

தம்மை வாழ்விக்க வந்தவளை மனம் குளிரப் பார்த்துக் கொண்டே இருந்தார். அவரைப் பார்த்து வேலம்மாள் அமைதியாகச் சிரித்தாள்.

* * *

அன்று வேலன் எதையோ சிந்தித்த வண்ணம் உட்கார்ந்திருந்தார். அவருக்கு எதிரில் இரண்டு அநாதைக் குழந்தைகள் அவரை "அப்பா! அப்பா!" என்று அழைத்துக் கொண்டு ஓடி வந்தன. வேலன் அந்தக் குழந்தைகளின் கன்னத்தைத் தடவி விட்டு, "போங்கள்! போய்ச் சாப்பிட்டுவிட்டு விளையாடுங்கள்" என்று அன்பு ததும்பச் சொல்லி அனுப்பினார்.

வேலம்மாள் அந்த அநாதைக் குழந்தைகளைத் தன் குழந்தைகள் போலவே வளர்த்து வந்தாள். இப்படி எத்தனை எத்தனையோ குழந்தைகளை அவள் வளர்த்து விட்டிருக்கிறாள். அவள் அடிக்கடி சொல்லுவதையே அன்றும் சொன்னாள். "எனக்கென்று என் வயிற்றில் குழந்தைகள் பிறக்கவில்லையே ஒழிய இந்த உலகில் இருக்கும் அநாதைக் குழந்தைகள், ஏழைச் சிறுவர்கள் எல்லாம் என் சொந்தக் குழந்தைகள்தான்!" என்றாள்.

வேலன் குழந்தைகளின் அருமையைப் பற்றிச் சொன்னார். "வேலம்மாள்! குழந்தைகளின் சிரித்த முகம், பயம் அறியாத ஒளி வீசும் கண்கள், அன்பு தவழும் பார்வை, சின்னஞ் சிறு வாய், அதில் இருக்கும் அழகான இதழ்கள், அதற்கேற்ற மூக்கு, சுருள் சுருளாகப் பட்டுப் போன்ற தலை மயிர், மழலை பேசும் நாக்கு இவைகளைவிட உயர்ந்த இன்பம் இந்த உலகில் இல்லை. அந்தக் குழந்தைகளைப் பார்! இன்னும் எண்ணங்கள் எழவில்லை. கவலைகள் உதிக்கவில்லை. அவர்கள் போற்றிப் புகழும் புதுமலர்கள் இல்லையா? அவர்களைத் தொட்டாலே இன்பமாக இருக்கிறதே! அவர்கள் பார்வையில்தான் என்ன ஆனந்தம்!

அடாடா! அவர்களைவிட உயர்ந்த இன்பத்தை நான் அனுபவித்த தில்லை. அவர்கள்தான் உயிருள்ள இன்பங்கள்'' என்று சொன்னார்.

வேலம்மாள் தன்னை மறந்து வேலன் சொன்னதைக் கேட்டுக் கொண்டிருந்தாள். ''உங்களிடம் யாருக்குமே இல்லாத ஒரு அபூர்வமான திறமை இருக்கிறது. நீங்கள் அனுபவிப்பதை உங்களால் எடுத்துச் சொல்லிவிட முடிகிறது'' என்றாள்.

வேலன் லேசாகச் சிரித்தார்.

இந்தச் சமயத்தில் ''வாழைக்கொல்லை கிராமத்தில் இருந்து யாரோ பார்க்க வந்திருக்கிறார்கள்'' என்று சொன்னார் வேலனின் காரியதரிசி.

''வரச்சொல்லுங்கள்!'' என்றார் வேலன்.

சுமார் நாற்பத்தைந்து வயது மதிக்கத் தக்க ஒரு மனிதர் உள்ளே வந்தார். வேலனைக் கைகூப்பி வணங்கினார். வேலனும் பதிலுக்கு வணங்கினார். தமக்கு எதிரில் உள்ள ஆசனத்தில் அமரச் சொன்னார். வந்த மனிதரும் அமர்ந்தார்.

''எங்கள் ஊரில் ஒரு கோயில் திருப்பணி செய்து கொண்டிருக்கிறோம். அதற்குத் தங்கள் உதவியை நாடி வந்தோம். பொதுக் காரியங்களுக்குத் தாராளமாக வழங்கும் வள்ளல் என்று தங்களை உலகம் போற்றுகிறது'' என்றார்.

''கோயில்கள் கட்ட வேண்டியதுதான். அதற்கு வேண்டிய பணம் தருகிறேன். வாழைக்கொல்லை என் தாத்தாவின் ஊர். அந்த ஊரில் கோயில் கட்டுவதற்குச் செலவாகும் எல்லா பணத்தையும் வேணுமானாலும் கொடுக்கிறேன். ஆனால் எனக்கு இன்னொரு ஆசை.

அதையும் நீங்கள் செய்யப் பாடுபடவேண்டும். புதுக் கோயில்கள் கட்டுவதை விட இருக்கும் கோயில்களையும் சீர்திருத்த வேண்டும். அதற்கு வேண்டிய பணத்தை நான் கொடுக்கிறேன். நான் நம் தமிழகத்தின் வட எல்லை யான வேங்கடத்தில் இருந்து குமரிமுனை வரையில் உள்ள எல்லா புண்ணிய ஸ்தலங்களுக்கும் போய் வந்திருக் கிறேன். 'ஒன்றென்றிரு; தெய்வம் உண்டென்றிரு' என்று அறிவுறுத்திய நம் தெய்வத் தமிழ்நாட்டில் இன்று அதற்கு நேர் மாருகப் பிரசாரங்கள் நடக்கின்றன. தெய்வ மணம் கமழ்ந்த நம் தமிழ்த் திருநாட்டில் தெய்வத்தின் பேரால் நடக்கும் ஏசலையும் பூசலையும் காது கொடுத்துக் கேட்க முடியவில்லை. கோயில்களின் நிலைமையைப்பற்றி என்ன சொல்லுவது? கோயில்களின் திருக்குளங்கள், புனிதத் தீர்த்தங்கள் அசுத்தப்படுத்தப்படுகின்றன. அதில் தொற்றுநோய் பிடித்தவர்கள் எல்லாம் தங்கள் உடலைக் கழுவி அந்த நீரைக் கெடுத்து வருகின்றனர். நம் திருக் கோயில்களில் உள்ள ஆயிரங்கால் மண்டபங்கள், சோம் பேறிகளுக்கு மடமாக இருக்கின்றன. கோயிலின் உள்ளே தூய்மை இல்லை. திருவிழாவுக்கு வரும் ஜனங்கள் செய்யும் அசுத்தம், அடடா! பார்க்கச் சகிக்க முடியவில்லை. எந்தக் கோயிலுக்குச் சென்ருலும் கோபுர வாசலின் இருபுறமும் பெரு வியாதி பிடித்தவர்கள், தொற்று நோய் உள்ளவர் கள், இன்னும் அங்கஹீனமுள்ள ஒழுங்கீனர்கள், பிச்சைக் காரர்களாக வரிசை வரிசையாக உட்கார்ந்திருக்கும் காட்சி கண்ருவியாக இருக்கிறது. அவர்களைப் பார்த்தால் என் போன்றவனுக்குக் கூட கோயிலுக்குச் செல்ல மனம் வருவதில்லை. இந்தக் காரியங்களை எல்லாம் சீர்திருத்தம் செய்து வெற்றி பெற்ருல் நம் நாடு பல வகைகளில் முன் னேறி விடும். இந்தக் காரியங்களை எல்லாம் உங்களைப் போன்றவர்கள் தான் செய்ய வேண்டும். அப்பொழுது தான் பிறநாட்டிலிருந்து வரும் யாத்ரிகர்கள் நம் நாட்டின்

கோயில்களைப் பார்த்துப் பெருமையடைய முடியும். அவர்களில் பலரைச் சந்தித்திருக்கிறேன். 'தமிழ் நாட்டைப் போன்று விண்ணை இடிக்கும் கோபுரங்கள் உடைய கோயில்கள் வேறு நாட்டில் இல்லை. மனம் கவரும் மதில்கள்; உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் கலை மணம் கமழும் கோபுரங்கள்; சிந்தனைக்கு விருந்தளிக்கும் சிற்பங்கள் இவ்வளவையும் தமிழ்நாட்டின் கோயில்களில் தான் காண முடியும்' என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிப் பெருமையுடன் பிற நாட்டார் புகழ்ந்து பேசும் திருக்கோயில்களைப் பற்றியும் நினைவில் வைத்துக் கொண்டால் நல்லது'' என்றார் வேலன்.

இதைக் கேட்டதும் வந்த புதிய மனிதரின் கண்களில் நீர் நிறைந்து விட்டது. "இதற்காகப் பாடுபடுகிறேன். என் வாழ்நாள் பூராவையும் இதற்கே செலவிடுகிறேன். அதிருக்கட்டும் தங்கள் தாத்தாவுக்கு வாழைக்கொல்லை கிராமம் என்றீர்களே, அவர் பெயர் என்ன?'' என்று கேட்டார்.

"என் தாத்தாவின் பெயர் நடேசன். வாழைக்கொல்லை கிராமத்தில் பெரிய பண்ணையார் வீட்டில் பண்ணையாளாக இருந்தார்'' என்றார் வேலன்.

வந்த மனிதர் சட்டென்று எழுந்தார். "ஆகா! நடேசன் பேரன் வேலனா நீங்கள்! நானும் அவர் பேரன் தான்! பெரிய பண்ணையார் மகன் செல்வராஜன் நான். என் வாழ்க்கையைச் செம்மைப் படுத்தியவர் நடேசன் தான்'' என்று சொல்லிக் கொண்டே வேலனைத் தழுவிக் கொண்டார்.

இந்தக் காட்சி கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது. வேலம்மாள் இதைப் பார்த்து வியந்த வண்ணம் மலைத்துப் போய் நின்று கொண்டிருந்தாள். அவள் மனதில் ஆனந்தம் ததும்பியது.

"நடேசன் என்னவோ உழைத்து உழைத்துக் கடைசியில் இந்த உலகைவிட்டு மேலே உயர்ந்து போனர். ஆனல் நீங்களோ அவர் உழைப்பையும் சேர்த்து உழைத்து உழைத்து உயர்ந்து விட்டீர்கள். இந்த உலகம் உள்ள அளவும் உங்கள் உயர்வை,– நீங்கள் செய்திருக்கும் நிலேயான தர்மங்கள்; நேர்மையான காரியங்கள்; என்றுமே அழியாத 'நடேசன் தொழிற்சாலே' எல்லாம் எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கும். அப்படி உயர்ந்து விட்டீர்கள்" என்ருர் செல்வராஜன்.

அவர்கள் இருவரும் சொந்த விஷயங்களேப் பற்றி நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். அந்தச் சமயத்தில் திடுதிடுவென்று ஒரு நோயாளியை வேலேக் காரர்கள் சிலர் தூக்கி வந்தனர். "நம் வீட்டு வாசலில் வந்து நின்ருர். அப்படியே மயங்கி விழுந்து விட்டார்" என்றனர்.

எலும்பும் தோலுமாக இருந்த அந்த மெலிந்து போன உருவத்தைப் பார்த்து வேலன் பரிதாபப் பட்டார். "எங்கேயோ பார்த்தாற் போலிருக்கிறதே!" என்று யோசித்தார். வயித்திய வசதிகளேக் கவனிக்க அவசரமாக ஏற்பாடு செய்தார்.

வயித்திய வசதி பெற்று அந்த நோயாளி மூர்ச்சை தெளிந்து எழுந்ததும் கண்களே ஒரு தரம் சுழற்றிப் பார்த்தார். வேலம்மாளேப் பார்த்தார். "வேலம்மாள்! என்னே மன்னித்து விடு. நான் தான் உன் சொத்து முழுவதையும் எடுத்துக்கொண்டு உன்னே ஏழையாய், பரதேசியாய் நடுத் தெருவில் விட்டவன். அதன் பலனே நன்கு அனுபவித்து விட்டேன். என் கையில் இருந்த பணம் போனதும் எல்லாரும் என்னேக் கைவிட்டு விட்டனர். நாலு வருஷங்களாக நடுத் தெருவில் பிச்சைக்காரனுய் அலேந்தேன். சாவதற்குள் உங்களேப் பார்த்து மன்னிப்புக் கோர ஓடி வந்தேன்.

என்னை மன்னித்தேன் என்று சொன்னால்தான் என் ஆத்மா சாந்தி அடையும்'' என்றார்.

வேலம்மாளும் வேலனும் அந்த நோயாளியை அன்போடு பார்த்தனர். வேலம்மாள் அந்த நோயாளியைப் பரிதாபமாகப் பார்த்தாள்.

''ஐயா, இப்பொழுது எங்களுக்கு இருக்கும் செல்வங்கள் எல்லாம் உங்களுடையதுதான். நீங்கள் எங்கள் திருமணத்தை நடத்திக் கொடுத்ததற்காக உங்களுக்கு இந்த உலகையே வேண்டுமானாலும் கொடுக்கலாம். இனிமேல் இந்த வீட்டிலேயே இருங்கள். இது உங்கள் வீடு''என்றாள்.

அந்த நோயாளி கண்களில் நீர் மல்க கையெடுத்துக் கும்பிட்டார். இந்த மனத்தை உருக்கும் காட்சியைக் கண்டு ''வேலனும் வேலம்மாளும் மனிதர்களே அல்ல. மனித உருவில் வந்த தெய்வங்கள்'' என்று எண்ணி மானசீகமாக அவர்களை வணங்கி மகிழ்ந்தார் செல்வராஜன்.

* * *

**வே**லன் தம் வாழ்நாளில் தமக்கு ஏற்பட்ட அனுபவங்களையும் தம் அறிவையும் அழியாமல் இருக்கும்படி செய்தார். ''உழைப்பால் உயரலாம்'' என்று ஒரு புஸ்தகத்தை எழுதினார். அதில் தாம் உலகத்தைப் பார்த்த பல கோணங்களையும் விவரமாக எழுதினார். மனித சமூகத்தில் உள்ள குறைபாடுகளையும் எழுதி வெளியிட்டார். லட்சக்கணக்கான புத்தகங்கள் விற்பனை ஆயின. உலக மொழிகளில் எல்லாம் அந்தப் புஸ்தகம் மொழிபெயர்க்கப்பட்டது. அந்தப் புஸ்தகத்தில் உள்ள உயர்ந்த கருத்துக்களை அறிஞர்கள் வியந்து பாராட்டினர். பல கல்லூரிகள் வேலனை அழைத்து ''உழைப்பால் உயரலாம்'' என்ற புத்தகத்தை எழுதியதற்காக அவருக்கு டாக்டர் பட்டம் அளித்துக் கௌரவித்தன.

"உழைப்பால் உயரலாம்" என்ற புஸ்தகத்தின் கடைசியில் "முதலாளிகள் தொழிலாளிகளின் இரத்தத்தைக் கொண்டு இரத்தினங்களை உண்டாக்குகின்றனர். ஆனால் அதை உற்பத்தி செய்யும் தொழிலாளிகளை அவர்கள் மதித்துப் பாராட்டுவதில்லை. நிலச்சுவான்தார்கள், உழவர்களின் வாழ்நாளை யெல்லாம் பாழாக்கிப் பொன்னும் மணியும் பெருகின்றனர். உழவர்களோ உழைத்து உழைத்து உழைப்புக்கு ஏற்ற ஊதியம் இல்லாமல் செத்து மடிகின்றனர். சர்க்காரோ ஏழைகளின் நல்வாழ்வுக்கு வழி வகுக்காமல் அவர்களுக்கு வேண்டிய செளகர்யங்களைச் செய்யாமல் பண்ணையார்களையும் முதலாளிகளையுமே ஆதரித்து வருகிறது. இந்தக் கொடுமையில் மூழ்கிய மக்களோ உணர்ச்சியின்றிக் கும்பகர்ணனைப் போல் தூங்குகின்றனர். வாலிபர்களோ இளமையிலேயே கிழவர்களாக இருக்கின்றனர். எங்கு பார்த்தாலும் பொய் உண்மையை நாடுகிறது. இருட்டில் வாழும் வௌவால் சூரியனைப் பார்த்துக் கேலி செய்து சிரிக்கிறது. இது வேடிக்கையல்லவா? மிருக அரசனான சிம்மத்தின் இரத்தம் சில சமயம் பலவீனர்களின் தேகத்திலும் ஓடும். நீர்த்துளிகளில் நெருப்பின் உணர்ச்சி தோன்றுவதுண்டு. ஆகையால் மக்களே! எழுந்திருங்கள். அநீதியை எதிர்த்துப் போராடுங்கள். தைரியம்தான் உங்கள் சொத்து. அதை வைத்துக் கொண்டு உழையுங்கள். அப்படி உண்மையோடு உழைத்தால் வாழ்க்கையில் நிச்சயம் உயரலாம்" என்று எழுதி முடித்திருக்கிறார்.

இந்த மணி வாசகம் மக்களின் அறிவில் ஒரு சூறாவளியையே கிளப்பி விட்டு விட்டது. இந்தக் கருத்தை எடுத்துக் கையாளாத அறிஞர்களே இல்லை. மழைக்குக்கூட பள்ளிக்கூடத்தில் ஒதுங்கி அறியாத வேலன், கல்லூரிகளும், கவிஞர்களும், அறிஞர்களும் பாராட்டும் டாக்டர்

வேலன் ஆனுர். நாதியற்ற சிறுவனுக நடுத்தெருவில் அலேந்து திரிந்த வேலன் மனித குலம் வாழ்த்தி வணங்கும் வள்ளல் ஆனுர். வேலனே தன்னே உழைப்பால் உயர்ந்த ஏழை என்றே சொல்லிக் கொள்வதில் பெருமைப்படுகிறுர். ஏழைகளின் மத்தியில்தான் உண்மையும் அன்பும், நன்றியும் விசுவாசமும் இருப்பதாகக் கூறுகிறுர். அவர் அநுபவித்துக் கூறிய உண்மை வாசகம் அல்லவா அது?

* * *

இன்று வேலனுக்கு அறுபதாவது வயது பூர்த்தியாகிறது. அவர் வயிற்றில் பிறந்த குழந்தைகள் யாரும் இல்லே. ஆனுல் ஆயிரம் ஆயிரம் ஏழைக் குழந்தைகளுக்கு, அநாதைக் குழந்தைகளுக்குத் தந்தையாக விளங்குகிறுர். அவர் மனேவி வேலம்மாளோ பெற்ற தாயைவிடப் பதின் மடங்கு அன்புள்ள தாயாக விளங்குகிறுள். வேலனின் அறுபதாவது பிறந்த தின விழாவைப் பெரிய திருவிழா வாகவே மக்கள் கொண்டாடினர். அவரால் எடுத்து வளர்க்கப்பட்ட நூற்றுக் கணக்கான ஏழைக் குழந்தைகளும் அநாதைச் சிறுவர்களும் இன்று சமூகத்தில் டாக்டர்களாகவும், வழக்கறிஞர்களாகவும், நீதிபதிகளாகவும், இன்ஜினீயர்களாகவும், அரசியல் தலேவர்களாகவும் புகழுடன் விளங்குகின்றனர். அவர்கள் எல்லாம் தங்கள் கண்முன் கண்ட தாய் தந்தையர்களான வேலனுக்கும் வேலம்மாளுக்கும் தங்கள் மரியாதையையும், அன்பையும், செலுத்திக் கொண்டனர். தொழிலாளர்களோ தங்களே மறந்து குதூகலப்பட்டனர். வேலனும் வேலம்மாளும் தங்கள் குழந்தைகளின் மகிழ்ச்சியைக் காண தங்கள் முதிர்ந்த வயதையும் மறந்து அவர்கள் மத்தியில் கைகூப்பிய வண்ணம் நின்று கொண்டிருந்தனர். மக்கள் எல்லாம் மனதாரப் போற்றிப் பாராட்டுவதைவிட ஒருவர் வாழ்க்கையில் வேறு என்ன வேண்டும்? மக்கள் ஒருவர்பின்

ஒருவராக வந்து கைகூப்பிய வண்ணம் நின்று கொண்டிருந்த வேலனையும் வேலம்மாளையும் வணங்கிய வண்ணம் சென்று கொண்டிருந்தனர்.

வேலனும் வேலம்மாளும் பல்லாண்டு வாழ கோயில்களிலும், சர்ச்சுகளிலும் மசூதிகளிலும் பிரார்த்தனைகள் நடந்தன. கோயில்களின் கண்டாமணிகள் "வேலன் வாழ்க!" என்று வாழ்த்துவது போல 'டாண்!' 'டாண்!' என்று முழங்கின. அதன் ஓசை நாலாபுறமும் சிதறி ஒலித்தது. வான வெளியில் சூரியன் பிரகாசித்தது. ஆயிரம் ஆயிரம் அநாதை மக்களின் முகமும் ஏழைகளின் உள்ளமும் மலர்ந்தன.........

UNIVERSITY LIBRARY
31 MAY 1957
MADRAS

UNIVERSITY EXTENSION
LIBRARY, MADURAI

Univ. Grants Commission.

1364
031:3
J6

UNIVERSITY EXTENSION LIBRARY
16 DEC 1957

# எங்களிடம் கிடைக்கும் புத்தகங்கள்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| **அமரர் கல்கி** | | |
| கள்வனின் காதலி | 4 | 8 |
| **பகீரதன்** | | |
| தேன் மொழியாள் | 3 | 8 |
| உழைப்பால் உயர்ந்த ஏழை | 2 | 4 |
| முல்லை வனத்து மோகினி | 1 | 8 |
| குயிலினி | 2 | 8 |
| **க. கணபதி** | | |
| வாழ்வு மலர்ந்தது | 2 | 0 |
| கசக்கிய மொட்டு | 1 | 8 |
| மனைவியைப் பற்றி | 1 | 0 |
| **அ. டேவிட் பிச்சை** | | |
| யார் மனிதன்? | 3 | 0 |
| பணிப் பெண் | 2 | 0 |
| **தோ. ந. வீரராகவன்** | | |
| மகாத்மா புத்தர் | 1 | 8 |
| மனைமாட்சி | 1 | 4 |
| இன்ப வாழ்க்கை | 1 | 8 |
| **டி. என். ராமச்சந்திரன்** | | |
| நமது சரித்திர பாரம்பர்யம் | 2 | 0 |
| சிந்தனைவாதிகளின் சத்திய சாதனை | 0 | 12 |
| காதலி — செக்காவ் | 3 | 0 |
| மீளாத காதல் — கார்க்கி | 1 | 0 |
| பாட்டுக் கொரு புலவன் — மயிலன் | 1 | 4 |
| திருமணப் பரிசு (தொகுப்பு) | 2 | 8 |
| குறள் வழி ,, | 0 | 8 |
| கவிகள் கண்ட கனவு ,, | 0 | 10 |
| பாரதியின் காதற் கவிதைகள் | 1 | 0 |
| குயில் | 0 | 6 |

**கலைஞன் பதிப்பகம்**

தியாகராயநகர் :: சென்னை-17